

பூமிக்கு வந்த
நிலவே
நீலா மணி
சுபம் வெளியீடு

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பூமிக்கு வந்த நிலவே |
| ஆசிரியர் | : | நீலா மணி |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 200 |
| முதற்பதிப்பு | : | மார்ச் 2016 |
| வெளியிடுவோர் | : | சுபம் பப்ளிகேஷன்ஸ் |
| தாளின் தன்மை | : | 11.6 Kg வெள்ளைத்தாள் |
| அச்சிடுவோர் | : | பாரதி அச்சகம் |
| கணினி அச்சு | : | சிருஷ்டி லேசர் |

| | | |
|---|---|---|
| Title | : | Boomikku Vantha Nilave |
| Author | : | Neela Mani |
| Language | : | Tamil |
| First Edition | : | March - 2016 |
| Published & Distributed by | : | **Subam Publications,** 15, Manigandan 5th Street, (Near GRT) Old Washermenpet, Chennai -600 021. **Cell:9443142544** |


All Rights Reserved. This book or parts thereof, may not be reproduced in any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the author & publisher.

**விலை : ₹.100/-**

# முன்னுரை

அன்புள்ள வாசகர்களுக்கு!

வணக்கம். நானும் உங்களைப் போல முதலில் ஒரு வாசகிதான். பலருடைய எழுத்துகளுக்கு விசிறி. இப்போது எனக்குப் பிடித்ததை, என்னைப் பாதித்ததை கதை வடிவாக உங்களுடன் படைக்கிறேன்.

என்னுடைய முதல் கதையான **''காதலெனும் தேர்வெழுதி''** என்ற நாவலைப் படித்த பலரும் இணைய, சமூக வலைத்தளங்களில் எழுதியிருந்த பாராட்டுகளைப் படித்தேன். உங்களது ஊக்கமான வார்த்தைகளுக்கும், ஆதரவுக்கும் மிக்க நன்றி!.

இப்போது **'பூமிக்கு வந்த நிலவே'** என்ற என் இரண்டாவது கதைதயை உங்களுக்கு வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து உங்களுடைய பேராதரவை எதிர்பார்க்கிறேன்.

உங்களுடைய மேலான கருத்துக்களை **neelamani.writer@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என் கதைகளுக்காக சிறந்த முறையில் அட்டை வடிவமைத்து, பதிப்பித்து வரும் சுபம் பதிப்பகத்தாருக்கு என் மனமார்ந்த நன்றி!

என் போன்ற பல புது எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், **தொடர்ந்து நல்ல படைப்புகளைப் பிரசுரம் செய்து, வாசகர்களின் நன்மதிப்பைப்** பெற்றிருக்கும் சுபம் பதிப்பகம் மேன்மேலும் வளர, எனது மனமார்ந்த வாழ்த்துகள்!

இப்படிக்கு,

**நீலா மணி**

# பூமிக்கு வந்த நிலவே

## 1

**வி**னாத்தாளில் இருந்த கடைசி கேள்விக்கும் விடையெழுதிவிட்டு பேனாவைக் கீழே வைத்த தான்யா, மணியைப் பார்த்தாள். இன்னும் தேர்வு நேரம் முடிய அரை மணி நேரம் இருந்தது. நிதானமாக விடைத்தாளை ஒருமுறை புரட்டிப் பார்த்து விடலாம் என்ற நிம்மதியுடன் முதல் பக்கத்தில் இருந்து விடைகளைச் சரி பார்த்தாள் தான்யா.

தான்யா என்கிற தான்யலஷ்மி, மும்பையின் புகழ் பெற்ற பெண்கள் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. தாவரவியல் மாணவி. இரண்டாமாண்டின் இறுதித் தேர்வை இன்றுடன் முடித்து விடுவாள். அதன் பிறகு ஆறு மாதங்கள் களப்பணி (field work) செய்துவிட்டு ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தால், அவளுடைய

படிப்பு முடிந்து விடும். பொதுவாக, எங்குமே இந்த மாதிரியான களப்பணிகள் பாடத் திட்டத்தில் இருக்காது.

ஆனால், இவர்களுடைய கல்லூரியில் மட்டும் இதுபோன்ற செய்முறைகள் (practicals), களப்பணி என்று மாணவர்கள் நேரடியாகக் கற்கும் வழியிருப்பதால், இந்தக் கல்லூரிக்கு மவுசு அதிகம்.

பேப்பரைக் கொடுத்து விட்டு வெளியே வரும்போதே, தான்யாவிற்கு உற்சாகமாக இருந்தது. இருக்காதா பின்னே? அவளுடைய கனவு, இலட்சியம், வாழ்க்கையின் குறிக்கோளான மூலிகைப் பண்ணையை அமைக்கும் இலக்கை நோக்கி நெருங்கிப் போய்க் கொண்டிருக்கிறாளே!

அவளுடைய தோழிகள் கூட்டத்தை அடைந்த போதே, வழக்கம் போல மற்றவரை எப்படித் தேர்வெழுதினர் என்றும், தெரியாத கேள்விகளுக்கு என்ன விடையென்றும், பல குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

தான்யாவும் அந்த ஜோதியில் ஐக்கியமானவுடன், ‘‘என்ன தான்யா? நீ எப்படி எழுதியிருக்க? அந்த ஐந்து மார்க் கேள்வியில் ரெண்டாவது கேள்விக்கு, உனக்கு பதில் தெரிஞ்சுதா?’’ என்று ஷர்மிளா பரபரப்புடன் கேட்டாள்.

அதற்குள் ஜூபலி, ‘‘ஏய் ஷர்மி! ஆரம்பிச்சுட்டியா உன் ரம்பத்தை? எல்லாரையும் அந்தக் கேள்விக்குப் பதில் தெரிஞ்சுதான்னு கேட்டுக் கேட்டு, நீ கேள்வியின் நாயகி ஆயிடுவே போலிருக்கே! தான்யாவைப் பத்தி

உனக்குத் தெரியாதா? அவ இன்னொரு ஜகதீஷ் சந்திரபோஸ், நம்மாழ்வார்னு... உனக்குத் தெரியும் தானே? அவளைப் போய், இந்தக் கேள்வியைக் கேக்கறியே!'' என்று தான்யாவின் புகழைப் பாடினாள்.

அவள் பதில் பேச வாயைத் திறக்குமுன், ''ஏன் தான்யா? நாங்க தான் வேற வழியில்லாம, இந்தச் செடியையும் கொடியையும்... விதியை நொந்துகிட்டு படிக்கிறோம். உனக்கென்னடி தலையெழுத்து? பாக்க செம லுக் ஆ இருக்க; உங்கப்பாவே பிரபலமான ஆக்டர்.

ஜாலியா... ஷாருக் கான், சல்மான் கான்னு டூயட் பாடறத விட்டுட்டு, ஏன் இங்க வந்து கஷ்டப்படற?'' என்று ராதிகா அங்கலாய்க்கவும், தான்யா ஜூலியின் பக்கம் திரும்பி, 'ரிபீட்!' என்று சொல்லவும், கூட்டமே கொல்லென்று சிரித்தது.

முன்பு இதே கேள்வியை விதவிதமாக அவர்கள் கேட்டதற்கு தான்யா சொன்ன பதில் தான், அவர்கள் எல்லோருக்கும் தெரியுமே!

அவர்கள் சொன்னது போல, தான்யா ரொம்பவே அழகாகயிருந்தாள். நல்ல சிவந்த நிறம். பெரிய கண்கள். அளவான மூக்கு. செதுக்கியது போன்ற உதடுகள். மெலிந்த உடல். அளவான உயரம் என்று அவளுடைய தோற்றத்தில் எல்லாமே ப்ளஸ்ஸாக மட்டுமே இருந்தன.

அவளுடைய அப்பா பலராம், இந்தித் திரையுலகில் ஒரு மரியாதைக்குரிய நடிகர். புகழ்பெற்ற நடிகர்களான தர்மேந்திரா, சத்ருகன் சின்ஹா, அமிதாப்பச்சன் போன்ற முன்னணி நடிகர்களுடன்,

பலராமும் இந்தித் திரையுலகில் ஒரு மைல் கல் என்று சொல்லுமளவிற்கு, பல படங்களில் நடித்து தம் முத்திரையைப் பதித்தவர்.

இன்னமும் நடித்துக் கொண்டிருப்பவர். தற்போது பல நடிகர்களின் வாரிசுகள் சினிமாவில் அறிமுகமாகும் போது, தான்யாவிற்கு மட்டும் ஏன் அதில் ஆர்வமில்லை என்பதே அவளுடைய தோழிகளின் தாளமுடியாத வியப்பு.

அதிலும், அவர்களின் கனவு ஹீரோவான ஹிரித்திக் ரோஷனுடன் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்த போது, அவர்கள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அதை வேண்டாம் என்று தான்யா மறுத்ததும், அவர்கள் அவளை 'பைத்தியக்காரி' என்றே முடிவு கட்டி விட்டார்கள்.

ஆனால் தான்யாவின் விருப்பம், நடிப்பில் இல்லையே! இன்னும் சொல்லப் போனால், அவள் தன்னை நடிகர் பலராமின் மகள் என்பதையே முடிந்தவரை வெளிக்காட்ட மாட்டாள். அவளுடைய இலட்சியம், விருப்பம் எல்லாம் வேறு என்பது, இவர்களுக்கு எப்படித் தெரியும்?

இதோ, இன்றைய தேர்வோடு அவள் தன் இலட்சியத்தை நெருங்கி விட்டாளே! இன்னும் ஆறு மாதங்கள் பொறுமையாக இருந்தால், அதன் பின் அவள் இலட்சியம் நிறைவேறிவிடும்.

'நிறைவேற்றுகிறேன்' என்று அவளுடைய அப்பா வாக்குறுதி கொடுத்திருக்கிறாரே!

இதை விட்டு விட்டு, இந்தச் சினிமா, மாடலிங் இதிலெல்லாம் ஆர்வமுடன் அவளுடைய தங்கை அன்னா இருக்கும்போது, அதில் கொஞ்சம் கூட ஈடுபாடு இல்லாத அவளிடம், அனைவரும் திரும்பத் திரும்ப இதே கேள்வியைக் கேட்பது முன்பெல்லாம் சிரிப்பாக இருந்தது. ஆனாலும், இப்போதும் அதையே கேட்டுக் கொண்டிருப்பது, எரிச்சலாக இருந்தது அவளுக்கு.

அதோடு, சினிமா என்பது குலத்தொழிலா என்ன? அப்பா செய்வதையே, பிள்ளைகளும் பரம்பரைத் தொழிலாகச் செய்வதற்கு? இப்போதெல்லாம், தான்யா இது போன்ற கேள்விகளுக்கு பதிலே சொல்வதில்லை. ஒரு புன்னகையை மட்டுமே பதிலாகத் தருவாள்.

சினிமா பார்ப்பது, தோழிகளோடு பார்ட்டிக்குப் போவது, ஊர் சுற்றுவது என்ற எதுவுமே அவளுக்குப் பிடிக்காது. அவளுக்கு அவற்றில் கொஞ்சமும் விருப்பமுமில்லை.

அவளுடைய தாய் ராஜலஷ்மி விதவிதமான உடைகளையும் நகைகளையும் அவளுக்கு பொருத்தமாக இருக்கும் என்று வாங்கிக் கொடுத்திருந்தாலும், அவள் அவற்றை எடுத்துப் பார்த்தது கூட இல்லை. அவையெல்லாம் பீரோக்களில் தூங்கிக் கொண்டிருக்கின்றன என்றே சொல்லலாம்.

எப்போதுமே அவளை லெக்கின்ஸ் அல்லது ஜீன்ஸில் பார்க்கலாம். மேலே ஒரு ஷர்ட் அல்லது டாப்ஸ்... காதில் குட்டி வைரங்கள் பதித்திருக்கும் சின்ன

பிளாட்டினம் வளையம்... கழுத்தில் மெல்லிய பிளாட்டினத்திலான சங்கிலி. அதில் நீலக்கல் பதித்த டாலர். அவளுடைய பெற்றோர் அவளது பதினெட்டாவது பிறந்தநாள் பரிசாகக் கொடுத்திருந்ததால், அது கழுத்தில் இருந்தது.

அதற்கு முன்னால் அதுவுமில்லை. இடது கையில் கறுப்பு ஸ்ட்ராப்புடைய ஃபாஸ்ட் டிராக் கைக்கடிகாரம். வலது கையில் மெல்லிய ப்ளாட்டினம் ப்ரேஸ்லெட்; அதுவும் தங்கம் கிடையாது. தான்யா எளிமையாக இருந்தாலும், முகத்தில் ஒரு கம்பீரமான அழகு இருந்தது.

இந்தப் பிளாட்டினம் நகைகளும், பார்க்க வெள்ளி நகைகள் போல இருந்ததால், அவள் ரொம்ப எளிமையாக இருப்பது போன்ற தோற்றமளித்தாள். டாட்டூ, நெயில் பாலிஷ் என்ற எதுவுமே அவளுக்குப் பிடிக்காது. அதிலும், மேக்கப் அறவே பிடிக்காது. நெற்றியில் உள்ள ஒரு சிறு பொட்டு தான் அவளது அலங்காரமே! அதைக் கூட, அம்மா திட்டியபடியே இருந்ததால்தான் வைக்க ஆரம்பித்திருந்தாள்.

# 2

**அ**ன்று காலை கண் விழித்ததிலிருந்தே, தான்யாவிற்கு உற்சாகமாக இருந்தது. அவளுடைய இலட்சியத்தின் கடைசிக் கட்டத்திற்கு வந்து விட்டாளே!

தேர்வு முடிந்து பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன; இன்று அவள் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சின்ன மாங்குடிக்குக் கிளம்ப வேண்டும்.

மும்பையிலிருந்து திருச்சி வரை விமானப் பயணம். அதன் பிறகு காரில் சின்ன மாங்குடிக்குச் சென்று விடலாம். நேற்றே, ஊருக்குப் போகத் தேவையானவற்றை எடுத்து வைத்தாகிவிட்டது. இதோ குளித்து முடித்து, காலை உணவையும் சாப்பிட்டாகிவிட்டது.

கிளம்ப வேண்டியது தான் பாக்கி. சின்ன மாங்குடிக்குக் கொண்டு போய் விடுவதற்காக, அப்பாவின் மேனேஜர் சிவராமனும் கூட வருகிறார். அவர் பணியாளர் என்பதை விட, அப்பாவின் நண்பர் என்பதால், அவர்கள் குடும்பத்துக்கும் நெருக்கமானவர் தான்.

தான்யாவின் வாழ்நாள் இலட்சியமே ஒரு விவசாயப் பண்ணையை அமைப்பதும், அதன் மூலம் செடிகளின் பயன்பாடுகள், வளர்ப்பு முறைகள், இயற்கை உரங்களை உற்பத்தி செய்தல், மூலிகைச் செடிகளின் மருத்துவக் குணங்கள் குறித்த ஆய்வு நிறுவனத்தையும் நடத்துவதுதான். சிறு வயது முதலே, அவளுக்குச் செடி கொடிகள் மீது அதிக ஈடுபாடு இருந்தது.

பொதுவாகக் குழந்தைகள் தாங்கள் பார்க்கும் வாகனங்கள், வண்ணங்களின் பெயர்களைச் சொல்வது போல், அவள் செடிகளை எளிதாகக் கண்டு கொள்வாள். சிறுவயதில் அவளுக்குப் பிடித்த முக்கியமான இடமே

தாவரவியல் பூங்காதான். அங்கே சுற்றிச்சுற்றி வந்து, ஒவ்வொரு மரத்தின் அமைப்பையும் கவனிப்பாள். அந்த இலைகளின் அமைப்பு, பூவின் வண்ணம், தோற்றம், எனப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பரவசமாகிவிடும். துணைக்குக் கூட வரும் நானி (ஆயா) போரடித்துப் போய், ஒரு மரத்தடியில் உட்கார்ந்து விடுவாள்.

இலைகளில் தான் எத்தனை அமைப்புகள்? வட்டமாக, நீள் வட்டமாக இன்னும் பெயர் சொல்ல முடியாத எத்தனை விதவிதமான வடிவங்கள்! வண்ணத்திலும் எத்தனை வேறுபாடு! பெரும்பாலான இலைகளின் நிறம் பச்சைதான். ஆனால், அதற்குள்ளும் எத்தனை விதமான வேறுபாடுகள்?

வெளிர் பச்சை, கரும் பச்சை, சிவப்பு கலந்த பச்சை, மஞ்சள் கலந்த பச்சை, பல வண்ணங்கள் கலந்த பச்சை என, ஒரு செடியின் இலைக்கும், மற்றொரு செடியின் இலைக்கும் இடையே எத்தனை வேறுபாடுகள்? பூங்காவில் தரையில் உதிர்ந்து இருக்கும் இலைகளை மட்டும் எடுத்துச் சேகரித்து, (பறிப்பதற்கு அவளுக்கு மனம் வராது) வரிசையாக அடுக்கி, அவற்றினிடையே உள்ள வேறுபாடுகளை உன்னிப்பாகக் கவனிப்பாள் தான்யா.

இலைகளின் நடுவே ஓடும் கோடுகள் கூட விதவிதமாக இருப்பதில் அவளுக்கு மிகவும் வியப்பே! பூக்களைப் பார்த்து விட்டால் அவ்வளவு தான்! அந்த இடத்தை விட்டு நகரவே மாட்டாள். வருடா வருடம் ஊட்டியிலும், கொடைக்கானலிலும், மலர்க் கண்காட்சி

அவளில்லாமல் நடந்ததேயில்லை எனலாம். நாள் முழுவதும், அந்தச் செடிகளை சுற்றி வந்தபடியே இருப்பாள்.

அவள் வீட்டில் உள்ளவர்கள் வேறு இடங்களுக்குப் போகலாம் என்றாலும், அவள் வர மறுத்து விடுவாள். அதனால்தான், மற்றவர்களைப் போல பி.எஸ்.சி, எம்.எஸ்.சி. பாட்டனியைக் கடமையாக மட்டும் படிக்காமல், விரும்பிப் படிக்க முடிந்தது அவளால்.

அவளுடைய வீட்டின் முன்னால் உள்ள பெரிய தோட்டம் தான் அவளது பரிசோதனைக் கூடம். ஒரு புறத்தில் அவளுக்கு மிகவும் பிடித்த ரோஜாத் தோட்டம். பல வண்ணங்களில் ரோஜாக்கள். வெள்ளை, வெளிர் மஞ்சள், மஞ்சள், ரோஸ், சிவப்பு என அவற்றுடன் ஒட்டுச் செடிகளும் உண்டு.

அதன் பக்கத்தில் காய்கறித் தோட்டம். வெண்டை, கத்திரி, மிளகாய் என எல்லாச் செடிகளும் உண்டு. அருகில் கொடி வகைகள்-புடலங்காய், பாகற்காய், பூசணி... இப்படி ஆங்காங்கே மா, சப்போட்டா, மாதுளை என்று பழ மரங்களும் உண்டு. ஒரு இடத்தில் தனியாக துளசி, கருந்துளசி, கற்பூரவள்ளி என்று மூலிகைச் செடிகளும் உண்டு.

ஏன் ஒரு சமயம் அந்தத் தோட்டத்திலேயே நெல்லைக் கூட விதைத்துப் பார்த்திருக்கிறாள். கல்லூரிக்குப் போகும் நேரத்தைத் தவிர முழு நேரமும் அவள் இருப்பது, அந்தத் தோட்டத்தில் தான்.

அது ஒரு வித்தியாசமான இலட்சியம் என்றாலும், அவளுடைய விருப்பம் அதில் மட்டுமே லயித்திருப்பதைப் புரிந்து கொண்டதால், மகளுக்கு நாற்பது ஏக்கரில் பண்ணைக்கான நிலம் வாங்கித் தருவதாக பலராம் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

ஆனால், அதற்கு அவர் விதித்த நிபந்தனை ஒன்றே ஒன்றுதான். அதாவது, வெறும் படிப்பறிவின் அடிப்படையில் மட்டுமே அதைத் தொடங்காமல், குறைத்தபட்சமாக ஆறு மாதங்களுக்கு எங்காவது வேலை செய்து அனுபவ அறிவைப் பெற்ற பின்பே, மகள் அதைத் தொடங்க வேண்டும் என்பதுதான்.

அப்பா சொன்னது மகளுக்கும் சரியாகவே பட்டது.முதலில் அவள் எம்.எஸ். சுவாமிநாதன் ஃபவுண்டேஷனிலோ, அல்லது நம்மாழ்வாரிடமோ சேரலாம் என்று தான் நினைத்திருந்தாள்.

அத்தோடு, நாராயணமூர்த்தி எனும் மூலிகை மருத்துவரிடம் சேர்ந்து பயிற்சி பெற வேண்டுமென்று கூட நினைத்தாள். அவரைப் பற்றி அவள் இணையத்தின் மூலமாகத்தான் கேள்விப்பட்டிருந்தாள்.

கர்நாடகாவில் இருக்கும் ஒரு சிறு கிராமத்தில் வசிக்கும் விவசாயியான அவரைத் தேடி, ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனராம். அவர்கள் கூறும் நோயின் தன்மைக்கேற்ப தன்னுடைய தோட்டத்திற்குச் சென்று மரப்பட்டையையோ, இலையையோ பறித்துத் தருவாராம்.

அதை மருந்தாகச் சாப்பிட்டால், கடைசி

நிலையிலுள்ள கேன்சர் கூட குணமடைகிறதாம். இணையத்தில் அவருடைய பெயரைச் தேடினாலே, அதில் பலர் அவரிடம் பெற்ற அனுபவங்களைப் பார்க்கலாம். அவற்றையெல்லாம் படித்த தான்யாவிற்கு, அவரிடம் பயிற்சி பெறலாம் என்ற யோசனை எழுந்தது.

இப்படி பல இடங்களையும் யோசித்து விட்டு, ஆலோசனைக்காக அவளுடைய பேராசிரியர் மூர்த்தியை அணுகினாள். தான்யாவின் விருப்பத்தை அவரும் அறிவார். வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமில்லாமல், உண்மையிலேயே தாவரவியலை விரும்பிப் படித்து, கல்லூரியிலேயே முதல் மாணவியாக இருக்கும் அவளுக்கு உதவ அவருக்கும் விருப்பமே.

அவளுக்கு பூமிநாதனை சிபாரிசு செய்ததோடு மட்டுமில்லாமல், அவனிடம் பேசி, அவள் அங்கு சென்று பயிற்சியெடுக்க ஏற்பாடும் செய்தார். மேலும், அவனது வீட்டிலேயே தங்கவும் வழி செய்ததும் அவரே.

விவசாயத்தில் ஆய்வு செய்து டாக்டரேட் பட்டம் பெற்றதோடு மட்டுமல்லாமல், பல விருதுகளையும் பெற்று உலகளவில் புகழ்பெற்ற விவசாய விஞ்ஞானிதான் பூமிநாதன். இந்தியா போன்ற விவசாய நாட்டிற்கு, கணிணி என்ஜினியர்களை விட, அவனைப் போன்ற விவசாய வல்லுநர்கள்தான் இன்றைய சூழலில் அதிகம் தேவை.

பணத்திற்காக விளைநிலங்களைத் தரிசாக்கி, ப்ளாட் போட்டு விற்று வருவது பெருகி வரும் இந்தக்

காலத்தில், விவசாயத்தை இலாபகரமாக செய்வது அவனுடைய நோக்கமாக இருந்தது.

பேராசிரியர் மூர்த்தியின் ஆலோசனையைத் தந்தையிடம் சொன்ன தான்யா, சின்ன மாங்குடியில் பூமிநாதன் நடத்தி வரும் ஆய்வில் கலந்து கொள்ளவும், அங்கு சென்று தங்கிப் பயிற்சி எடுக்கவும் அனுமதி கேட்டாள்.

பலராம் பல வருடங்களாக மும்பையில் வாழ்ந்து, திரையுலகில் பழகினாலும், உடனே அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. தன் வழியில் பல விதமாக விசாரித்தார். அந்த நேரத்தில் அவருக்கு கிடைத்த தகவல் அவரைச் சம்மதிக்க வைத்தது. அவர் சம்மதித்து விட்டாலும், ராஜலஷ்மிக்கு இதில் உடன்பாடில்லை.

வயது வந்த தன்னுடைய பெண்ணை, முன்பின் தெரியாத ஒருவரது வீட்டில் ஆறு மாதங்கள் தங்க வைப்பதில், கொஞ்சம் கூட பிடித்தமில்லை அவருக்கு. தான்யாவிற்கும் இருபத்திமூன்று வயதாகிவிட்டதால், நல்ல இடமாகப் பார்த்து, உடனடியாகக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம் என்பதுதான் அவரது கருத்து.

அதனால், ''என்ன வேண்டியிருக்கு இந்தச் செடியும், கொடியும்?'' என்று கோபப்பட்டார்.

பலராம் என்ன பேசினாரோ... வேண்டா வெறுப்பாகவே தான்யா ஊருக்குப் போக சம்மதித்தார்.

* * *

தான்யா திருச்சி விமான நிலையத்திலிருந்து வெளியே வந்தபோது, புதுக்கோட்டை வழியாகச் சின்ன மாங்குடி செல்வதற்காக, பென்ஸ் கார் ஒன்று தயாராக இருந்தது. தமிழ்நாட்டின் இந்தப் பகுதிகளுக்கு அவள் வருவது இதுதான் முதன்முறை என்பதால், ஜன்னல் வழியே வெளியே வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள்.

மதிய உணவை விமானத்திலேயே உண்டு விட்டதால், கார் எங்கும் நிற்காமல் போய்க் கொண்டிருந்தது. அப்போது ஏப்ரல் மாதக் கடைசி என்பதால், வெயில் சுட்டெரித்தது. காரில் ஏசி போட்டிருந்தபோதும், கொஞ்சம் வெப்பத்தின் தாக்கம் இருந்தது. வழி நெடுக, பயிர்கள் காய்ந்த நிலையில் இருந்த்தைக் கண்டு, அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவள் தான் தாயுமானவரைப் போல, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுபவளாயிற்றே!

கொஞ்ச நேரத்தில் அவளது சிந்தனை பூமிநாதனை நோக்கித் திரும்பின. அவனிடத்தில் தான் வேலை கற்கப் போகிறோம் என்று தெரிந்ததும், இணையத்தில் அவனது பெயரை அடித்துத் தேடியபோது அவனுடைய புகைப்படம் கிடைத்தது. ஏதோ ஒரு கான்பரன்ஸுக்காக எடுத்தது போலும். வண்ணப் புகைப்படமாக இருந்ததால், பார்த்ததுமே அவன் மாநிறம் என்பது தெரிந்தது.

அந்தப் புகைப்படம் முகத்தை மட்டுமே காட்டுவதாக இருந்தது. அவனுடைய கண்களைப் பார்த்தவளுக்கு, சற்று நேரம் வேறெங்கும் பார்க்கவே

முடியவில்லை. மனதை ஊடுருவிப் பார்க்கும் பார்வையே, அவனுடைய இயல்பான பார்வையாக இருந்தது. நீண்ட, கூர்மையான மூக்கு. கீழே கட்டையான மீசை. மெலிதாகத் தடித்திருந்த உதடுகளில், ஒரு பிடிவாதம் தெரிந்தது. பார்க்கும்போது அவனுடைய வயது இருபத்தி எட்டிலிருந்து முப்பது வரை இருக்கலாமெனத் தோன்றியது.

தான்யாவிற்கு அவன் முகத்தைத் தொடர்ந்து, 'அவன் பழகுவதற்கு எப்படியிருப்பான், அவன் வீடு எப்படியிருக்கும், வீட்டில் யார் யாரெல்லாம் இருப்பார்கள்' என்று சிந்தனை ஓடியது. அவன் வீட்டிலேயே தங்குவதற்கு அப்பா ஒத்துக்கொண்டதால், நிச்சயம் அந்த இடம் பாதுகாப்பானதாகத் தான் இருக்குமென்று நினைத்தாள்.

அதோடு, அந்த ஊர் கிராமமாக இருப்பதால், வேறு வழியும் இல்லையே! அம்மாவிற்குத் தான், இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனால், அப்பா என்ன சொன்னாரென்று தெரியவில்லை... கடைசியில் அம்மாவும் ஒத்துக்கொண்டு விட்டார்களே! அதுவுமில்லாமல், ஏதாவது பிரச்சனையென்றால் உடனே ஊருக்குத் திரும்பிப் போகவோ, தொடர்பு கொள்ளவோ, எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே!

அதனால், தங்குமிடத்தைப் பற்றிய கவலையை விட்டுவிட்டு, தான் தெரிந்து கொள்ள வேண்டிய, கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்ககளைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள் தான்யா.

# 3

**கா**லையில் கண் விழிக்கும் போதே, பூமிநாதனுக்கு இன்று வரப்போகும் புது விருந்தாளியைப் பற்றிய நினைவு வந்தது. கூடவே, எரிச்சலும் வந்தது. இருக்காதா பின்னே? 'தான் பாட்டுக்கு, தான் உண்டு... தன் வேலையுண்டு... ஆராய்ச்சியுண்டு... என்று தன் கிராமத்தில் இருந்தால், எங்கேயோ மும்பையிலிருந்து ஒரு பெண் வருவாளாம்... அவளுக்கு விவசாயம் கற்றுக் கொடுக்க வேண்டுமாம்!

நடிகருடைய மகளுக்குப் பொழுது போகவில்லையென்றால், ஏதாவது மாடலிங், சினிமா, பார்ட்டி என்று போகவேண்டியது தானே? அதை விட்டுவிட்டு பொழுதுபோக்க விவசாயம் தானா கிடைத்தது? அதுவும் அவளைத் தன் வீட்டிலேயே தங்க வைக்க வேண்டுமாம்.'

அதனால், வேண்டுமென்றே அவள் தங்குவதற்காகவென்று, எந்தப் புது வசதியையும் ஏற்பாடு செய்யவில்லை. அவள் வந்தவுடனே இந்த ஊரையும் வீட்டையும் பார்த்துவிட்டு, கஷ்டம் தாங்காமல் ஓடிவிட வேண்டுமென்று ஒரு நப்பாசை! பின்னே! முடியாதென்று சொல்ல முடியாதபடி, அவனது வாயைத்தான் கட்டிவிட்டார்களே!

அவன் பெரிதும் மதிக்கும் பேராசிரியர் மூர்த்தி

கேட்டபோதே முதலில், ''முடியாது!'' என்றுதான் சொன்னான். மும்பையில் பெரிய கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் அவர் மூலமாக, விவசாயம் தொடர்பான பல நல்ல யோசனைகளைப் பெற்றிருக்கிறான். பல ஊர்களில் விவசாயம் தொடர்பான கான்பரன்ஸ்களில் அவரைச் சந்தித்து, நல்ல நட்புடனும் இருந்தான்.

அதனால், அவர் இந்த வேண்டுகோளைச் சொன்னவுடன், அவர் மிகவும் நெருங்கிய நண்பராக இருந்தபோதும், மறுக்கவே செய்தான். ஒரு பெரிய நடிகரின் மகளுக்காகக் கேட்கிறேன் என்று அவர் சொன்னபோது கூட, அவன் யோசிக்கவில்லை. அவனுக்கு இருந்த ஆயிரம் வேலைகளில், இதற்கெல்லாம் அவனிடம் நேரமும் இல்லை; தவிர, பொறுமையும் இல்லை.

ஆனால், அவர் அதோடு விட்டுவிடாமல் பெரிய அணுகுண்டு ஒன்றைப் போட்டார். 'அதைக் குண்டு என்று சொல்ல முடியாது; ஒருவேளை, இன்ப அதிர்ச்சி என்று சொல்லலாமா?' என்று இன்னும் அவன் முடிவு செய்யவில்லை. அது என்னவென்றால், பூமிநாதன் தன் மகளுக்குச் சரியான பயிற்சியளித்தால், ஒரு கோடி ரூபாயை அவனுடைய திட்டங்களுக்கோ அல்லது ஆராய்ச்சிக்கோ தருவதாகக் கூறியிருந்தார் நடிகர் பலராம்.

ஒரு கோடி ரூபாய் இருந்தால் எவ்வளவு செய்ய முடியும்? சின்ன மாங்குடியிலே ஒரு சிறிய

மருத்துவமனையைக் கட்ட முடியும். இங்குள்ள மாணவர்கள் பயில ஒரு பொதுவான படிப்புக் கூடத்தைக் கட்ட முடியும். அதில், அவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சியும் கொடுக்க முடியும். அவன் ஆராய்ச்சிக்காக வைத்திருக்கும் இரண்டு ஏக்கர் நிலத்தை நன்றாக விரிவுபடுத்தி, இன்னும் பல ஆய்வுகளைச் செய்ய முடியும். இப்படி, ஒரு கோடி ரூபாய்க்கு ஓராயிரம் திட்டங்களும், தேவைகளும் இருந்தன அவனுக்கு.

'சரி, ஒரு ஆறு மாசம் தானே... சகிச்சுக்குவோம்' என்று வேண்டா வெறுப்பாக ஒத்துக் கொண்டான். 'இதோ இப்போது வந்தும் விட்டாளே! இன்று மாலை இங்கு இருப்பாளே! அவள் தன் பணத் திமிரைக் காட்டினால், தட்டி வைக்க வேண்டியது தான்!' என்று மனசுக்குள் முடிவு செய்து கொண்டான்.

குளித்து முடித்து வேட்டி சட்டையுடன் கீழே இறங்கும்போது காலை மணி ஆறு. அன்று வரிசையாக இருந்த வேலைகளை மனதுக்குள் பட்டியலிட்டபடியே கீழே இறங்கியவன், 'ஆச்சி!'' என்று அழைத்தபடி தன் அப்பத்தாவைத் (அப்பாவின் அம்மா) தேடி சமையறைக்குள் நுழைந்தான்.

அப்பத்தா அவன் முகத்தைப் பார்க்கும்போதே முக மலர்ச்சியுடன் சிரித்தார். வயது அறுபத்தி ஐந்தைத் தொட்டாலும், எல்லா வேலையையும் அவரே தான் செய்வார். அந்த வீட்டில் இருப்பதே இரண்டு பேர்தான் எனும்போது, எதற்கு உதவியாட்கள் என்பது அவரது எண்ணம். கடந்த ஆறுமாதங்களாக அவரை

வற்புறுத்திய பின்னர், சற்றுக் கடினமான வேலைகளைச் செய்ய, சிகப்பியை வேலைக்குச் சேர்த்திருந்தான்.

பூமிநாதன் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்டதால், அவனுக்கு எல்லாமே அப்பத்தாதான். எல்லோரும் அவரை வள்ளி ஆச்சி என்று அழைத்ததால், அவனும் அப்படியே பழகிக் கொண்டான்.

அவர்கள் வீட்டில், காலையில் காஃபி குடிக்கும் பழக்கமில்லை. கம்பங்கூழ் தான். நாள் முழுவதும் கடினமான உழைப்பு தேவைப்படும் வயல் வேலையைச் செய்ய ஏற்ற உணவு கம்பங்கூழ் தான்.

சின்ன வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கி, உப்பு போட்டு அதனுடன் மோரும் சேர்த்து, ஒரு பெரிய பாத்திரத்தில் இளஞ்சூடாக அவனுக்காக் காத்திருந்தது. இருவருமாக ஆற அமரப் பேசும் நேரம், இந்த நேரம் தான். இதன்பிறகு பூமிநாதன் கிளம்பினால், பின்பு இரவு உணவுக்குத் தான் வீட்டுக்கு வருவான். மதிய உணவை, அவன் இருக்கும் இடத்துக்கே அனுப்பிவிடுவார் ஆச்சி.

கஞ்சியைக் கிண்ணத்தில் ஊற்றிக் குடித்தபடியே 'ஆச்சி! இன்னிக்குத் தான், பம்பாயிலிருந்து அந்தப் பொண்ணு வருது. முடியாதுன்னு, நான் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன்; ஆனா, அவுக நம்ம ஊருல நல்ல காரியத்துக்காக ஒரு கோடி ரூவா பணம் தராக. ஆனாக்க, உங்களுக்கு தான் இதுனால தொல்லை!'' என்று சலிப்பாகச் சொன்னான்.

''அதைப் பத்தியெல்லாம் கவலப்படாத ராசா! அந்தப் புள்ள வந்தா.... தங்கறதுக்கு ரூம்பு ரெடியா இருக்கு.எனக்கும் நாள் பூரா தனியாக் கெடந்து அலுப்பாருக்கு! எல்லாம் நான் பாத்துக்கிடறேன். நீ யோசிக்காத!'' என்று ஆச்சி சமாதானம் சொன்னார்.

இருவரும் சிறிது நேரம் மற்ற விஷயங்களைப் பேசினர். அவர்களுடைய உரையாடலில் தான்யாவிற்கு அதன் பிறகு இடமில்லை.

* * *

**கார்** சின்ன மாங்குடியை நெருங்கும்போதே தான்யாவால் மாற்றத்தை உணர முடிந்தது. அதுவரை பல இடங்களில் காய்ந்து கிடந்த வயலுக்கு மாறாக, கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையான வயல்கள் மட்டுமே தெரிந்தன. பல இடங்களில் கடும் வெப்பத்தாலும் வறட்சியாலும் பாளம் பாளமாக வெடித்திருந்த நிலங்களை, இப்போது சுத்தமாகக் காண முடியவில்லை..

''ராஜாராம் நகர் உங்களை அன்புடன் வரவேற்கிறது!'' ''கே.எஸ்.ஆர். லே-அவுட் உங்களை அன்புடன் அழைக்கிறது!'' என்பதைப் போன்ற பல வண்ணக் கொடிகளுடன் காம்பௌண்ட் சுவர் எழுப்பிய மனை விளம்பரங்களையும் காணவில்லை.

எங்கு நோக்கினும் பசுமையான பயிர்கள். இரண்டு தளங்களில் ஒன்று தாழ்வாகவும், அடுத்த தளம் சற்று மேடாகவும் இருந்தன. அருகில் தெரிந்த பயிர்கள் இளம்

பச்சையாகவும், சற்று மேடாக இருந்த நிலத்தில் கரும் பச்சையாகவும் நீண்டு கிடக்க, பார்க்கும்போது இயற்கையன்னையின் பச்சைப் புடவையை விரித்துக் காயப் போட்டிருப்பது போலத் தெரிந்தது. இதில் நடுநடுவே தெரிந்த பயிர்களின் மஞ்சள் நிறமானது, புடவையில் இருக்கும் பூ வேலைப்பாடு போல் தோன்றியது.

'தான் ஒரு பெண்ணாக இருப்பதால், தனக்கு நிலமும் புடவையாகத் தெரிகிறது போலும்' என்று நினைத்த தான்யா, மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். ஊரை நெருங்க நெருங்க, மனதில் ஒரு பரபரப்பும் எதிர்பார்ப்பும் தோன்றி மறைந்தன.

கார் ஊருக்குள் நுழைந்ததும், டிரைவர் காரை நிறுத்தி ஒரு சிறுவனிடம் வழி கேட்டார். அவ்வளவு பெரிய காரை சாதாரணமாகப் பார்த்தபடி, ''பூமி மாமா வீட்டுக்கா?'' என்று கேட்டுவிட்டு வழி சொன்னான் அந்தப் பொடியன். பூமிநாதனைப் பார்ப்பதற்காக, பலர் இது போன்ற படகுக் கார்களில் வருவதால், அவனுக்கு இது அதிசயமாகப் படவில்லை.

கார் மெள்ள வீதியில் ஊர்ந்து, ஓர் ஓட்டு வீட்டின் முன்னால் நின்றது. வீட்டின் வாசலில் வளைவு இருக்க, அதன் கீழேயிருந்த முழுவதும் இரும்பு ஷீட் போட்ட கதவு மூடியிருந்தது. வீட்டைச் சுற்றி ஓடியிருந்த மதிற்சுவர், உள்ளே இருப்பது தெரியாத அளவிற்கு, உயரமாக இருந்தது. வீட்டு வாசலிலிருந்த பெரிய கருங்கல், படியாக நீண்டு கிடந்தது.

காரை விட்டு முன்னால் இறங்கிய டிரைவர் அழைப்பு மணியைத் தேட, பின்னாலேயே தான்யாவும் மேனேஜரும் இறங்கினர். அப்போது, எதிர் வீட்டிலிருந்து வந்த ஒரு குரல், ''கதவுல இருக்கிற நாதாங்கியைத் தட்டுங்க! ஆச்சி வருவாக'' என்றது.

நகரங்களில் தான், அடுத்த வீட்டில் என்ன நடந்தாலும் எட்டியும் பார்க்க மாட்டார்கள். ஆனால், இது கிராமமல்லவா! சொன்னதைப் போல் டிரைவர் நாதாங்கியைக் கதவில் தட்டினார்.

''இதோ வாரேன்!'' என்று குரல் கொடுத்தபடி மெள்ள நடந்துவந்து, ஓரிரு நிமிடங்களில் கதவைத் திறந்தார் ஆச்சி.

மேனேஜர் புன்சிரிப்புடன், ''வணக்கம்மா! நாங்க மும்பையிலருந்து வரோம்!'' என்று வணங்கினார்.

கதவை விரியத் திறந்த ஆச்சி ''வாங்க! வாங்க! பம்பாய்க்காரவுகளா? தம்பி சொன்னாக! உள்ற வாங்க!'' என்று செட்டிநாட்டுத் தமிழில் அன்பாக வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றார். அது போன்ற வீட்டை அது வரை பார்த்திராத தான்யா, பார்வையைப் படர விட்டாள்.

உள்ளே நுழைந்தவுடன் பெரிய அளவு முற்றம் திறந்த வெளியாக, கீழே டெரகோட்டா டைல்ஸுடன் இருந்தது. அதன் இடப்புறத்தில் மாட்டுக் கொட்டில் இருக்க, அதில் மூன்று பசு மாடுகள் இருந்தன.

அதனருகேயும் சுற்றியும் பல பூச்செடிகள் -சங்கு புஷ்பம், கனகாம்பரம், சாமந்தி என வரிசை கட்டியிருக்க,

சற்றுத் தொலைவிலிருந்த பெரிய புளிய மரமொன்று, பரந்து விரிந்து நிழல் கொடுத்தது. அதனருகே இருந்த ஒற்றையடிப் பாதையொன்று, கிணற்றை நோக்கிச் சென்றது.

இடது புறத்தில் தெரிந்த ஓட்டு வீட்டின் உள்ளே, ஆச்சி அவர்களை அழைத்துச் சென்றார். ஆர்க்கிடெக்ட் வைத்து கட்டிய வீடா என்ன? சாதாரணமான கொத்தனார்களை வைத்துக் கட்டிய அந்தக்கால வீடல்லவா?

அதனால், உள்ளே நுழைந்தவுடன் ரயில் பெட்டி போல அறைகள் இருந்தன, நடுவே அவர்கள் நுழைந்த அறை இருக்க, இடது புறத்தில் சமையலறை தெரிந்தது. வலது புறத்தில் இன்னும் இரண்டு அறைகள் தெரிந்தன.

மேனேஜர் தான்யாவை அறிமுகம் செய்து வைத்தார். ''இவங்கதான் தான்யா! பலராம் சாரோட பொண்ணு. தான்யாவை இங்க தங்க வெச்சுக்கச் சம்மதிச்சதுக்காக, சார் உங்களுக்கு நன்றி சொல்லச் சொன்னார். அப்புறம் உங்ககிட்ட பேசறதாவும் சொல்லச் சொன்னாரு!''

தான்யா வடநாட்டுப் பாணியில் ' நமஸ்தே ஆன்ட்டி!' என்று குனிந்து அவர் காலைத் தொட்டு வணங்கினாள். அருகில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சிகப்பி, ''அடி ஆத்தி! என்ன எங்க ஆச்சியை ஆண்டின்னு சொல்லிப்புட்டீக? அவுக இந்த ஊருல, எம்புட்டு செல்வாக்கானவுக தெரியுமா?'' என்று கேட்டாள்.

அவள் என்ன சொல்கிறாள் என்பது புரியாமல், தான்யா விழிக்க, மேனேஜரும் ஆச்சியும் சிரித்தனர். மும்பையிலேயே வளர்ந்ததால், அந்தக் கிராமத்து மக்கள் பேசிய தமிழ், தான்யாவிற்குச் சரியாகப் புரியவில்லை.

அவளது கைகளை அன்பாகப் பிடித்தபடி ''நீ என்னை ஆச்சின்னே கூப்பிடலாம்மா!'' என்று கூறிவிட்டு, சிகப்பியிடம், ''போய் எல்லாருக்கும் காஃபித்தண்ணி கொண்டுவா புள்ள!'' என்று அனுப்பினார் ஆச்சி.

''அம்மா! ஊருல வேல நிறைய இருக்கறதுனால, நான் இப்பவே கிளம்பிக்கிறேன். பூமிநாதன் தம்பியிடம் சொல்லிடுங்க'' என்றார் மேனேஜர்.

''அதற்குள் என்ன அவசரம்? இருந்து, காஃபி பலகாரமாவது சாப்பிட்டு விட்டுத் தான் போகணும்! முன்ன பின்ன பழக்கம் இல்லாத எங்க வீட்ல உங்க பொண்ண விட்டுட்டுப் போறீகளே! நம்ம வீட்லயே இருந்து இங்க எப்பிடி என்னன்னு பாத்து, உங்க சாருக்குத் தகவல் சொல்லலாம் இல்லையா? அதுக்காவது, கொஞ்ச நேரம் நம்ம தம்பி வரவரைக்கும் இருக்கலாமில்ல?'' என்று வற்புறுத்தினார் ஆச்சி.

ஆச்சி சொன்னதைக் கேட்டு மர்மமாகச் சிரித்தபடி, ''அம்மா! சாருக்கு உங்கமேல ரொம்ப நம்பிக்கை இருக்குது. அதுவும், மூர்த்தி சார் உங்க குடும்பத்தைப் பத்திச் சொன்ன பிறகு, நீங்களும் சொந்தம் போலத் தான். அதனாலதான், சார் பாப்பாவ இங்க அனுப்பி இருக்காரு.

உங்களைப் பார்த்தாலே, நல்லபடியா தெரியுது. நீங்க தான்யாவ, சொந்தப் பேத்தி போல பாத்துப்பீங்கனு நான் சார்ட்ட சொல்லிடறேன். திருச்சில எட்டு மணிக்கு ப்ளைட் டிக்கட் புக் பண்ணியாச்சு. இப்பக் கிளம்பினாத் தான், சரியா இருக்கும்'' என்றவர், காஃபியை அருந்திவிட்டு விடைபெற்றார்.

''வாம்மா! உன்னோட ரூம்ப காட்டறேன். சிகப்பி! பெட்டிகளை எடுத்துட்டு வா!'' என்று தான்யாவை அழைத்தார். டிரைவர் கொண்டு வந்து வைத்திருந்த பெட்டிகளில் ஒன்றை சிகப்பி எடுத்துக் கொள்ள, மற்றொரு பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு தான்யா ஆச்சியைப் பின்தொடர்ந்தாள்.

கூடத்திற்கு அடுத்திருந்த அறையைத் தாண்டி இடது புறம் திரும்பியதும், அங்கு ஒரு அறை படுக்கை வசதியுடன் இருந்தது.

அந்த அறைக்குள் நுழைந்த ஆச்சி, ''இந்த ரூம்புல தங்கிக்கம்மா. இங்கன உங்க ஊரு போல வீட்டுக்குள்ளயே பாத்ரூம்பு கிடையாது. வெளிய தான் போகணும். ராவுல போவணும்னா, ஆச்சியைக் கூப்பிடு! துணைக்கு வாரன்! வேற எதாச்சும் வேண்டுமுனா கேளு! கூச்சப்படாத!'' என்று தான்யாவிடம் சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

இரவு உணவு உண்ணும் வரை பூமிநாதன் வரவில்லை. ஆச்சி ''தம்பிக்கு இன்னிக்கு எங்கன வேலையோ? நீ அவனுக்கு காத்திருக்காத! சாப்பிட்டு படு ஆத்தா! காலைல இருந்து பிரயாணம் பண்ணி

வந்திருக்க!'' என்று பரிவுடன் கூறி, இரண்டு தோசைகளைச் செய்து கொடுத்தார்.

தான்யா உறங்கும் வரையிலும் பூமிநாதன் திரும்பி வரவில்லை. தன் அறைக்குச் சென்று நைட்டிக்கு மாறி படுக்கையில் விழுந்த தான்யா, படுத்தவுடன் உறங்கிவிட்டாள்.

# 4

**தா**ன்யா மறுநாள் காலையில் கண் விழித்தபோது காலை மணி ஆறு. இரவு களைப்பினால் படுத்தவுடன் உறங்கினாலும், வெயிலின் வெம்மை இரவிலும் தகித்ததால், புழுக்கம் தாங்காமல் விழித்துக் கொண்டாள். எழுந்து ஜன்னல்களைத் திறந்து விட்டு தண்ணீர் குடிக்கலாம் என்று திரும்பியபோது, ஒரு செம்பில் நீரும், அதன்மேலே டம்ளரும் இருந்தன.

'ஆச்சிதான் வைத்திருக்க வேண்டும், அவர்கள் தான் எவ்வளவு அன்பாகப் பழகுகிறார்கள்? இந்த ஊரில் அவள் இருக்கும் நாட்கள் கடினமாக இருக்காது' என்று தோன்றியது. 'பூமிநாதனை இன்னும் பார்க்கவே இல்லையே! அவரும் இப்படியே இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று பலவாறு எண்ணியவள், சற்று நேரம் கழித்து மீண்டும் தன்னை மறந்து உறங்கி விட்டாள்.

அறையை விட்டு வெளியே வந்தவள்,

ஆச்சியைத் தேடி சமையலறையில் எட்டிப் பார்த்தாள். கூழைக் கிண்டிக் கொண்டிருந்த ஆச்சி குளித்து ப்ரெஷ்ஷாக இருந்தார். தான்யா ஆச்சியைப் பார்த்து புன்னகையுடன் 'குட்மார்னிங் ஆச்சி!' என்றதும் சிரித்தார்.

'காஃபித்தண்ணி குடிக்கிறியாம்மா?'' என்று அன்பாகக் கேட்டார். 'பெரிய வீட்டுப்புள்ள! பல்லு விளக்காம காஃபி குடிப்பாக' என்று நினைத்திருந்தார்.

''இல்ல ஆச்சி! பிரஷ் பண்ணிட்டு அப்படியே குளிச்சுட்டு வந்துர்றேன். கம்பங் கூழ் எவ்வளவு டேஸ்டியா இருக்கும்னு, எங்கப்பா சொல்லியிருக்கார். அதனால எனக்குக் காப்பி வேணாம்.''

''அப்படியா! கொஞ்சம் இரும்மா. சிவப்பி, கடைக்குப் போயிருக்குது. வந்ததும், உனக்குக் கிணத்துல இருந்து தண்ணி சேந்தித் தரச் சொல்லுதேன்!''

தான்யாவிற்கு கிணற்றில் நீர் இறைத்துப் பழக்கமில்லை. இருந்தாலும், அடுத்தவருக்குத் தான் இடையூறாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன், 'இல்ல ஆச்சி, எனக்குத் தண்ணி எடுக்கத் தெரியும், நானே பாத்துக்கறேன்.' என்று கூறியவள், அறைக்குச் சென்றாள்.

அவர்கள் வீடு போல இங்கே பாத்ரூம் வீட்டுக்குள் இல்லையே! அதனால் பாத்ரூமிலேயே உடை மாற்றிக் கொள்ளலாம் என்று உடைகளை எடுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கிப் போகும்போது எதிரில் வந்தார்

ஆச்சி. ‘‘அழுக்குத் துணியை அங்கயே வெச்சுருமா! சிவப்பியை தோச்சுத் தரச் சொல்லுதேன்.’’

கிணற்றடியிலேயே துணி துவைக்கும் கல் ஒன்று இருந்தது. ‘முதலில் குளித்து விட்டு, பிறகு துவைத்துக் கொள்ளலாம். அதற்கு முன்பாக, தண்ணீரை எடுத்து முடிப்போம்’ என்று முடிவு செய்து துணிகளை ஓரமாக வைத்தவள், நீர் இறைக்க வாளியை எடுத்தாள்.

வாளியைக் கிணற்றில் விட்டவுடன், சகடையில் கயிறு சரசரவென இறங்கியது. காலி வாளியை விடும்போது ‘இது ஒரு கஷ்டமாக என்ன!’ என்று நினைத்தவளுக்கு, நீர் நிறைந்தவுடன் வாளியை மேலே இழுக்கும்போது தான் கஷ்டம் தெரிந்தது.

கயிறு சொரசொரவென இருக்க, மெத்தென்று இருந்த கைகள் சிவந்தன. எரிந்தன. மிகுந்த பிரயத்தனத்துடன் முதல் வாளி நீரை இறைத்து அங்கிருந்த பெரிய வாளியில் ஊற்றியவள், மீண்டும் வாளியைக் கிணற்றில் போட்டாள்.

நீர் நிரம்பிய வாளியை மேலே இழுக்கும்போது, ஏற்கனவே சிவந்திருந்த கைகள், மேலும் எரிச்சல் தாங்காமல் வலித்தன. பாதிவரை முயன்று இழுத்தவள், அதற்கு மேல் இழுக்க முடியாமல் கயிற்றை விட்டுவிட்டாள். கயிறு கடகடவென கீழே இறங்க, வாளி கிணற்றில் விழுந்து விடுமோ என்ற பதட்டத்தில், எட்டி வாளியைப் பிடிக்க முனைந்தாள் தான்யா.

ஏற்கனவே கிணற்றோரத்தில் சற்றுப் படர்ந்திருந்த பாசி அந்நேரம் அவளது கால்களைச் சறுக்கிவிட,

கிணற்றில் விழ எத்தனித்தாள் தான்யா. வயிற்றுக்குள் சொரேலென்று பயப்பந்து கிளம்ப, கத்தக்கூட முடியாமல் போனது.

'இனி, கிணற்றில் தலை குப்புற விழுந்து கபால மோட்சம் தான்!' என்று பயங்கர பீதியுடன் நினைத்தபோதே, இரண்டு வலிய கரங்கள் அவளது இடுப்பைச் சுற்றி இறுக்கமாக வளைத்தன. கூடவே அவளது காதில், 'உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா?' என்ற கோபமான குரலும் கேட்டது.

ஆபத்திலிருந்து தப்பியதில் நிம்மதியையும், அந்தக் குரலில் தெரிந்த கோபத்தில் பயத்தையும், ஒரு சேர உணர்ந்தாள் தான்யா.

அதிகபட்சமாக, பத்து நொடிகள் தான் அந்தக் கைகள் அவளை வளைத்திருக்க வேண்டும். கிணற்றை விட்டு அவளை நகர்த்தி நிறுத்திவிட்டு, உடனடியாகத் தன் கைகளை விலக்கிக் கொண்டான் பூமிநாதன்.

அவள் கிணற்றடிக்கு வரும்போதே, பூமிநாதன் பின்னால் வந்து கொண்டிருந்தான். தான்யாதான் அவனைக் கவனிக்கவில்லை. பூமிநாதன் அவள் பின்னாலேயே வந்து, 'இவதான் அந்த பம்பாய்க்காரியா?' என்று மனதுக்குள் கடுப்பாக நினைத்தபடி மாட்டுக் கொட்டகையில் நின்று விட்டான்.

தினமும் ஒரு வேளையாவது அந்தப் பசு மாடுகளுக்கு வைக்கோல் வைப்பது அவனுக்குப் பிடித்தமான வேலைகளில் ஒன்று. மூன்று

மாடுகளுக்கும் லட்சுமி, முத்து, வடிவு என்று பேர் கூட வைத்திருந்தான்.

அவைகளுக்கு வைக்கோலை எடுத்துப் போட்டுவிட்டு முதுகைத் தடவியதும், அவை வாஞ்சையுடன் அவனது கைகளை நக்கின. 'ம்மா'' என்று குரல் எழ்வும், அவன் முகத்தில் கடுமை மாறி கனிவு வந்தது. அன்பாக அவைகளைத் தடவிக் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது, தான்யா கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

'பரவாயில்லையே! பந்தா பண்ணுவான்னு நெனச்சா, இதெல்லாம் கூடச் செய்யறாளே!' என்று அவன் ஆச்சரியப்பட்டபோதே அவள் கயிற்றை இழுக்க முடியாமல் திணறுவது தெரிந்தது.

'என்ன தான் செய்கிறாள்னு பார்ப்போம்!' என்று நினைத்தபோதே அவள் தடுமாறுவது தெரிந்ததும், இடையில் இருந்த பதினைந்து அடிகளைத் தாவிக் கடந்தவன், அவளை இரு கைகளாலும் வளைத்து இறுகப் பிடித்தான். கூடவே, 'அவள் கிணற்றில் விழுந்திருந்தால், அவள் பெற்றோருக்கு என்ன பதில் சொல்வது' என்ற பயம் எழுந்ததில், கோபத்துடன் 'அறிவிருக்கா?'' என்றும் கேட்டான்.

அவன் சற்றுத் தள்ளி நின்றதும், 'நான்... நான் வாளி கிணத்துல விழுந்துடுமோன்னு நெனச்சு...'' என்று தான்யா பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவனது கைகள் கிணற்றின் தூணைச் சுட்டிக் காட்டின. வாளி தவறியும் கிணற்றில் விழாதபடி, கயிற்றின் ஒரு

முனை தூணில் கட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும், எதுவும் பேசாமல் 'ஙே' என்று அசடு வழிய விழித்தாள் தான்யா. அதற்கு மேல் பூமிநாதன் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மளமளவென்று நீரை இறைத்து இரண்டு வாளிகளில் நிரப்பி, அவற்றை அருகிலிருந்த குளியலறையில் வைத்துவிட்டு விறுவிறு என்று சென்றான்.

அதுவரை பிரமிப்பிலிருந்த தான்யா, குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டாள். இதுவரை, யாருமே அவளைத் திட்டியதில்லை. திட்டும்படியாக அவளும் நடந்து கொண்டதில்லை. அதனால், முதன்முறையாகப் பூமிநாதன் கோபமாகப் பேசியதில், அவள் மனம் வாடினாள்.

'ஆனாலும், அவர் கேட்டது சரிதானே! ஒரு சின்ன இரும்பு வாளியைப் பிடிக்கப் போய் கிணற்றில் விழுந்து, அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால்... அவருக்கு எவ்வளவு கஷ்டம்? தன்னுடைய பெற்றோருக்கு அவர் பதில் சொல்லியாக வேண்டுமே! தன்னுடைய கவனக் குறைவினால் தானே அவர் பதட்டமடைய நேர்ந்தது?

அதன் பிறகும் அவளுக்கு உதவுவதற்காக அவரே நீர் இறைத்து வாளியைக் கூட அறையில் கொண்டு வந்து வைத்தாரே! அவரைத் தவறாக நினைக்கக் கூடாது!' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு குளித்து உடை மாற்றினாள். உடனே கிளம்ப வேண்டுமோ என்னவோ என்ற யோசனையில், அழுக்குத் துணிகளைப் பின்னர் துவைக்கலாம் என

முடிவு செய்து, தனது அறைக்குச் சென்றாள். தலை வாரியவுடன், வழக்கம் போல ஒரு பொட்டை எடுத்து நெற்றியில் ஒட்டிக் கொண்டாள்.

பின்பு கைப்பேசி, சிறு குறிப்பேடு, பேனாவையும் எடுத்து, அவற்றை ஒரு சிறு பையில் வைத்தவள் கொஞ்சம் பணத்தையும், க்ரெடிட் கார்டையும் கூட எடுத்துக்கொண்டு சமையலறைக்குப் போனாள். அங்கு ஆச்சியும், பூமியும் பேசுவது காதில் விழுந்தது.

புன்னகையுடன் நுழைந்த தான்யா, ஆச்சியிடம் புன்னகைத்து விட்டு அவனிடம், 'குட்மார்னிங் பூமிநாதன்'' என்று கூறினாள். அவளைப் பார்த்ததும் ஆச்சி அவளுக்கும் கஞ்சி கொண்டு வர நகர்ந்து செல்ல, அதுவரை சிரித்தபடியே பேசிக் கொண்டிருந்த பூமிநாதனின் முகம் மாறியது.

குரலைத் தாழ்த்தி பற்களைக் கடித்தபடி, 'டோன்ட் கால் மீ பூமி! கால் ரெஸ்பெக்ட்பூலி!'' என்று கோபமாகச் சொன்னான். அதைக் கேட்டதும், தான்யாவின் முகம் வாடியது. அவள் பழகிய வரையில், ஓரளவு சமவயதில் இருப்பவர்கள், ஒருவரையொருவர் பெயர் சொல்லி அழைப்பதுதான் வழக்கம்.

ரொம்ப வயதானவர்களாக இருந்தால்தான், 'சார்!' என்ற மரியாதையெல்லாம். இல்லையென்றால், அவள் எல்லோரையும் 'பையா' (அண்ணா) என்றுதான் அழைப்பாள். ஏனோ அவளுக்கு, பூமி பையா என்று அவனை அழைக்கப் பிடிக்கவில்லை. அதனால், சிறுகுரலில், ''ஸாரி ஸார்!'' என்று கூறிவிட்டு

தலையைக் குனிந்து கொண்டாள். 'இங்கெல்லாம் பேர் சொல்லிக் கூப்பிடக்கூடாது போலிருக்கிறது!' என்று மனதைச் சமாதானம் செய்தாள். ஆனாலும், 'அதை இத்தனைக் கடுகடுவென்று சொல்ல வேண்டுமா?' என்று அவள் மனம் முரண்டியது.

அதற்குள் வந்து விட்ட ஆச்சி, 'உக்காரும்மா! தம்பி! இந்தப் புள்ள தான், பம்பாயிலருந்து வந்திருக்கற புள்ள! ரொம்பத் தன்மையான புள்ளப்பா! நீ கஞ்சி குடிம்மா! மோர் ஊத்திக் குடிக்கிறியா?'' என்று அங்கிருந்த சூடான சூழலை உணராமல், இருவரிடமும் பேசினார்.

தான்யா அமைதியாகக் கஞ்சியை எடுத்துக் குடிக்கத் துவங்க, பூமிநாதனிடம், 'இன்னிக்கி என்னப்பா வேல வெச்சிருக்க? இந்தப் புள்ளக்கி வயலைச் சுத்திக் காட்டப் போறியா? மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்துருவீகளா?' என்று கேட்டார் ஆச்சி.

''இல்ல அப்பத்தா! இப்ப இவுகளைக் கூட்டிட்டு வயலைக் காட்டிட்டு, நான் அப்படியே புதுக்கோட்டை வரை போகோணும்! அங்க ஒரு வேலையா போக வேண்டியிருக்கு. போயிட்டு ராவைக்குத் தான் (இரவு) வருவேன். சாப்பாடு வேணாம். பொழுதோட வந்திர்றேன். இவுகளை வீட்டுக்கு அனுப்பிடறேன்'' என்று சிரித்த முகமாகச் சொன்னான்.

'சற்று முன் தன்னைக் கடுகடுவென்று பேசியவனா இவன்?' என்று தான்யாவாலேயே நம்பமுடியவில்லை. அவள் ஆச்சரியமாகப் பார்த்துக்

கொண்டிருக்கும் போதே, ஆச்சி அடுத்த கேள்வியைக் கேட்டார்.

'ஏம்பா! நீ பாட்டுக்கு அப்படியே போனா, இந்தப் புள்ள எப்புடி வீட்டுக்கு வரும்? ஊருக்குப் புதுசில்லையா? நீ கொண்ணாந்து விடமுடியலின்னா, நான் செவப்பிய அனுப்பி வைக்கவா?'

'பம்பாயிலிருந்து கிளம்பி வந்தவளுக்கு, இந்தா இருக்கிற வயக்காட்டுலருந்து வீட்டுக்கு வரத் தெரியாதா?' என்ற எண்ணம் ஏளனமாக மாறி அவன் முகத்தில் தெரிய, திரும்பி தான்யாவைப் பார்த்தான்.

அதைப் புரிந்து கொண்டு, 'ஆச்சி! நான் என்ன சின்னப் புள்ளயா தொலஞ்சு போக? போகும்போது வழியப் பார்த்துகிட்டா, நானே வந்துருவேன் ஆச்சி! நீங்க கவலைப்படாதீங்க' என்று அவசரமாகச் சமாதானம் சொன்ன தான்யா, 'ஓகேயா?' என்பதுபோல் பூமிநாதனைப் பார்த்தாள்.

'எப்படியோ! பொறுப்பு கழிந்தால் சரி!' என்பது போல 'சரி ஆச்சி! அப்ப, நான் வாரேன்!'' என்று எழுந்தவன், கண்களாலேயே தான்யாவை, ''கிளம்பறியா?'' என்று கேட்டான்.

கையிலிருந்த கிண்ணத்தைக் கீழே வைத்து விட்டு அவசரமாக தான்யா எழவும், 'என்னம்மா! பாதிக் கஞ்சியில் கிளம்புற? முழுசா குடிம்மா! எப்படி இது வயித்துக்குப் பத்தும்? தம்பி இருப்பாப்புல'' என்று ஆச்சி பரிவோடு கூறினார்.

இருந்து அந்தக் கஞ்சியைக் குடித்து, மேலும்

பூமிநாதனின் கோபத்துக்கு ஆளாக விரும்பாமல், 'இல்ல ஆச்சி! இப்பவே வயிறு நிரம்பிடுச்சி. போதும்! நான் வரட்டுமா?' என்று விடைபெற, ''பத்திரமா போய் வாம்மா!' என்றபடி விடைகொடுத்தார் அவர்.

பின்னால் அவள் வருகிறாளா என்று கூடப் பார்க்காமல், பூமிநாதன் விடுவிடுவென்று கிளம்பி விட, தான்யா ஓட்டமும் நடையுமாகப் பின்தொடர்ந்தாள்.

'இனியொரு முறை, அவன் கோபப்படுவது போல எதையும் செய்வதில்லை' என்ற முடிவையும் செய்தாள். ஆனால், விதி அவள் வாழ்வில் அன்று கும்மியடித்தே தீருவது என்று முடிவு செய்திருப்பது, பாவம் அவளுக்குத் தெரியவில்லை.

# 5

**பூ**மிநாதன் அவள் தன்னுடன் சேர்ந்து வருவதை விரும்பாதவன் போல இரண்டடி முன்னாலேயே சென்றான். வழியில் தெரிந்தவர்களிடமெல்லாம் இன்முகமாக வணக்கம் சொன்னபடி அவன் சென்றதை, கவனித்தாள்.

போகும் வழியிலிருந்த சிறு கூடமொன்று அவள் பார்வையில் பட்டது. உள்ளே நிறைய குழந்தைகள் கோரஸாக ஏதோ பாடல்ககளைப் பாடிக் கொண்டிருந்தனர்.

பூமிநாதனைப் பார்த்தும் சின்னக் குழந்தைகள்

''பூமி மாமா! பூமி மாமா!'' என்று கூவியபடி அவனை நோக்கி ஓடிவந்தன. அவர்களைப் பார்த்ததும் முகம் மலர்ந்த சிரிப்புடன் அவர்கள் அனைவரையும் இருகைகளாலும் அணைத்துக் கொண்டான்.

இரண்டு நிமிடம் அவர்களுடன் பேசியவன், ''எல்லோரும் உள்ள ஓடுங்க! மாமா வேலயாப் போறேன்! நீங்க சமத்தாயிருந்தா முட்டாய் வாங்கிட்டு வருவேன்'' என்றான். எல்லோரும் ''ஹோய்'' என்று கூச்சலுடன் உள்ளே ஓடி விட, ஒரு வாண்டு மட்டும் அங்கேயே நின்று 'இதாரு?' என்று தான்யாவைச் சுட்டிக் காட்டினான்.

''சம்முவம்! (சண்முகம்) இது தான்யாஅக்கா. வெளியூர்ல இருந்து நம்ப வூட்டுக்கு விருந்தாடியாக வந்திருக்காக'' என்று சொல்ல, ''இவுக இங்கனயே இருப்பாகளா?'' என்று கேட்டான் அவன்.

சிரித்தபடி, ''கொஞ்ச நாளைக்கு இருப்பாகடா'' என்று பூமிநாதன் சொல்ல, சண்முகம் தான்யாவிடம் திரும்பி ''அக்கா! நீங்களும் எங்களோட வெள்ளாட வருவியா? ' என்று கேட்டான்.

அவனுடைய குண்டு குண்டுக் கண்களிலும், துறுதுறுப்பான பேச்சிலும் மயங்கிய தான்யா, 'கண்டிப்பா வரேன்டா குட்டி! இப்ப, சாரோட ஒரு இடத்துக்குப் போயிட்டு, வரும்போது இங்க வந்து விளையாடுறேன்'' என்று அவன் கன்னத்தைத் தடவியபடி சொன்னாள்.

''அய்ய அக்கா! இவரு சாரு இல்ல. சாரு

பள்ளிக்கோடத்துல இருப்பாக! இவுக பூமி மாமா! நீங்களும் இவுகளை பூமி மாமான்னே கூப்பிடுங்க'' என்று வெகுளியாகச் சொன்னான் சண்முகம்.

காலையில் தானே, அவனை பூமி என்று கூப்பிட்டதற்குத் திட்டினான். இப்போது 'பூமி மாமா என்று கூப்பிட்டால், எப்படியிருக்கும்?' என்று சிரிப்போடு அவனுடைய முகம் பார்த்தாள்.

அவன் எதுவும் சொல்ல முடியாமல், ''வாலு! உள்ள ஓடு! அப்பத் தான் ஒனக்கு முட்டாயி'' என்று சண்முகத்தை விரட்டிவிட்டு, வேகமாக முன்னால் நடந்தான். அப்போது தான் தான்யாவின் மனதில், பூமிநாதன் அவளைத் தவிர எல்லோரிடமும் இன்முகமாகவும் அன்பாகவும் தான் நடந்து கொள்கிறான் என்பது உறைத்தது.

அவளிடம் நேராக இரண்டு வார்த்தைகள் கூடப் பேசவில்லை; ஊரிலிருந்து வந்த விபரத்தையோ, அவளது படிப்பையோ, ஏன் அவளது குடும்பத்தைப் பற்றிக் கூட விசாரிக்கவில்லை. பேசிய இரண்டு வார்த்தைகள் கூட திட்டுவதற்காக வெளிவந்தவை தான்!

'அவனுக்கு என்னைப் பிடிக்கவில்லையா என்ன? என்னைப் பார்த்தாலே எரிந்து விழும் அளவிற்கு, நான் என்ன தவறு செய்தேன்?' அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்தவாறே அவள் நடந்து செல்ல, பூமியோ ஒரு வார்த்தைகூட பேசாமல்,

முன்னால் சென்றான். வயற்காட்டுக்கு வந்தவுடன், எதுவும் பேசாமல் காலிலிருந்த செருப்பைக் கழற்றி இடது கையில் எடுத்துக்கொண்டு வயல் வரப்பில் இறங்கி அவன் விறுவிறுவென்று நடந்தான்.

**சோறு போடும் வயல் புனிதமானது என்பதால், யாரும் செருப்பு அணிவதில்லை என்பது தான்யாவிற்கும் தெரியும்.** அதனால், அவனைப் பின்பற்றி, செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

பழக்கமானதால் பூமிநாதன் விறுவிறுவென்று நடக்கவும், வேகமாக இரண்டடி வைத்து ஓட்டமும் நடையுமாக அவனைப் பின்தொடர்ந்தாள் தான்யா. செருப்பில்லாமல் கரடுமுரடான பாதையில் நடந்து தான்யாவிற்குப் பழக்கமில்லை.

அதிலும், பூமிநாதன் போகும் வேகத்திற்கு அந்தக் கரடுமுரடான வரப்பில் வேகமாக நடக்க முயன்றபோது, அங்கிருந்த பெரிய நெருஞ்சி முள்ளைத் தாண்ட முயன்றும், பாதை வழுக்கியதால் நெருஞ்சி முள்ளின் மேலேயே கால் வைத்தவுடன் சுருக்கென்ற வலியெடுத்தது.வலி தாங்க முடியாமல் நிலை தடுமாறியவள், பிடித்துக் கொள்ள அருகில் வாட்டமாக எதுவுமில்லாததால், பூமிநாதனின் தோளை இறுகப் பற்றிக் கொண்டாள். அவள் அந்தப் பாதையில் நடக்கத் தெரியாமல், அவன் தோளைப் பிடித்ததாக நினைத்து, ‘‘உனக்குக் கொஞ்சம் கூட நிதானம் கிடையாதா?’’ என்று கோபமாகக் கேட்டபடி திரும்பினான்.

அவள் காலைத் தரையில் ஊன்ற முடியாமல் தடுமாறுவதைப் பார்த்துவிட்டு பேச்சை நிறுத்தினாலும், மிடுக்கு குறையாமல் ''என்ன?'' என்று கேட்டான்.

தான்யா வலி தாங்க முடியாமல் முகத்தை சுருக்கியபடி, ''முள்ளு குத்திடுச்சு'' என்று சன்னமாகக் கூறினாள். தான்யா எதிரில் இருப்பவர் சிடுமூஞ்சியாக இருந்தாலும், கலகலப்பாகப் பேசி அவர்களைத் தன் வசம் இழுத்துக் கொள்ளும் இயல்புடையவள்.

அவளுடைய குண நலன்களோடு, அவளது வசதியான பின்னணியும், எல்லோரையும் அவளிடம் நல்ல முறையிலேயே பழக வைத்ததால் இது போன்ற சுடு சொற்களை, அவள் யாரிடமும் இதுவரை கேட்டதில்லை. ஆகையால், எவ்வளவு தான் பூமிநாதன் கோபமாகப் பேசினாலும், அவளால் தன் இயல்பை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

அதற்கு மேல் எதுவும் பேசாமல் அவளுடைய காலைப் பார்த்தவன், அதில் ரத்தம் வடிவதையும், அவள் காலைத் தரையில் ஊன்ற முடியாமல் தடுமாறுவதையும் பார்த்தவுடன், குனிந்து அவளுடைய பாதத்தைத் தன் கைகளால் பற்றினான். ஒரு காலால் பாலன்ஸ் செய்ய முடியாத தான்யா, வேறு வழியின்றி அவனது தோள்களைப் பிடித்துக் கொண்டாள். கட்டாந் தரையிலோ, கரடுமுரடான பாதையிலோ நடந்து பழக்கமில்லாததால், அவளுடைய பாதம் மெத்தென்று இருந்தது. அவளது காலில் குத்தியிருந்த முள்ளை மெதுவாக எடுத்தவன், மேற்கொண்டு எதுவும் பேசாமல்,

தன் சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து காயத்தின் மேல் கட்டினான். அவள், அவன் தோளைப் பிடித்திருந்ததைக் கூட எதுவும் சொல்லவில்லை.

மெதுவாக எழுந்தவன் அவள் காலை ஊன்றி வலி தாங்க முடியாமல் தடுமாறியதைப் பார்த்து, ‘சரி! இந்தக் காலோட உன்னால ரொம்ப தூரம் நடக்க முடியாது! வீட்டுக்குப் போகலாம்’’ என்று கூற, தான்யா பதிலேதும் பேசாமல் தலையை மட்டும் அசைத்தாள். வயல் வரப்பிலிருந்து சாலைக்கு வரும்வரை அவளது தோளைப் பிடித்து வந்தவன் மணியைப் பார்த்தான். உடனே, அவனுக்கு எங்கோ அவசர வேலை இருப்பதை புரிந்து கொண்டாள் தான்யா.

இதற்கு மேல் அவனைத் தொல்லை செய்ய விரும்பாமல், ‘‘சார்! இனிமே நானே மெதுவா நடந்து போயிக்கறேன். நீங்க ஏதோ வேலை இருக்குனு சொன்னீங்களே? கிளம்புங்க சார்’’ என்று கூறினாள்.

‘‘நீ எப்படித் தனியா நடந்து, வீடு வரைக்கும் போக முடியும்?‘ என்று அவன் கேட்க, வலித்த பாதத்தைத் தரையில் ஊன்றி, ‘‘நான் மெள்ள நடந்து போயிடுவேன் சார். நீங்க என்னை பற்றி யோசிக்காதீங்க’’ என்றாள்.

அதற்கு மேலும் அங்கேயே நின்றால் அவன் கிளம்பத் தடையாக இருக்குமென்று நினைத்து, திரும்பி வீடு நோக்கி அடியெடுத்து வைத்தாள். மெல்ல அவள் தாங்கித் தாங்கி நடப்பதை ஒரு நிமிடம் பார்த்தவன், அதற்கு மேல் அவளைப் பற்றி யோசிக்காமல் திரும்பித் தன் வழியில் நடந்தான்.

வலியால் வேகமாக நடக்க முடியாமல், மெள்ள நடந்து மீண்டும் அந்த சிறுவர்கள் கூடத்தை தான்யா அடைந்தபோது ரொம்பவே நேரம் ஆகிவிட்டது. அதற்கு மேல் நடக்க முடியாமல் கால்கள் கெஞ்சின. 'ஆனால், உட்கார இடமில்லாமல் என்ன செய்வது?' என்று யோசித்தபோது சண்முகம் ஓடி வந்தான்.

'அக்கா! உள்ற வாங்கக்கா! நீங்க அப்பவே என்கூட விளையாடுறேன்னு சொன்னீகளே'' என்று அவள் கையைப் பிடித்து இழுக்க, அவன் பின்னால் சென்றாள். அவளுக்கு இப்போது அவசரமாக எங்கும் போகத் தேவையில்லை. அதோடு, கால்களும் ஓய்வு கேட்டுக் கெஞ்சின. ஆகையால் தான்யாவிற்கு அவன் இழுத்த இழுப்பிற்குச் செல்வது உற்சாகமாகவே இருந்தது.

அது ஒரு இருபதுக்கு இருபது அடி அளவுள்ள கூடம். தரையில் குழந்தைகள் அமர்ந்திருக்க, ஓரமாக இரண்டு மூதாட்டிகள் அமர்ந்திருந்தனர். நான்கிலிருந்து பதினான்கு வயது வரை, சுமார் இருபத்தி ஐந்து குழந்தைகள் இருப்பார்கள்.

அவளைப் பார்த்ததும் இரண்டு மூதாட்டிகளில் ஒருவர், ''வாம்மா! பூமித்தம்பி வீட்டுக்கு விருந்தாடியா வந்திருக்க புள்ள தான நீயி? இப்படி உக்காரு தாயி'' என்று அன்போடு கூறினார்.

'செல்போனே அவ்வளவாக இல்லாத இந்த ஊரில், அதற்குள் எப்படி செய்தி பரவுகிறது?' என்று மனதிற்குள் எழுந்த ஆச்சரியத்துடன், தான்யா மெள்ள நடந்து அவர் அருகில் வந்தாள்.

அதற்குள் அவள் காலிலிருந்த கட்டைப் பார்த்துவிட்டு, 'என்னம்மா ஆச்சு? காலுல என்ன காயம்? எங்கனயும் விழுந்துபுட்டியா? என்று பரிவாகக் கேட்க, ''இல்ல பாட்டி! வயலுக்குப் போகும்போது முள்ளு குத்திடுச்சு. அதான்' என்று பதிலளித்தாள்.

''அப்ப, கீழ உக்காராத புள்ள! குரிச்சிலயே இருந்துக்க'' என்று அங்கிருந்த நாற்காலியைக் காட்டினார். ''தாங்க்ஸ் பாட்டி!'' என்று கூறிவிட்டு அதில் அமர்ந்தபடியே, 'இது என்ன பாட்டி! சின்னப் புள்ளைங்கள பாத்துக்கற க்ரீச்சா... ம்... பள்ளிக்கூடமா?' என்று அவருக்குப் புரியும்படியாகக் கேட்டாள்.

''ஆமாம்மா! இந்தப் புள்ளைகளுக்கெல்லாம் பள்ளிக்கோடம் கோடை விடுமுறைக்காக லீவு விட்டாக! இதுக ஆயி அப்பனெல்லாம் கொல்லையில (வயலில்) வேலை பாக்காக. இதுக வெய்யில்ல வீதில விளையாண்டு கிடக்குதுகன்னு, பூமித்தம்பி தான் இந்த ஏற்பாட்டைச் செஞ்சிருக்காப்புல!'' என்று விளக்கம் அளித்தார்.

கூட இருந்த இன்னொரு மூதாட்டியும், ''ஆமாப்பு! இந்த ஊரு புள்ளைக படிக்கிறதுக்காக இந்தக் கூட்த்தை, பூமித்தம்பி தான் கட்டுச்சு. இங்கல்லாம் அடிக்கடி கரண்டு போயிடும். போனா மணிக்கணக்கா வராது. புள்ளைக அப்புறம் பரிச்சைக்கு எப்படிப் படிக்க? அதனால இந்தக் கூடத்தைக் கட்டிக் குடுத்திருக்கு.

அது என்னவோ, சூரியன்லருந்து வார வெளிச்சத்தில் எரியுற விளக்கு போட்டிருக்குது

அதனால, கரண்டு போனாலும் இந்த விளக்கு, பேன் எல்லாம் ஓடும். இப்ப அந்தப் பெரிய புள்ளைகளுக்கும் பரிச்சை முடிஞ்சு போச்சுல்ல. அதான் இப்ப இந்தச் சின்னப் புள்ளைகளுக்கு... இங்க வெச்சு பாட்டு, வெளையாட்டுன்னு ஏற்பாடு செஞ்சிருக்காப்புல. அவுங்க ஆயி அப்பன் எல்லாம், அங்க நிம்மதியா வேல பாக்கலாமுல்ல?'' என்று நீண்ட விளக்கம் கொடுத்தார்.

அவர் பேசும்போதே சுற்றிலும் பார்த்த தான்யா, அந்தக் கூடம் மிகவும் குறைந்த பொருட்செலவில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். சுற்றிலும் மண் சுவர். ஜன்னலுக்குப் பதிலாக, சதுரமான ஓட்டைகள். மேலே சிமெண்ட் ஷீட். அதன் வாரையில் (ceiling) மூன்று ட்யூப்லைட்கள், இரண்டு ஃபேன்கள் தொங்கின. தரை கூட, சிமெண்ட் மெழுகி கட்டாந்தரையாக இருந்தது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே குழந்தைகள் அவளைச் சூழ்ந்து கொள்ள, அவர்களுடன் அவளுக்குத் தெரிந்த பாடல்களையும் விளையாட்டுக்களையும் சொல்லி விளையாடினாள். அதுவரை இத்தனைக் குழந்தைகளுடன் பேசி விளையாடிய அனுபவம் இல்லாததால், அவளுக்கு இது புதுமையாக இருந்தது.

குழந்தைகள் வேற்றுமையின்றி அவளது தோளைத் தொட்டும், கன்னத்தைத் தட்டியும் பேசியது, புது அனுபவமாக இருந்தது. அவள் குழந்தைகளுடன் விளையாட்டில் ஆழ்ந்து போனதால் சிகப்பி வந்ததைக் கூட கவனிக்கவேயில்லை.

'நீங்க இங்கனதான் இருக்கீகளா? பூமித்தம்பி போன் பண்ணி, நீங்க வீட்டுக்கு வந்துட்டியளான்னு ஆச்சி கிட்ட கேட்டாக. உங்கள காங்கலைன்னுதும், ஆச்சி வழி தெரியாம எங்கயும் போயுட்டியளோன்று பாக்கறதுக்காவண்டி என்ன அனுப்புனாவ. வாரியளா? போவோம்'' என்று உள்ளே நுழைந்தபடி முழு விபரமும் ஒப்பித்தாள் சிகப்பி.

அவளைப் பார்த்ததும் எழுந்து கொண்ட தான்யா, குழந்தைகளிடமும், இரண்டு மூதாட்டிகளிடமும் விடைபெற்றாள். அவர்களில் ஒருவர் ''ஏலே சிவப்பி! புள்ள காலுல முள்ளு குத்திருச்சு. பாத்து பைய கூட்டிட்டு போலே'' என்று கூற, சிவப்பி குனிந்து தான்யாவின் காலைப் பார்க்க ரத்தம் கசிந்த கைக்குட்டை அவள் கண்ணில் பட்டது.

'அடியாத்தி! எம்புட்டு ரத்தம்! அதான் இங்கன இருந்துட்டீகளா? பைய வாங்கப்பு' என்று தான்யாவிடம் கூறிவிட்டு, ''அப்ப நா வாரேன் சீதயாச்சி! ராணியாச்சி!'' என்று விடைபெற்றாள்.

வெளியே வந்ததும், ''பூமித்தம்பியால தேன் இந்த ஊரு... ஊரா இருக்கு. இதெல்லாம் வானம் பாத்த சீமை! தம்பிதேன் இங்கன எல்லாருக்கும் பொழப்புக்கு வழி பண்ணி, புள்ளைக படிப்புக்கும் ஏற்பாடு செய்யுறது. அந்தா இருந்தாகளே சீதையாச்சியும் ராணியாச்சியும்... அவுக ரெண்டு பேரும் புள்ள குட்டி இல்லாதவுக. புருசனும் போயிட்டாப்புல. தம்பிதான் அவுக வயிறு வாடாம, இங்கன புள்ளைகளப் பாக்க வேலைக்கி

வெச்சிருக்காப்புல'' என்று சிவப்பி விளக்கியபடியே வந்தாள்.

'இதென்ன? பூமி சார் ஊருக்குள்ள ஏகப்பட்ட பி.ஆர்.ஓ. வைத்திருக்கிறார் போலிருக்கே!' என்று தான்யா மனதிற்குள் சிரித்துக் கொண்டாலும், அவர்கள் பூமிநாதனைப் பற்றிக் கூறியது முழுக்க முழுக்க மனப்பூர்வமாகச் சொன்னது என்பதையும் உணர்ந்தாள்.

வலித்த பாதத்தை மெல்ல ஊன்றி வந்ததாலும், அடுத்த காலில் மொத்த எடையையும் போட்டு நடந்து வீட்டிற்கு வந்ததிலும், மிகவும் களைத்திருந்தாள் தான்யா. அந்தக் கிராமத்தில் ஆட்டோவோ, ரிக்ஷாவோ இல்லாததால், வேறு வழியில்லை. பெரும்பாலான வர்கள் சைக்கிள் மட்டுமே வைத்திருந்தனர்.

வீட்டிற்குள் நுழைந்த தான்யாவை ஆச்சி அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று, ''வாப்பு! தம்பி அப்பயே போன் பண்ணிச் சொல்லிப்புடுச்சு. இன்னும் காணலியே... வீடு வழி மறந்து போச்சுதான்னு தான், செவப்பிய அனுப்பனேன்! காலில் என்னம்மா இம்புட்டு ரத்தம்?'' என்று கவலையாக விசாரித்து, விவரம் தெரிந்து கொண்டார்.

''மஞ்சப்பத்து போட்டா சரியாப் போகும்'' என்று கூறி, உடனே அதைப் போட்டும் விட்டார். ''நீ செத்தப் படுத்து உறங்கு தாயி! பொறவு சாப்பிடலாம்'' என்று கூறி, மெள்ள அவளை அவளுடைய அறைக்கும் அழைத்துச் சென்றார்.

# 6

இரண்டு மணி நேரம் உறங்கி எழுந்தபோது, வலியும் களைப்பும் குறைந்ததுபோல் தோன்றியது. அருகிலிருந்த ஸ்டூலில் ஆன்டிஸெப்டிக் ஆயின்மென்ட் இருந்தது, அவள் கண்ணில் பட்டது. கூடவே கொஞ்சம் பஞ்சும், கட்டுவதற்கு காஸ் (Gauze) துணிகளும் இருந்தன.

எழுந்தவள், ஆயின்ட்மென்டை காயத்தின் மேல் தடவி, அதன் மேலே கட்டையும் போட்டுக் கொண்டாள். 'ஆச்சி யாரையோ அனுப்பி, நமக்காக வாங்கிட்டு வரச் சொல்லியிருப்பாங்க! ம். அவங்க எவ்வளவு நல்லவங்களா இருக்காங்க... இந்தப் பூமி சாரும் அப்படியிருந்தா, எவ்வளவு நல்லாயிருக்கும்?'

பெருமூச்சு விட்டபடி எழுந்து, அறையை விட்டு வெளியே வந்தாள். ஆச்சி கூடத்தில் அமர்ந்து, புளியை ஆய்ந்து கொண்டிருந்தார். ''வாப்பு! வலி எப்படி இருக்கு? பரவாயில்லையா?'' என்று அன்பாக விசாரித்தார்.

''தாங்க்ஸ் ஆச்சி! நீங்க வச்ச ஆயின்ட்மென்டைப் போட்டுக்கிட்டேன்! இப்ப, வலி கொஞ்சம் குறைஞ்சிருக்கு'' என்று புன்னகை செய்தாள் தான்யா.

''அத நான் வெக்கல! பூமித்தம்பிதான், வேல சீக்கிரமா முடிஞ்சு போச்சுன்னு.... வாரயில இந்த மருந்த

வாங்கியாந்துச்சு. அதேன் உன் ரூம்புலயும் கொண்ணாந்து வச்சுச்சு' என்று அவள் முகம் பாராமல், புளி ஆய்வதில் கவனம் செலுத்தியபடி பேசினார் ஆச்சி.

பார்த்திருந்தால், அவள் முகத்தில் முதலில் 'அவனா?' என்று முதலில் ஆச்சரியமும், அதன்பிறகு, 'பரவாயில்லையே' என்ற சமாதானமும், 'கடுகடுன்னு இருக்கற அவனுக்கும், மனசுல ஈரம் இருக்கே!' என்று ஆறுதலும் ஒடியதைக் கவனித்திருப்பார்.

தான்யா பதிலேதும் சொல்லாமல் இருக்கவும், ஆச்சி அத்துடன் பேச்சை நிறுத்திவிட்டு, 'வாம்மா சாப்பிடலாம்' என்றபடியே எழுந்தார். மதிய உணவு முடிந்ததும் ஆச்சி அவளை மீண்டும் ஓய்வெடுக்கச் சொல்ல, அறைக்கு வந்தவள் தூக்கம் வராமல் ஒரு நாவலைப் பிரித்து அதில் ஆழ்ந்து போனாள்.

மாலை ஐந்தரை மணிக்கு அறையை விட்டு தான்யா வெளியே வந்தபோது, ஆச்சி சமையலறையில் காஃபி போட்டுக் கொண்டிருந்தார். நாள் முழுவதும் ஓய்வாகவே இருந்ததில், கால்வலி வெகுவாகக் குறைந்திருந்தது. நேராகக் கிணற்றடிக்கு சென்று முகம், கை, கால் கழுவி காலையில் போட்டு வைத்திருந்த அழுக்குத் துணிகளைத் துவைப்போம் என்று தேடியபோது, அவையெல்லாம் துவைத்துக் கொடியில் காய்ந்து கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

அவற்றைக் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, "ஆச்சி! ஏன் என் ட்ரெஸ்லாம் தோச்சிருக்கீங்க? உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்? நானே

செஞ்சுப்பேனே!'' என்று ஆதங்கத்துடன் கேட்ட தான்யாவின் கையில், காஃபி டம்ளரைத் திணித்தார்.

அன்பாக அவளைப் பார்த்து புன்னகைத்தபடி, "இரண்டு துணியைத் துவைக்கிறது ஒரு வேலையா? நா தான் சிவப்பியை கசக்கிப் போடச் சொன்னேன். நீ வசதியான வூட்டுப் புள்ள... இங்கன கிணத்துல தண்ணி எடுத்து துவைக்கிறது எல்லாம், புதுசா செய்யும்போது கஷ்டமாதான இருக்கும்?'' என்றார் ஆச்சி.

"ஆச்சி! நாங்க வசதியாயிருந்தாலும், சின்ன வயசுல இருந்து, நாங்க சாப்பிட்ட தட்டை... நாங்களே தான் கழுவணும்! தேவைன்னா, எங்க ட்ரெஸ்ஸை நாங்களேதான் துவைக்கணும்! எங்க வேலையெல்லாம் நாங்களே பாத்துக்கணும்னு, அம்மா ரொம்பக் கண்டிப்பாயிருப்பாங்க. படிக்கும்போது கூட, ஸ்கூல் பஸ்லதான் போவோம். அன்னாவுக்காவது கொஞ்சம் ரிலாக்ஸேஷன் உண்டு. ஆனா, நான் பெரிய பொண்ணுன்னு, எப்பவுமே கண்டிப்புதான். அதனால, இதெல்லாம் எனக்குக் கஷ்டமாயில்ல" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் தான்யா.

''அன்னா யாரும்மா? ''

''அன்னான்னா.. அன்னலஷ்மி! என்னோட தங்கை. அப்பாவும் அம்மாவும் விவாசாயக் குடும்பத்துல இருந்து வந்ததுனுல, எங்க ரெண்டு பேருக்கும் தான்யலஷ்மி, அன்னலஷ்மின்னு பேரு வெச்சாரு எங்கப்பா. நான் இந்தப் படிப்பு படிக்கிறதுல, எங்க அப்பாவுக்கு ரொம்பச் சந்தோஷம்.''

''உங்கப்பா, அப்ப எந்த ஊருலம்மா இருந்தாரு? '

''எங்கப்பாவுக்கு, இங்க சிவகங்கை பக்கம்னு சொல்வாரு. ஏனோ தெரியல... அவங்களோட பொறந்த ஊரைப் பத்தி, ரொம்ப இரண்டு பேருமே அதிகமா சொன்னதில்ல.''

ஆச்சி மேலும்கூட அவளது குடும்பத்தைப் பற்றி விசாரித்திருப்பார். ஆனால், பூமிநாதன் வரும் காலடியோசை கேட்டதும், பேச்சை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தனர் இருவரும்.

சமையலறையின் உள்ளே நுழைந்த பூமிநாதன், தான்யாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, எதுவும் பேசாமல் ஆச்சியிடம் திரும்பி, 'காப்பி தாங்க ஆச்சி!' என்று சொல்லிவிட்டு அவளெதிரில் தரையில் அமர்ந்து கொண்டான்.

வந்ததிலிருந்து இதுவரை அவன் தானாக அவளிடம் எதுவும் பேசியதில்லை என்பதால் அமைதியாக உட்கார்ந்திருப்பதும் ஒரு சங்கடமான சூழ்நிலையை அவளுக்கு உருவாக்கியது. அதுவரை சகஜமாக இருந்த சூழல் மாறி, ஒரு தர்மசங்கடமான சூழல் நிலவியது.

ஆச்சிக்கு எதுவும் தெரியவில்லை போலும். அவர் எழுந்து காஃபி கலக்கப் போக, தான்யா எந்தப் பக்கம் பார்ப்பது என்று யோசித்தாள். பூமிக்கு அப்படி எதுவும் சங்கடம் இல்லை. அவன் நிதானமாக அவளைப் பார்வையால் அளவிட்டுக் கொண்டிருந்தான்.

லேசாகக் கலைந்திருந்த தலை, படுத்திருந்ததால்

நலுங்கிய உடை, வெறுமே முகம் கழுவி ஒட்ட வைத்த பொட்டு என்று, தான் சுமாராக இருப்பதுபோல் தோன்றியது தான்யாவிற்கு. இதுவரை அவள் தன் தோற்றத்தைப் பற்றி, பெரியதாக அலட்டிக் கொண்டதில்லை. இன்று ஏன் இப்படித் தோன்றுகிறது என்றும் தெரியவில்லை.

அதைப்பற்றி மேலும் எதையும் யோசிக்க விரும்பாமல், தயக்கத்துடன் பேச்சைத் துவக்கினாள்.

''வந்து.... நீங்க மெடிசின் வாங்கித் தந்ததுக்கு, ரொம்பத் தாங்க்ஸ்!''

''ம்....'

''இப்ப, கொஞ்சம் வலி கூட பரவாயில்லை... பொறுத்துக் கொள்ளக் கூடிய அளவுல இருக்கு.''

அதற்கு பதில் எதுவும் சொல்லாமல், ஆச்சி கொடுத்த காஃபியை வாங்கிய அவன், மௌனமாகக் குடிக்க ஆரம்பித்தான். தான்யாவிற்குத் தான், 'ஙே' என்று விழிக்கத் தோன்றியது.

சுட்டு விரலைத் தன் முகத்திற்கு நேரே நீட்டி, ''உனக்கு இது தேவையா?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. 'இவன் பெரிய இவன்!' என்று கடுப்பாகவும் இருந்தது. இது போன்ற உணர்வுகள், இங்கு வருவதற்கு முன்னால் அவளுக்குத் தோன்றியதே இல்லை. இங்கு வந்தபின், தோன்றுவது நிற்கவே இல்லை.

'இனிமேல், தானாக எதுவும் பேசக்கூடாது. அவன் ஏதாவது கேட்டால் மட்டுமே, கேட்ட கேள்விக்கு

அளவாகப் பதில் சொல்லிவிட்டு, நகர்ந்து விடவேண்டும். இந்த ஆறு மாதங்களை எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டு தள்ளிவிட்டு, ஓடியே போக வேண்டும்.' ஆனால், அவள் மனதுக்குள் இவ்வளவு புயல் அடிக்கக் காரணமானவனோ, எந்தக் கவலையும் இல்லாமல் ஆச்சியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"ஆச்சி! நாளைக்குச் சென்னைக்குப் போற வேலையிருக்கு. போயிட்டு வர, ரெண்டு மூணு நாள் ஆகும். காலையில சீக்கிரமே கிளம்பிடுவேன்."

"சரிப்பா! அதுக்குள்ள, இந்தப் புள்ளைக்கும் கால்நோவு சரியாப் போவும். வந்ததும், நீ இந்தப் புள்ளய வயக்காட்டுப் பக்கம் கூட்டிப் போய் சுத்திக் காட்டலாம்."

அவள் அந்த இடத்திலேயே இல்லாதது போல இருவரும் பேசிக்கொண்டது, அவள் கடுப்பை மேலும் அதிகரித்தது. அதற்கு மேலும் அங்கே இருந்தால் ஏதாவது சொல்லி விடப் போகிறோம் என்று பயந்து, 'இதோ வரேன் ஆச்சி!' என்று முணுமுணுத்தபடி அந்த இடத்தை விட்டு எழுந்து, மெள்ள விந்தி விந்தி நடந்து வெளியேறினாள். திரும்பிப் பார்த்திருந்தால், அவன் புன்னகையைக் கண்டு என்ன செய்திருப்பாளோ?

இரவும் அவள் சாப்பிட வரவில்லை. 'வயிறு சரியில்லை' என்று காரணம் கூறிவிட்டாள். அதற்காக பூமிநாதன் பெரியதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆச்சிதான், 'பாலாவது சாப்பிடும்மா' என்று பாலைக் கொண்டுவந்து அறையில் கொடுத்து விட்டுப்போனார்.

# 7

**கா**லையில் தான்யா எழுந்து வந்தபோது பூமிநாதன் கிளம்பிப் போயிருந்தான்.

'அவன் கிளம்பி விட்டானா?' என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவெல்லாம் தான்யாவிற்கு விருப்பம் இல்லை. அவன் வீட்டில் எங்கும் இல்லாததைப் பார்த்து, அவளாக முடிவு செய்து கொண்டதுதான்.

குளிப்பதற்காக்க் கிணற்றடிக்குப் போனபோது, இரண்டு வாளிகளில் நீர் நிரப்பி பாத்ரூமில் காத்திருந்தது, 'பூமிநாதன்தான் அதைச் செய்திருப் பானோ' என்று ஒரு நொடி சந்தேகம் வந்தாலும், 'சேச்சே! ஆச்சிதான் சிகப்பியைச் செய்யச் சொல்லியிருக்க வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டாள்.

'ஆனாலும், அவன் பேச்சில் எப்போதும் அக்கறை காட்டியதில்லையே தவிர, அவன் நடவடிக்கைகள் மனிதத்தன்மையுடன் தானே இருந்தது? கிணற்றில் நீர் இறைத்து வைத்தது, முள் குத்தியபோது முதலுதவி செய்தது, அதன்பிறகு அவள் வீட்டுக்கு வந்து விட்டாளா என்று போன் செய்து கேட்டது, ஆயின்மென்ட் வாங்கித்தந்தது என்று செயலில் காட்டத்தானே செய்தான்?

அவனுக்கு என்ன தான் பிரச்சனை?'

யோசித்தாலும், எதுவும் புரியவில்லை தான்யாவிற்கு. இதுபோன்ற வினோதமான நபர்களை அவள் பார்த்ததேயில்லையே! புரிந்து கொள்ளவும் முடியவில்லையே!

ஆனால், அவனைப் புரிந்து கொள்ள அந்த இரண்டு நாட்களும் அவளுக்கு நிறைய வாய்ப்புக்களை அளித்தன.

அவள் குளித்து விட்டு வரும்போது, வாசலில் யாரோ மணி அடிக்கும் சத்தம் கேட்டது. ஆச்சி உள்ளே இருந்ததால், 'தானே போய்ப் பார்ப்போம்' என்று நினைத்துக் கதவைத் திறந்தாள்.

வாசலில் ஒரு முதியவர் குப்பை வண்டியில் வந்திருந்தார். பின்புறம் ஒரு பெரிய டப் நிறைய காய்கறிக் கழிவுகள் இருந்தன. வீடு வீடாக குப்பைகள் வாங்குபவர் போலிருக்கிறது என்று அதைப் பெரிதாக நினைக்காமல், உள்ளே போய் ஆச்சியிடம் சொன்னாள்.

ஆச்சி சிகப்பியிடம் குப்பையைக் கொடுக்கச் சொல்லாமல், தானே கொண்டு போனார். போனவர் குப்பையைக் கொடுத்துவிட்டு, 'என்ன முத்தையா? மாடு வாங்கணும்னியே... வாங்க, காசு தகைஞ்சுச்சா?'' என்று விசாரித்தது, வெளியில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த தான்யாவின் காதில் கேட்டது.

''இல்லை ஆச்சி, இன்னொரு மாசம் ஆகுமுன்னு நெனக்கேன்'' என்றவர் வண்டியை நகர்த்தும்போதுதான், அவருக்கு ஒரு கால் பாதம் சிதைந்திருப்பதைப் பார்த்தாள்.

'பரவாயில்லையே! இந்த நிலையில்கூட உழைத்துச் சாப்பிட வேண்டுமென்று நினைக்கிறாரே!' என்று மனசுக்குள் பாராட்டியவள், உள்ளே ஆச்சி வந்ததும் மனதில் நினைத்ததைச் சொன்னாள்.

'ஆரு! இந்த முத்தையனையா சொல்றீக? ஒரு காலத்துல அவன் ஒரு வேலைக்கும் போகாம, குடிச்சுப் போட்டு வீதியில் விழுந்து கெடப்பான். இவன நம்பி இவன் ஆத்தா, பொண்டாட்டி, புள்ளைக இருந்தும், எதயும் கவனிக்கல. அவனுக்கு இருந்த கால் காணி நிலமும், கட்டாந்தரையா வெவசாயம் பண்ண புண்ணியமில்லாம போச்சு. உழைக்க அவனுக்கு மனசில்லை! பொண்டாட்டி, புள்ளைக வயல்வேல பாத்து கொண்டுகிட்டு, வர காச குடிச்சு அழிச்சான்.

ஒரு நா குடிச்சுட்டு ரோடுல கிடக்கயில வண்டி ஏறி கால் ஊனமாகிப் போச்சு. நம்ம பூமித்தம்பி தேன் இப்படி வீடு வீடா காய்கறிக் குப்பைகளை வாங்கி, அவனோட வயலுல குழி தோண்டி... அதுல கொட்டி உரம் போடுற வழியைச் சொல்லிக் குடுத்தாப்புல! இப்ப அந்த உரத்தை வித்து, ஓரளவு வருமானம் பாக்குறாப்புல.

அவன் இவன்றேனேன்னு பாக்கறீயளா? அவனுக்கு வயசு கம்மிதான். குடிச்சு பாழாப் போனதால, வயசாயி தெரியுதான்'' என ஆச்சியை முந்திக் கொண்டு சிகப்பி பதில் சொன்னாள்.

அவள் ஒரு வரியில் பூமியின் உதவியைச் சொன்னாலும், அதன் பின்னால் இருந்த உழைப்பை தான்யாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஆச்சி புன்னகையுடன், 'சிகப்பி எதுக்கால, யாரும் பூமியை நாக்குமேல பல்லப்போட்டு பேசிப்புட முடியாது! பாஞ்சுப்புடுவா! என்றார்.

'பின்ன என்ன? அறுத்த கைக்கு சுண்ணாம்பு தர யோசிக்கிற இந்தக் காலத்துல, பூமித் தம்பி இல்லன்னா... இந்த ஊரும் பாழாத் தான் போயிருக்கும்! இந்த ஊருல எத்தனையோ பேருக்கு வாழ்வு, நம்ப தம்பியால தேன்.''

'பூமிநாதனின் தலைமை ரசிகர் மன்றச் செயலாளர் சிகப்பிதான் போலிருக்கே!' என்று நினைத்து மனதில் சிரித்துக் கொண்டே தான்யா, அவள் கூறுவதை கவனிக்க ஆரம்பித்தாள்.

'பூமிக்கு விவசாயம் தான் உசிரு! இந்த ஊருக்குள்ள ஒரு பூச்சி மருந்தோ, ரசாயன உரமோ வரக்கூடாதுன்னு புடிவாதம். மண்ண பாழாக்குற பளாஸ்டிக் பேப்பரும் வரக்கூடாதுன்னு அம்புட்டு பாடு. இயல்பாவே விவசாயம் ரத்தத்துல ஊறுனாலும், அவன் அப்பன்.... அதான் என் புள்ள... கான்சரால போனப்போ, டாக்டரெல்லாம் இந்த பூச்சி மருந்துதான் காரணமுன்னாக.

அவன் போனதை நினைச்சு நினைச்சு, என் மருமவளும் போய்ச் சேந்துபுட்டா. நா தான், இப்ப இவனுக்காக உசிரைக் கையில் புடிச்சுகிட்டு இருக்கேன். தன் அப்பன் போனப்புல, இனி ஒரு உசிரு போகக்கூடாதுன்னு... அவன் மனசுல ஒரு வைராக்கியம்! அதுக்குத் தேன் அசராம பாடுபடுதான்.

அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணிப்புடணும்னு

சொல்லிக்கிட்டு இருக்குதேன். அவன் ஊரு பிரச்சனையை தலையில போட்டுகிட்டு, நான் சொல்லுறத, காது குடுக்க மாட்டேங்கான்,'

'அவர் எல்லாருக்கும் நல்லதுதானே ஆச்சி செய்யராரு. இதுல பிரச்சனை எங்க வரும்? "

'அது என்னம்மா அப்படிக் கேட்டுப்புட்ட? எங்க எது நடந்தாலும், அதை எதுக்க யாராவது வரமாட்டாங்களா? இங்க விளையறத அந்தக் கம்ப்யூட்டர் பொட்டில போட்டு, வெளில வியாபாரிகளப் புடிச்சு... நல்ல விலைக்கு வித்துக் குடுத்தான். அது, இங்கன உள்ள வியாபாரிகளுக்குப் பொறுக்குமா? பெரிய ப்ரச்சனை ஆகிப்போச்சு.

ஊருக்குள்ள முக்கிய தலைகளைக் கலக்காம, சொந்தக் காச செலவழிச்சு படிக்கிற கூடம், வெளக்கு வசதின்னு செஞ்சான். இந்த வீட்டுல கூட, கரண்ட் போனா அம்புட்டு தேன்! அதனால, ஊருக்குள்ள தம்பிக்குச் செல்வாக்கு பெருகிப்போச்சுன்னு, பெரிய ஆளுகளோட வாட்டு! (சண்டை)

நானும் சொல்லுதேன்! நீ உன் ஆராய்ச்சி உண்டு... விவசாயம் உண்டுன்னு இரு! ஒரு கல்யாணத்தப் பண்ணிகிட்டு, பொழப்பப் பாருன்னு சொல்லுறதைக் கேக்குரானா? அவன் செய்யுறது... நல்ல காரியம் தேன்! ஆனா, உசிருக்கு ஆபத்தானது! மனசு பதைக்குது. அடிக்கடி சொன்னா, இந்தப் புள்ளக்கி புடிக்கல! நான் என்ன செய்யிறது?'

தான்யாவிற்கு அவர் சொன்னதிலிருந்தே,

சொல்லாமல் விட்டதும் தெளிவாகப் புரிந்தது. ஆச்சி சொல்வது போல, அவன் தன் உழைப்பை விவசாயத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லையே! ஊரிலுள்ள அத்தனைபேரும் நன்றாக வாழ வேண்டுமென்று நினைப்பதற்கு, எவ்வளவு பெரிய மனது வேண்டும்?

பத்து பேரை ஒரே நேரத்தில் தூக்கிப் போட்டு உதைத்தால்தான், ஹீரோவா என்ன? காந்திஜி, மதர் தெரஸா போல, பார்க்க எளிமையாக உடல் வலிமையற்று இருந்தாலும், அவர்களுடைய வானளாவிய செய்கையால்தானே, அவர்கள் உலக அளவில் அறியப்படுகிறார்கள்?

நல்லதையே சொல்லிக் கொடுத்து வளர்க்கப்பட்டதால், தான்யாவின் மனதில் பூமிநாதனின் நற்குணங்கள், நல்லதொரு பாதிப்பை ஏற்படுத்தியது. ஏனோ, அந்த நேரத்தில் பூமிநாதன் அவளை நடத்திய விதம் கூட பெரியதாகத் தெரியவில்லை.

இரண்டு நாட்கள் ஓய்வெடுத்தபிறகு, தான்யாவிற்கு கால்வலி வெகுவாகக் குறைந்திருந்தது. இந்த இரண்டு நாட்களிலும், சிறிது நேரம் குழந்தைகளுடன் பொழுதைக் கழித்தாள். இணையத்திலிருக்கும் பல நல்ல கட்டுரைகள், படங்கள் போன்றவற்றை, தான் கொண்டு வந்த கம்ப்யூட்டரில் அவர்களுக்குக் காட்டினாள். குழந்தைகளுக்கும் நன்றாகப் பொழுது போனது. அந்தக் குழந்தைகளோடு, சிலரின் பெற்றோர் கூட பழக்கமாயினர்.

# 8

மூன்று நாட்கள் கழித்து பூமிநாதன் திரும்பி வந்தபோது, தான்யா நன்றாகவே தேறியிருந்தாள். அதனால், மறுநாள் காலையில் அவளை மீண்டும் தன் வயலைக் காட்ட அழைத்துச் சென்றான். வரப்பின் அருகில் வந்ததும் தான்யா தன் செருப்பைக் கழற்றி கையில் எடுத்துக் கொள்ள முயல, பூமிநாதன் அவளைத் தடுத்தான்.

'வேண்டாம்மா...! நீ செருப்பில்லாம வந்து, திரும்ப எதாவது ஆகி உனக்கு அடிபட்டா, இந்த ஆறு மாசப் பயிற்சி... ஆறு வருஷப் பயிற்சியா ஆகிடும். நானே முடிஞ்ச வரைக்கும் சீக்கிரம் முடிச்சு, உன்னை ஊருக்குப் பேக் பண்ணப் பாத்துட்டு இருக்கேன்! இதுல இது வேறயா?'

அப்படிச் சொல்லும்போதே, அவன் முகத்தில் ஏளனமும், அலட்சியமும் ஒருவிதமான அந்நிய பாவமும் கூத்தாடின. 'ஐயோ!' என்றிருந்தது தான்யாவிற்கு.

'தான்யா! நீ ரொம்ப நல்லவடி! பூமிநாதன் சார் எவ்ளோ குடுத்தாலும் சளைக்காம வாங்கிக்கிறியே!' என்று மனம் சிரித்தது. 'பூமிநாதன் போட்ட ஆர்டரில், மனதுக்குள் கூட மரியாதையாகத் தான் திட்ட வருகிறது' என்று கூட நினைத்தாள் தான்யா.

'எதிர்த்து ஒரு வார்த்தை திட்டக்கூட, தனக்குத்

தோன்றவில்லையே! அவன் என்ன சொன்னாலும், இப்படி மங்குணியாகவே இருக்கிறோமே!' என்று தன்னையே அவள் நொந்து கொண்ட நேரத்தில், பூமிநாதனும் மனதுக்குள் சலித்துக் கொண்டான்.

'நாம்பளும் இவ வந்ததுலருந்து ஊருக்குத் திருப்பித் துரத்தறதுக்காக, கண்டபடி போட்டுத் தாக்கறோம்... எவ்வளவு சொன்னாலும், வாயைக்கூடத் திறக்க மாட்டேங்குறாளே! அநியாயத்துக்கு ரொம்ப நல்லவளா இருக்காளே!'

திட்டுவதிலும் இருவரும் ஒரே மாதிரி நினைத்ததே, இருவருக்கும் தெரியவில்லை. தான்யா எதுவும் சொல்லப் போவதில்லை என்பது தெரிந்ததும், பூமிநாதன் திரும்பி வயலில் நடக்க ஆரம்பித்தான்.

போகிற வழியில் ஆங்காங்கே நின்று, அங்கு போட்டிருந்த பயிர்கள், உரம், நீர் பாய்ச்சும் முறை, பயிர்க் காலம் என்ற பல தகவல்களையும் அவன் சொல்லச் சொல்ல, உடனே அதைக் குறிப்பெடுத்துக் கொணடாள் தான்யா.

அவனுடைய ஆராய்ச்சி முடிவுகளைக் கேட்டறிந்த பின்பு, இந்தியாவில் மண் வளம், நீர் வளம் குறைந்தாலும், இவனைப் போன்ற விஞ்ஞானிகள் இருக்கும்வரையில், இந்தியாவுக்கு ஒரு குறையும் வராதென்று தோன்றியது. அவள் மனதில், அவன்மேல் மிகப் பெரிய மதிப்பும் உருவானது.

காலை ஐந்துமணிக்கே வெயிலுக்கு முன் அவர்கள் வயல்வெளிக்கு வந்திருந்தனர். காலை மணி ஒன்பதை

நெருங்கிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே வயல்வேலை செய்தவர்கள் சற்று ஓய்வெடுக்கவும், கஞ்சி குடிக்கவும் நிழலில் ஒதுங்கியதால், யாரும் அருகில் இல்லை.

தான்யாவை அது வரை நிம்மதியாக இருக்கவிட்டு, ப்ரேக் எடுத்துக் கொண்டிருந்த விதி, மீண்டும் ட்யூட்டியில் சேர்ந்தது.

தான்யா போட்டிருந்த செருப்பில் மரத்தால் ஆன ஹீல்ஸ் வைத்திருந்தது. அதுவரை வரப்பில் புற்கள் இருந்ததால், அவளுக்கு வழுக்கவில்லை. அவர்கள் பேசி முடித்துவிட்டு சற்று தூரம் நடந்தபோது, அந்த களிமண் வரப்பில் புல் இல்லாமல் தண்ணீர் பாய்ச்சி ஈரமாக இருந்ததால், செருப்பு வழுக்கியது.

இரு பறமும் சேறு நிறைந்த வயல்வெளியாக இருக்கவும், அதில் விழுந்து விடாமல் இருக்க, முன்னால் சென்று கொண்டிருந்த பூமிநாதனின் தோளைப் பிடித்துச் சமாளித்து விடலாம் என்றுதான் தான்யா நினைத்தாள். ஆனால், அடுத்ததாக எடுத்து வைத்த அடியும் எதிர்பாராமல் வழுக்கிவிட, இரண்டு கைகளாலும் பூமிநாதனின் வயிற்றை சுற்றி அணைத்தபடி, அவன் முதுகில் முகம் மோத நின்றாள்.

மெத்தென்ற உடல், திடுமென்று தன் முதுகை அழுத்த, ஒரு நிமிடம் அப்படியே நின்றான் பூமிநாதன். இந்தப் புது அனுபவம், அவன் உடலில் சிலிர்ப்பை உண்டாக்கியது.

வந்ததிலிருந்து இந்தப் பெண்ணோடு பேச்சிலும், செயலிலும் மோதலாகவே இருக்கிறதே! முழிச்சிக்கடா

பூமி! அலர்ட்டா இருந்துக்க!' என்று உள் மனசு கூவ, இரு கைகளாலும் தன்னைச் சுற்றியிருந்த தான்யாவின் கைகளைப் பிரித்து விட்டான். திரும்பி அவளைப் பார்த்தபோது, அவள் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தது தெரிந்தது. கோபமாக பேசத் திறந்த வாயைச் சட்டென மூடிக்கொண்டு, திரும்பி நடக்க ஆரம்பித்தான் அவன்.

தான்யாவிற்கு தலைதூக்க முடியாத அவமானமும், அடுத்து என்ன மாதிரி திட்டப் போகிறானோ என்ற பயமும், கண்களில் கண்ணீரை வரவழைத்தது. பூமிநாதன் அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு எதுவும் பேசாமல் முன்னால் நடக்க, தான்யா அவனைப் பின்தொடர்ந்தாள். கண்களின் கலக்கத்தை மறைக்க, கைப்பையில் வைத்திருந்த குளிர் கண்ணடியை அணிந்து கொண்டாள்.

பூமிநாதனுக்கும் சங்கடமாக இருந்தது. அவள் விவசாய நுணுக்கங்களைப் பற்றிக் கற்றுக் கொள்ள வந்ததில் அவனுக்கு எரிச்சல்தான். பெரிய நடிகர் என்பதால், பணத்தாலும், சிபாரிசாலும் கட்டிப் போட்டதும் கடுப்புதான்.

இந்தப் பெண் சும்மா சீன் போட இங்கே வந்திருக்கிறாள் என்று நினைத்தால், உண்மையிலேயே அவளுக்கு விவசாயத்தில் ஆர்வம் இருக்கிறதே! இங்குள்ள வசதிக் குறைவுகளையும் அவள் பெரிதுபடுத்தவில்லையே! கிணற்றில் தண்ணீர் எடுக்கிறாள்; கடும் வெயிலிலும் ஏசி இல்லாமல் இருக்கிறாள்; ஏன்... மின் தடையைக் கூட,

பொருட்படுத்தவில்லையே!

ரொம்பப் பணத்திமிரைக் காட்டுவாள் என்று நினைத்தால், அவள் சின்னக் குழந்தைகளுடன், அவர்கள் அழுக்காக இருந்தாலும், முகம் சுளிக்காமல் இனிமையாகப் பழகுகிறாளே! ஏன்... நான் இத்தனை முறை அவள் மனம் நோகும்படி சொல்லும்போதும், அவள் வாயே திறக்கவில்லையே!

இப்போதும், நான் திட்டிவிடுவேனோ என்ற பயத்தில் அவளுக்கு கண்ணீர் வருகிறதே தவிர, 'யோவ்! உன்னை என்ன ஆசையாவா கட்டிப் புடிச்சேன்? என்னவோ கீழே விழாம இருக்கப் புடிச்சா, ரொம்பத் தான்!' என்று கத்தவில்லையே!

'அவளுடைய அழகுக்கும் வசதிக்கும் எவ்வளவோ பெரிய ஆளெல்லாம் ஜொள்ளுவிடுவான். நாம ரொம்பவே கெடுபிடியா இருந்துட்டோம் போலிருக்கே!' என்று அவனது மனசாட்சி குத்தியது. மனதிற்குள், தன் நடத்தைக்காக அவளிடம் மன்னிப்பு கேட்டாலும், ஈகோ அவனை வெளியே கேட்கவிடாமல் தடுத்தது.

இருவரும் வயல் வரப்பை விட்டு மெயின் ரோட்டுக்கு வரும்வரை, அமைதியாக இருந்தனர். ரோட்டிற்கு வந்தபிறகு, என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு, அவள் வந்த முதல் நாளன்றே கேட்டிருக்க வேண்டிய கேள்விகளை, அப்போது கேட்க ஆரம்பித்தான்.

''வந்து... உனக்குச் செடிகள் ரொம்ப இஷ்டமா?''

மௌனமாக தனக்குள் யோசித்தபடி வந்த தான்யா,

திடீரென்று அவன் பேசியதைக் கேட்டதும் ஆச்சரியப் பட்டாலும், கேள்விக்கு பதில் சொன்னாள்.

''ம். சின்ன வயசுலருந்தே ரொம்ப இஷ்டம். அதனால்தான், அப்பா மெடிசின், இஞ்சினியரிங் எல்லாம் படிக்கச் சொன்னாலும், நான் பிடிவாதமா இந்தக் கோர்ஸை எடுத்தேன். அப்பாவுக்கு, அடுத்தாக நான் அக்ரிகல்ச்சர் இஞ்சினியரிங் படிக்கணும்னு ஆசை. ஆனா, எனக்கு எல்லாச் செடிகள் மேலயும் ஆசை. எனக்கு மூலிகைச் செடிகளைப் பற்றி ஆராய்ச்சி பண்ணணும்னு ஆசை.

இப்பச் செடியோட தண்டுலயிருந்து இழையெடுத்து துணி செய்யறாங்க இல்லையா? அதுபோல, செடியிலிருந்து சத்துக்களை எடுத்து, காப்ஸ்யூல் மாதிரி செய்து, நோஞ்சானா இருக்கிற குழந்தைகளுக்குக் கொடுக்கணும். இன்னும் செடிகளில் என்னென்ன முடியுமோ, அதெல்லாம் செய்யணும், அதுக்கு, செடிகளை எப்படிப் பராமரிக்கணும்னு தெரியணும் இல்லையா? அதனாலதான் இந்தப் பயிற்சி.''

தனது ஒரு வரிக் கேள்விக்கு, தன் ஒட்டு மொத்த லட்சியங்களையும் கொட்டிய தான்யாவைப் பார்க்கையில், சிரிப்பு வந்தது அவனுக்கு. பொதுவாக வளவளவென்று பேச வராது. ஆனால் ஆச்சி, சிகப்பி முதல் குழந்தைகள் வரை, தான்யா விடாமல் பேசுவதை அவன் ஏற்கனவே பார்த்திருக்கிறானே! அவள் இயல்பாகவே யாரோடும் நட்போடு பழகும் பெண்

என்பதைப் புரிந்து கொண்டான்.

பதில் சொல்லிவிட்டு, அவன் முகத்தை ஆவலோடு பார்த்தபடி வந்த தான்யாவை, அதற்கு மேல் கோபமாக நினைக்கவே முடியவில்லை அவனால். இருவரும் அவர்களுக்கு மிகவும் பிடித்த, செடி கொடிகளைப் பற்றிப் பேசியபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

வீட்டுக்குள் நுழைந்த இருவரையும் பார்த்த ஆச்சியின் மனதில், 'நல்ல ஜோடி!' என்று தோன்றியது. ஆனால் அடுத்த நொடியே, வசதியான வீட்டுப் பொண்ணு அவ... அவங்க, நம்ம வீட்டுலயெல்லாம் பொண்ணு கொடுப்பாங்களா? யாருக்கு எங்க முடிச்சு போட்டிருக்கோ?' என்று நினைத்தார்.

ஒரு பெருமூச்சுடன், 'வாங்கப்பு! காலையில கொஞ்சமா கஞ்சி குடிச்சுட்டுப் போனீக. இப்ப, சூடா பலகாரம் சாப்பிடுங்க!' என்று மல்லிகை போன்ற இட்லிகளையும், தக்காளி சட்னியையும் எடுத்து வந்து பரிமாறினார்.

இரண்டு இட்டிலிகளை சாப்பிட்டபின்னர், மூன்றாவது இட்டிலிக்கே விழித்துக் கொண்டிருந்த தான்யா, பூமிநாதன் சர்வசாதாரணமாக எட்டு இட்லிகளைச் சாப்பிடுவதைப் பார்த்து, அசந்து போனாள். 'அதிக உடலுழைப்பு இருப்பதால், அவனுக்கு நன்கு பசியெடுக்கிறது போலும்!' என்று நினைத்துக் கொண்டாள்.

# 9

**தா**ன்யா இங்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. பூமிநாதனுடன் ஒரு மாதிரியாக சுமூகமான சூழ்நிலை நீடித்தது. இருவரும் காலையில் ஆறு மணியிலிருந்து ஒன்பதரை மணி வரை, வயல்வெளிகளைப் பார்வையிடச் செல்வார்கள். திரும்பி வந்ததும் பூமிநாதன் அவனது வேலையைப் பார்க்கப் போய்விடுவான்.

தான்யா தினமும் இரண்டு மணி நேரம் குழந்தைகளுடன் பொழுதைக் கழிப்பாள். சில சமயம் பூமிநாதனும் அந்த நேரத்தில் வருவான். அவர்களுக்குப் பல விஷயங்கள் விளையாட்டாகச் சொல்லிக் கொடுப்பாள். பிறகு, பூமிநாதன் தரும் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்து, குறிப்பு எடுத்துக் கொள்வாள். அவன் வந்தபிறகு, அதில் அவளுக்கு உள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வாள்.

அவளுடைய பொழுதுகள் இப்போது உற்சாகமாகக் கழிந்தன. வந்த அன்றிலிருந்தே தினமும் அப்பா, அம்மாவிடமும் தங்கையிடமும் பேசினாலும், முன்பெல்லாம் தனது வருத்தத்தை மறைத்தே பேசியவளுக்கு, இப்போது பூமிநாதனுக்கும் அவளுக்குமிடையே இருந்த பனிப் போர் மறைந்துவிட, பேச்சு முழுவதும் அவன் புராணம் தான்.

'அவன் விவசாயத்தில் எவ்வாறு வல்லுனராக இருக்கிறான்? அவனுடைய சமூக அக்கறை எவ்வளவு

உயர்ந்தது?' என்று அவன் பெருமைதான். ஆச்சியைப் பற்றியும் ஒரே புகழ்ச்சி தான்.

'அம்மா! நீங்க என்னைப் பத்திக் கவலைப்படாதீங்க! ஆச்சி உங்களை மாதிரியே, ரொம்ப அக்கறையா பாத்துக்கறாங்க!'' என்று அம்மாவுக்கு ஆறுதல் வேறு.

மகளின் பேச்சைக் கேட்கக் கேட்க, பலராமின் முகத்தில் மர்மப் புன்னகை தான். தான் எடுத்த செல்ஃஃபியையும், அனுபவங்களையும் தோழிகளிடமும் பகிர்ந்து கொண்டாள்.

ஆச்சிக்கு அன்று காலை முதலே சோர்வாக இருந்தது. எதையும் வெளியே காட்டாமல் வேலை செய்தவர், மாலை நேரமாக ஆக, படுத்தே விட்டார். சிகப்பியும் அன்று மதியமே அவளுடைய உறவினரைப் பார்க்கப் போய்விட, தான்யா பயந்துபோனாள்.

ஆச்சி அவளை அழைத்து, 'ஒண்ணுமில்லம்மா! பயப்படாதே! லேசா... ஜூரம் போல தான் இருக்கு. மாத்திரை போட்டால் சரியாயிடும். இந்தத் தம்பி தான், ராத்திரிச் சாப்பாட்டுக்கு வருவான். நீயும் சாப்பிடணும்மா! இந்தச் சிகப்பியும் இன்னிக்குனு ஊருல இல்ல! என்னம்மா செய்யிறது? என்று கவலையாகக் கேட்டார்.

''நீங்க அதைப் பற்றிக் கவலைப்படாதீங்க ஆச்சி! எனக்குச் சூப்பரா சமைக்கத் தெரியும். இப்ப, உங்களுக்குக் கஞ்சியை மட்டும் எப்படி வைக்கணும்னு சொல்லுங்க. நான் கஞ்சி குடுத்ததும், குடிச்சிட்டு நீங்க

மாத்திரைப் போட்டுட்டுத் தூங்குங்க. மத்ததை, நான் பார்த்துக்கறேன்!' என்று ஆறுதல் சொன்னாள்.

ஆச்சி ஏற்கனவே உடைத்து வைத்திருந்த அரிசிக் கஞ்சிக் குருணையை, அவர் சொன்ன அளவுக்குப் போட்டு நீர் ஊற்றி, கிட்டவே நின்று காய்ச்சி உப்பு போட்டு, அவரிடம் தந்து குடிக்க வைத்தாள். கஞ்சி குடித்து மாத்திரை போட்டதும் ஆச்சி உறங்கிவிட, 'இரவு உணவுக்கு என்ன செய்வது?' என்று யோசித்தாள்.

இட்லி, தோசை மாவும் இல்லை. அங்கு அடிக்கடி கரண்ட் தட்டுப்பாடு இருப்பதால், நிறைய அரைத்து வைக்கவும் முடியவில்லை. பூமிநாதன் இரவு நேரத்தில் சாப்பாட்டை மட்டுமே சாப்பிடுவதை, தான்யாவே பார்த்திருக்கிறாள். அவளுக்கு மட்டும்தான், ஆச்சி டிபன் செய்து தருவார்.

தான்யாவுக்குச் சின்னச்சின்ன வேலைகள் தெரியுமே தவிர, சமைக்கவெல்லாம் தெரியாது. சிறிது நேரம் சிந்தித்தவளுக்கு, மின்னலாக யோசனையொன்று தோன்றியது.

தேவையான காய்கறிகளை எடுத்துக் கழுவி வெட்டியவள், பாத்திரத்தை எடுத்து கேஸ் அடுப்பில் வைத்து சமைத்து முடித்தாள். உணவு ஆறிவிடாமல் இருக்க, பெரிய ஹாட்பேக் ஒன்றை எடுத்து அதில் போட்டு மூடிவைத்தாள்.

பூமிநாதன், எட்டரை மணிக்குத்தான் வந்தான். அவனிடம் ஆச்சியின் உடல் நிலையைப் பற்றி தான்யா சொல்லவும், கவலையோடு அவரது அறைக்குப்

போனான். அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப் பார்த்து வெளியில் வந்து தான்யாவிடம், 'ஆச்சி சாப்பிட்டாரா?'' என்ற விவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். ஆச்சி கஞ்சியைக் குடித்துவிட்டு, மாத்திரையும் சாப்பிட்டதை அவள் சொல்லவும், சரியென்று தலையை ஆட்டிக் கொண்டான்.

'வரீங்களா...? சாப்பிடலாம்.'

'சாப்பாடா! ஏது? ஆச்சி உடம்பு சரியில்லாத போதும், சாப்பாடு வேற செஞ்சாங்களா?'

தான்யா இடுப்பில் கையை வைத்துக் கொண்டு அவனை முறைத்தபடி, ''ஏன்... நான் செய்யக்கூடாதா? நான் செஞ்சு வைச்சிருக்கிறதைப் பாத்தா, அசந்து போயிடுவீங்க!'' என பில்டப் கொடுத்தாள்.

'அப்படியா! அப்ப, இப்பவே சாப்பாடு போடு. மதியமே நான் வேலை அதிகமா இருந்ததுனால, சாப்பிடவே இல்ல. இப்ப, பயங்கர பசியா இருக்கு. நிறைய செஞ்சு வெச்சிருக்கியா? '' என்று கேட்டபடி சமையலறைக்கு வந்து, தரையில் அமர்ந்து கொண்டான்.

அவனெதிரில் எப்போதும் அவன் சாப்பிடுவது போல, பெரிய வாழையிலையைப் போட்டாள் தான்யா. அவன் இலையில் நீர் தெளித்து, இலையைச் சுத்தம் செய்து கொண்டான்.

தான்யா அந்த ஹாட்பேக்கை மட்டும் கொண்டு வந்து வைக்க, 'ஏது... பிரியாணி செய்திருக்கிறாள் போலிருக்கிறதே! பரவாயில்லையே! என்ன பிரியாணி? சிக்கனா? வெஜிடபுள் பிரியாணியாக இருந்தாலும் ஓகே

தான்!' என்று நினைத்தபடி ஆவலாகப் பார்த்தான்.

தான்யா ஹாட்பேக்கை திறந்து, உள்ளேயிருந்த உணவைக் கரண்டியில் எடுத்து இலையில் போட்டாள். இலையில் அவள் போட்டதைப் பார்த்ததும், 'ஙே' என்று விழித்துவிட்டு, ' என்ன இது?'' என்று கேட்டான் பூமிநாதன்.

'மேகி!' என்று பெருமையாகச் சொன்னவள், 'சாப்பிடுங்க! உங்களுக்காக நிறைய வெஜிடபிள்ஸ் போட்டுச் செஞ்சிருக்கேன்'' என்று அவள் செய்த உணவுக்கு, அவளே விளம்பரம் செய்தாள்.

ஒரு நிமிடம் அவள் சொன்னதைக் கேட்டுத் திகைத்தவன், 'இது என்ன... இவ்வளவு செஞ்சிருக்கே? யார் இவ்வளவு சாப்பிடறது?'' என்று கிண்டலாகக் கேட்டான்.

அது புரியாமல் தான்யா பெருமையாக, 'உங்களுக்குத்தான். எனக்குன்னா... யூஷ்வலா பாதி ஸ்லைஸ் தான் போடுவேன். உங்களுக்கு ஆச்சி நிறையச் சாப்பாடு செஞ்சு வெக்கிறதைப் பார்த்திருக்கேன். அதான்... நிறைய இருக்கட்டும்னு, நாலு ஸ்லைஸ் போட்டுச் செஞ்சேன்'' என்று விளக்கமளித்தாள். அந்த பெரிய ஹாட் பேக் முழுக்க, மேகி நூடுல்ஸ் இருந்தது.

அவள் சொன்ன விதம் பூமிநாதனுக்குச் சிரிப்பை வரவழைக்க, தலையைப் பின்னால் சாய்த்து, 'ஹா! ஹா!' என்று வெகு நேரம் சிரித்தான்.

'அவன் ஏன் சிரிக்கிறான்' என்பதே புரியாததால்

சிணுங்கிய தான்யா, ' ஏன் சிரிக்கிறீங்க?'' என்று கேட்டாள்.

இதற்கு மேல் சிரித்து அவளை டென்ஷனாக்கக் கூடாது என்று நினைத்து, 'அம்மா தாயே! இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது! நான் கடுமையான வேலை செய்யறவன். எனக்கெல்லாம், ராத்திரியில சாப்பாடு சாப்பிட்டாத் தான் தூக்கம் வரும். அது, ரசம் சாதமா இருந்தாக் கூட ஓகே.

நீ ஹாட்பேக்கைக் கொண்டு வரவும், அடடே இன்னிக்குப் பிரியாணி போலிருக்கே... ஒரு வெட்டு வெட்ட வேண்டியதுதான்னு நினைச்சேன். நீ ஹாட்பேக்கை ஓபன் பண்ணதும், நான் அப்படியே ஷாக் ஆயிட்டேன். இதையெல்லாம் சாப்பிட்டா, எனக்கு ராத்திரி பசியில... தூக்கம் வராதும்மா!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

அவன் கூறியதைக் கேட்டதும், தான்யாவின் முகம் வாடியது. 'தான் அவனுக்காகச் செய்ததைச் சாப்பிட்டுவிட்டு, அவன் பாராட்டுவான்... ஏதோ இப்பக் கொஞ்ச நாளாத் தான் பேசுறான். இந்த மேகியைச் கொஞ்சு போட்டு அசத்தி, அவன்கிட்ட நல்ல பேரை வாங்கிடணும்னு நெனச்சா, அவன் நம்மையே கலடிக்கிறானே' என்று நினைத்தாள்.

இன்னமும் தான்யாவிற்கு, அவன் சொல்ல வந்தது சரியாகப் புரியவில்லை. சின்ன மாங்குடி போன்ற விவசாயக் கிராமங்களில், இரவிலும் சாப்பாடுதான் சாப்பிடுவார்கள். மும்பை போன்ற பெரிய ஊரில் தான்,

அதிக உடல் உழைப்பு இல்லாததால் சர்க்கரை நோய் போன்ற வியாதிகளுக்குப் பயந்து டிபன் சாப்பிடுவார்கள் என்பதை, அவள் தெரிந்து கொள்ள சந்தர்ப்பமே கிடைக்கவில்லையே.

தான்யாவின் முகம் வாடியதால், தன் கிண்டலை நிறுத்திவிட்டு, 'சரி, போடு! சாப்பிடுவோம்' என்று சமாதானமாகச் சொன்னான்.

தான்யா தயக்கத்துடன் இன்னும் எடுத்து அவன் இலையில் போட்டாள்.

அவன் எதுவும் பேசாமல் சாப்பிடவும், 'நல்லாயிருக்கா? நிறைய காய்கறியைப் போட்டுச் செய்தேன்!'' என்று குழந்தையைப் போல பாராட்டுக்கு ஏங்கிக் கேட்டாள். அதிலிருந்தே, அவளுக்குச் சமையல் அனுபவமே கிடையாது என்பது பூமிநாதனுக்குப் புரிந்து போனது.

'எல்லாமே நிறைய போட்டிருக்கே!'' என்றவன், 'எல்லாமே'' என்பதை நன்றாக அழுத்திச் சொன்னான். அவன் சொன்னதின் அர்த்தம் புரியாத தான்யா, தனக்கும் ஒரு தட்டில் கொஞ்சம் மேகியைப் பரிமாறிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

அப்போதுதான் புரிந்தது... மேகியில் ஒரே உப்பு. அடக்க முடியாமல், ' தூ...தூ!' என்று விட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தபோது, அவள் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

எதுவும் சொல்லாமல் பூமிநாதன் சாப்பிடுவதைப் பார்த்தவளுக்கு, தன் மேலேயே கழிவிரக்கம் வந்தது.

வீட்டில் தனக்கும் தங்கைக்கும் மட்டுமாக, கொஞ்சமாகச் செய்தபோது அளவு தெரிந்தவளுக்கு, இப்போது நிறையச் செய்யும்போது எவ்வளவு போட வேண்டுமென்று தெரியாததால், ஒரு கரண்டி நிறைய உப்பை எடுத்துப் போட்டிருந்தாள். ஒரு வேளைக்கான உணவைச் சமைக்கக் கூடத் தெரியவில்லையே என்று தன்னிரக்கம் வந்தது.

அவள் கண்களில் கண்ணீரைக் கண்டதும், பூமிநாதனுக்கே பாவமாகிவிட்டது, 'ஹேய்! இதுக்கு ஏன் வருத்தப்படறே? உப்பிட்டவரை உள்ளளவும் நினைன்னு சொல்லியிருக்காங்க. நான் உன்னை எப்பவும் மறக்கவே மாட்டேன்!' என்று சமாதானமாகச் சொன்னான்.

'இதைச் சாப்பிடாதீங்க! ஆனா, இப்ப ராத்திரி வேற. என்ன சாப்பிடுவீங்க? இங்க ஹோட்டல் எதுவும் கிடையாதுன்னு, ஆச்சி கூடச் சொன்னாங்களே!'' என்று வருத்தமாகக் கேட்டாள்.

''ஒருநாள் சாப்பிடலைன்னா, ஒண்ணும் ஆயிடாது. இரண்டு பேரும் வாழைப்பழம் சாப்பிடுவோம்'' என்று கூறியவன், எல்லாவற்றையும் பாத்திரம் தேய்க்கும் இடத்தில் வைத்துவிட்டு, வாழைப்பழங்களை எடுத்து வந்தான்.

அவளெதிரில் அமர்ந்தவன், சில வாழைப் பழங்களை எடுத்துக் கொண்டு, அவளிடம் மீதியைத் தள்ளினான். அவள் முகம் இன்னும் வாடியே இருப்பதைக் கண்டு அவளைத் தேற்றும்

நோக்கத்தோடு, ‘‘ஆமா, இந்த மேகியெல்லாம் எங்க போயி வாங்கினே? நீ போட்டது சிக்கன் மசாலா போல இருந்ததே! அது, இங்கல்லாம் கிடைக்காதே!‘ என்று கேட்டான்.

‘நான் ஊர்லயிருந்து எடுத்துட்டு வந்தேன். என்னிக்காவது தேவைப்பட்டா இருக்கட்டும்னு, வெச்சிருந்தேன்.’’

‘ஆமா! அன்னிக்கு ஆச்சிகிட்ட அளந்து விட்டுக்கிட்டிருந்தே? எங்க அம்மா ரொம்ப ஸ்ட்ரிக்ட்... எங்களையெல்லாம் வேலை செய்யச் சொல்லுவாங்க. அதனால் எனக்கு எல்லாம் தெரியும்னியே? உனக்கு, உங்கம்மா சமைக்க மட்டும் சொல்லிக் குடுக்கலியா?‘

அவன் கேள்வி கேட்டவுடன், உற்சாகம் பொங்கியது தான்யாவிற்கு. கண்களில் குறும்பு மின்ன, ‘அன்னிக்கு நான் ஆச்சிகிட்டச் சொன்னதை, நீங்களும் கேட்டிங்களா? அதெல்லாம் ரீல். எனக்குச் செடி, கொடிகளைத் தவிர, வேற எதுவும் தெரியாது.

அவங்க, நான் ரொம்பக் கஷ்டப்படறேனோன்னு ஃபீல் பண்ணினாங்க... அதனால, அவங்களைச் சமாதானப்படுத்தச் சொன்னது அது..’’ என்று கண்சிமிட்டிச் சொன்னாள்.

‘எனக்கு ஒண்ணு பிடிச்சதுன்னா, அதுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டாலும், அது எனக்குப் பெரிசாத் தெரியாது. அதோட... இங்க நீங்க, ஆச்சியெல்லாம் என்னை நல்லாத் தானே பாத்துக்கறீங்க! இந்த வே ஆப் லைஃப்பும், ஒரு எக்ஸ்பீரியன்ஸ் தானே?’’

தான்யா சமாதானமாகி, உடனேயே சிரித்த முகத்துடன் கண்சிமிட்டிக் கேட்டபோது, 'இவளிடமா நாம் கோப்பபட்டோம்?' என்று பூமிநாதனுக்குத் தோன்றியது.

'எதையும் ஆர்வத்துடன் செய்வது, திட்டினால் கூட விரோதியாக நினைக்காதது, எல்லோரிட்மும் சிரித்த முகமாக இருப்பது, இங்குள்ள அசௌகரியங்களைக் கூட, அனுபவமாக எடுத்துக் கொள்வது' என்ற நல்ல குணங்கள் மட்டுமே அவளிடம் தெரிந்தன.

'தான் சொல்வது போல, சமைக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று அவளுக்கு என்ன தலைவிதி? அவளது அப்பா வீட்டில் சமையலுக்கு ஆள் இருப்பது போல, வசதியான வீட்டிற்குத் தானே கல்யாணத்திற்குப் பிறகு போகப் போகிறாள்? அங்கேயும் சமையலுக்கு ஆள் இருக்கப் போகிறார்கள்! இவள் என்ன வேண்டுமென்று சொன்னாலே போதாதா?' என அவன் யோசித்துக் கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளாமல், அவள் பாட்டுக்கு பேசிக் கொண்டு போனாள்.

'அதனால்தான், ஆச்சி சமைக்கும்போது நான் உதவி செய்யப் போனதேயில்லை. இன்னும் சொல்லப் போனா, கடலைப் பருப்புக்கும் துவரம் பருப்புக்கும் வித்தியாசம் கூட, எனக்குத் தெரியாது. எதுக்கு எதைப் போடணும்னும் தெரியாது. அவங்ககிட்ட எக்கச்சக்கமா மாட்டிக்கக் கூடாதுன்னுதான், போகவேயில்லை.'

'அப்ப, இந்த மேகியை மட்டும் எப்படிச் செஞ்சே?' என்று பூமிநாதன் புன்னகையுடன் கேட்டான்.

'அதுவா? எங்க வீட்ல, அம்மாதான் சமைப்பாங்க. மற்றதுக்கு எல்லாம் ஆள் இருந்தாலும், அம்மாவுக்கு... சமையலை மட்டும் அவங்களே செய்யணும். எப்பவாவது அப்பா கூட அவங்க வெளியே போகும்போது, நானும், அன்னாவும் ஒரு ஜாலிக்காக இதைச் செஞ்சு சாப்பிடுவோம். இது ஒண்ணும் கஷ்டமில்லை. டூ மினிட்ஸ் தானே!' என்று மீண்டும் கண்சிமிட்டியபடி தான்யா பதில் சொன்னாள்.

'நீ பேசாம... நூடுல்ஸ் விளம்பரத்துக்கு, மாடலா போயிடலாம்!' என்று கேலியாகச் சொன்னான்.

அவன் கிண்டலாகச் சொல்வது புரியாமல், 'எல்லோரையும் போல, அவனும் சினிமாவில் நடிப்பதைப் பற்றிச் சொல்கிறான்!' என்று நினைத்துக் கொண்டாள் தான்யா.

'எனக்கு, அதுலயெல்லாம் இன்ட்ரெஸ்ட் கிடையாது.''

'அதுதான் சொல்லிட்டியே! உன் லட்சியமே பண்ணை அமைக்கறது தான்னு!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் பூமிநாதன்.

* * * * *

# 10

மறுநாள் காலையில் தான்யா எழுந்து வந்தபோது, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு அடுப்பில் எதையோ கிளறிக் கொண்டிந்தான் பூமிநாதன். ஆச்சி கீழே அமர்ந்திருந்தார். ஜுரம் விட்டிருந்தாலும் சோர்வாக இருந்தார். தான்யா சமையலறைக்குள் நுழைய, பூமிநாதன் அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

'தான்யா! என்ன ராத்திரி சரி தூக்கமா? வயிறு புல்லா சாப்பிட்டதுல, நிம்மதியா தூக்கம் வந்திருக்குமே!' என்று கலாய்த்தான். ஆச்சியிடம் அவளது சமையலைப் பற்றிப் போட்டுக் கொடுக்கப் போகிறானோ என்று நினைத்து, கண்களாலேயே, 'சொல்லாதே!' என்று கெஞ்சினாள் தான்யா.

இதைப் பற்றியெல்லாம் தெரியாமல், அவன் சொன்னது உண்மையென்று நினைத்துக் கொண்ட ஆச்சி, 'என்னப்பா! தான்யா அவ்வளவு நல்லா சமைச்சாப்புலயா?' என்றார்.

'அதையேன் கேக்கறீங்க ஆச்சி! இதுவரைக்கும், நான் அப்படியொரு சாப்பாட்டைச் சாப்பிட்டதே இல்லை! அவ்வளவு சூப்பரா இருந்திச்சு.''

'தம்பி! தான்யா அருமையான புள்ள... பணக்கார வீட்டுப் புள்ள... எப்படி நடந்துக்குமோன்னு, நீ கூட யோசிச்சியே... தான்யா நம்ம வீட்டுப் புள்ள மாதிரி

பழகிடுச்சு!' தன்னையறியாமல், பூமி நாதனின் முந்தைய நடத்தைக்கான காரணத்தை தான்யாவிற்கு புரிய வைத்தார் ஆச்சி.

'ஓ! நான் வசதியான குடும்பத்திலிருந்து வருவதால், பந்தா பண்ணிக் கொள்வேன் என்று நினைத்தார் போலிருக்கிறது. அதோட, சும்மா டைம் பாஸ் பண்ண இங்கு வந்திருப்பேன் என்று நினைத்திருக்கலாம்! அவர் வரையில், அது சரிதானே! இதற்கு முன்னால் நிறையப் பேர் அவளிடம் பழகுவதற்கு முன்னால் அவளைத் தவறாக நினைத்து விட்டு, பிறகு அவளுடைய நண்பராக ஆனபின்னர், தாங்கள் தவறாக நினைத்ததைச் சொல்லவில்லையா?'

மனதிற்குள் இந்தச் சமாதானம் தோன்றிய பிறகு, தான்யாவிற்கு பூமிநாதன் மேலிருந்த கொஞ்சநஞ்ச வருத்தமும் மறைந்துபோனது. அதனால், ஆச்சி அடுத்து சொன்ன யோசனைக்கு, உற்சாகமாகத் தலையாட்டினாள்.

'தம்பி! இன்னிக்கு வைகாசி விசாகம். குன்னக்குடி முருகனுக்கு நாம வருஷா வருஷம் அர்ச்சனை செய்துட்டு வருவோமேப்பா. இந்த முறை எனக்குத்தான் வர முடியல. நீ நம்ப தான்யாவை அழைச்சுட்டுப் போய் வாப்பா.''

ஆச்சி சொன்னவுடன் மறுத்துப் பேச வாயைத் திறந்த பூமிநாதன், தான்யா அவனையே ஆர்வமாகப் பார்ப்பதைக் கண்டதும், எதுவும் சொல்ல முடியாமல், 'சரி ஆச்சி' என்று மட்டும் சொன்னான்.

அந்த ஊரிலிருந்து வெளியே வேறு ஊருக்குப் போகிறோம் என்பதிலேயே குதூகலமாகி, குன்னக்குடி கோயிலைப் பற்றி ஆச்சியிடம் விபரம் கேட்க ஆரம்பித்தாள் தான்யா. இப்படியாக, தான்யாவின் சமையல் ரகசியம், ஆச்சிக்குத் தெரியாமல் தப்பித்தது.

ஆச்சி, இருவரையும் வெயிலுக்கு முன்னால் கிளம்பச் சொல்ல, பூமிநாதன் செய்திருந்த கஞ்சியைக் குடித்துவிட்டு இருவரும் கிளம்பினர். குளித்துவிட்டு (இப்போதெல்லாம் அவள் குளிப்பதற்குப் போகும் முன்னரே, பாத்ரூமிலிருந்த இரண்டு வாளிகளிலும் தண்ணீர் நிறைந்திருந்தது) என்ன உடை அணியலாம் என்று பெட்டியைக் குடைந்த தான்யா, அடியில் வைத்திருந்த சில்க் காட்டன் புடவையைத் தேர்ந்தெடுத்து வெளியே எடுத்தாள்.

மஸ்டர்ட் நிறத்தில், நேவி ப்ளூ நிறத்தில் பூக்களை எம்ப்ராய்டரி போல உடலெங்கும் நெய்திருந்த சேலை அது. ப்ளவுஸும் மஸ்டர்ட் நிறத்தில் இருக்க, சின்னதாக நேவி ப்ளூ பார்டர் இருந்தது. பலமுறை கல்லூரியில் நடந்த கலைநிகழ்ச்சிகளுக்குப் புடவை கட்டிய அனுபவத்தால், வேகமாகவே புடவையைக் கட்டிக் கொண்டாள்.

தலையை வாரி க்ளிப் போட்டு, குட்டியாக கருநீலப் பொட்டு வைத்துக் கொண்டு பத்தே நிமிடத்தில் தயாரானாள்.

ஆச்சிக்கு, அவள் புடவையுடுத்தித் தயாராகி வந்ததில் ஒரே மகிழ்ச்சி.

'புடவை, உனக்கு ரொம்ப அழகாயிருக்கும்மா. ஆனா, இந்த வெள்ளி நகைங்கதான் நல்லால்ல. இரும்மா! நான் இதோ வரேன்'' என்று எழுந்து அறைக்குப் போனார்.

அவையெல்லாம் ப்ளாட்டினம், வைரங்கள். அவற்றின் விலையே பல லட்சங்கள் என்பதைச் சொல்லவில்லை தான்யா. ஆனால், அவர்கள் பேசுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பூமிநாதனுக்குத் தெரியும். அவள் ஜம்பமாகத் தன் நகைகளின் பெருமையைப் பேசாமல், நாசூக்காக இருந்தது, அவனுக்குப் புரிந்தது.

உள்ளேயிருந்து ஒரு நகைப் பெட்டியை எடுத்து வந்த ஆச்சி, அதை அவள் கையில் கொடுத்து, 'இதைப் போட்டுக்கம்மா!'' என்று வாஞ்சையாகச் சொல்ல, தான்யா சங்கடமாகப் பூமிநாதனைப் பார்த்தாள்.

அவனோ, 'இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை!' என்பதுபோல், கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஆச்சி! இதெல்லாம் எதுக்கு?'

'ஏம்மா? கோயிலுக்குப் போகும்போது போடத் தானே கொடுக்கிறேன். சும்மா போட்டுக்கம்மா!' என்று வற்புறுத்தினார். தயங்கியபடி அதை வாங்கிக் கொண்டு அறைக்குச் சென்று, அவற்றை அணிந்து கொண்டாள்.

காதுகளுக்குக் குட்டி ஜிமிக்கி, கழுத்தை ஒட்டிய மெல்லிய நெக்லஸ், கைளுக்கு இரண்டு வளையல்கள்...

இவைதான் அதில் இருந்தவை. ஆனாலும், இவ்வளவு நகைகளைப் போட்டுப் பழக்கமில்லாததால், ரொம்ப வித்தியாசமாக இருந்தது; அழகாகவும் இருந்தது.

வெளியே வந்ததும், அவள் முகத்தை இரு கைகளாலும் தடவி திருஷ்டி கழித்த ஆச்சி, 'ரொம்ப நல்லாயிருக்கம்மா! போயிட்டு வா! நான் சிவப்பியைத் துணைக்கு இருக்கச் சொல்லுதேன். சமைச்சும் வெக்கச் சொல்லுதேன். நீங்க சாப்பிட வந்துடுங்க. அங்கன கிளப்பு கடையேதும் இருக்காது. டீக்கடை தேன் இருக்கும். இந்தப் பையில அர்ச்சனைச் சாமான் இருக்கு. கிளம்புங்க!' என்றார் அன்புடன்.

வீட்டைவிட்டு வெளியில் வந்தபிறகுதான், எதில் போகப் போகிறோம் என்ற எண்ணமே வந்தது அவளுக்கு.

வாசலிலிருந்த பைக்கின் அருகில் பூமிநாதன் நின்றிருந்தான், 'குன்னக்குடிக்கு இங்கருந்து பஸ்ஸுல போனா, நிறைய நேரம் ஆகும். வா! பைக்குலயே போய் வந்திடலாம். உனக்கு பைக்கில் போய், பழக்கம் உண்டு தானே?' என்று விசாரித்தான்.

தோழிகளுடன் வண்டியில் போயிருக்கிறாள். ஆனால், சுடிதாரோ, ஜீன்ஸோ அணிவதால் இருபுறமும் கால் போட்டு அவர்களது தோளைப் பிடித்தபடி போய்த்தான் பழக்கம்.

இப்போது புடவை கட்டியிருப்பதால், ஒரு பக்கமாகத்தான் உட்கார முடியும். அதோடு, அந்த

வண்டிகளை விட இந்த பைக் கொஞ்சம் உயரமாக வேறு இருந்தது. கையிலிருந்த பையை அவனிடம் கொடுத்து விட்டு, வண்டியில் ஏறியமர்ந்தாள்.

வண்டி ஊருக்குள் மெதுவாகச் செல்லும் வரையில், கஷ்டமாகத் தெரியவில்லை. ஊரைவிட்டு வெளியே வந்து வண்டி வேகமெடுத்ததும், காற்று வேறு வேகமாக அடித்ததில், 'கீழே விழுந்து விடுவோமோ' என்று பயந்து போனாள் அவள்.

வண்டியில் சரியாக உட்காருவதற்காக முன்னும் பின்னும் நகர, வண்டி பேலன்ஸ் இல்லாமல் ஆடியது. பேலன்ஸ் பண்ண முடியாததால், வண்டியை ரோட்டின் ஓரமாக நிறுத்திவிட்டு, திரும்பி தான்யாவைப் பார்த்தான்.

'என்ன ஆச்சு? சரியா உக்காரலியா?''

'இல்ல. நல்லாத் தான் உக்காந்திருக்கேன். ஆனா, பிடிச்சுக்கத் தான் எதுவும் இல்லை. ஒரு பக்கமா உட்கார்ந்து பழக்கம் இல்லாததுனால, பேலன்ஸ் பண்ண முடியல.''

'சரி, என்னைப் பிடிச்சுக்க. போகலாம்.'

அவன் சொன்ன பதிலால், தான்யா ஆச்சரியப்பட்டாள். வயல் வரப்பில் வழுக்கியபோது, ஒரு நிமிடம் அவனது தோளைப் பிடித்துக் கொண்டதற்கே அப்படிக் கோபித்துக் கொண்டவன் அவன். இப்போது அவனே இப்படி அக்கறையுடன் சொல்லவும், தான்யாவிற்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

சந்தோஷமாக அவனை நெருங்கி அமர்ந்து,

அவனது இடுப்பைச் சுற்றிக் கையைப் போட்டுக் கொண்டாள். மும்பையில் மிகவும் மாடர்ன் ஆன கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்தவளுக்கு, இது தவறாகத் தெரியவில்லை.

ஆனால், பூமிநாதனுக்குத் தான், ஷாக் அடித்தது போலிருந்தது. 'ஏதோ தோளில் கைவைத்து, பிடித்தபடி வருவாளென்று நினைத்தால், இப்படி இவ்வளவு நெருக்கமாக உட்காருவாள் என்று தெரியாமல் போய்விட்டதே! இப்போது நகர்ந்து உட்காரச் சொன்னால் என்ன ஆகும்?

அவளே ஒரு தொட்டாச் சிணுங்கி! கண்ணீர் விடலாம். எதற்கு வம்பு?' என்று நினைத்து வண்டியை எடுததான்.

ஒரு மணி நேரத்தில் குன்னக்குடியை அடைந்து விட்டனர். அவன் வண்டியை நிறுத்திவிட்டு வர, இருவருமாகப் படியேறினார்கள். தான்யா ஆர்வமாக எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தாள். வழியில் ஓரிடத்தில் மலைமுகட்டிலிருந்து ஊர் முழுவதும் தெரிவதை அவன் காட்ட, வேடிக்கைப் பார்த்துவிட்டு, தன் கைப்பேசியை எடுத்து இருவரையும் செல்ஃபி எடுத்துக் கொண்டாள்.

இருவரும் மேலே ஏறி முருகனை விசேஷ அலங்காரத்தில தரிசனம் செய்து, அர்ச்சனையை முடித்துக் கொண்டு வெளியே வந்தனர். சில படிகள் இறங்கியதும் மலையுச்சியிலே நின்று ஊர் முழுவதையும் பார்க்கும் இடம் வந்தவுடன், தான்யா

ஆர்வமாக அதனருகில் போனாள். வேகமாகப் போனதில் குறுக்கே ஒரு எலி ஓடவும், பயந்து போய் துள்ளியபடி மலைச்சரிவில் விழப் போக, நொடியில் பூமிநாதன் அவளது கையைப் பற்றி வேகமாக இழுத்தான்.

இழுத்த வேகத்தில் அவள் அவன் மேலேயே விழ, பூமிநாதனின் கைகள் அவளைச் சுற்றி வளைத்தன. தான்யாவின் இரு கைகளும் அவன் தோள்களை அணைத்துக் கொள்ள, ஒரு நிமிடம் கண்மூடி நின்றாள். அவள் உடலில் மின்சாரம் பாய, ஒரு நிமிடம் பரவசத்தை உணர்ந்தாள். அவள் மனம் அவனை விரும்புவதை, புத்தி உணர்ந்தது.

இதுவரை, எத்தனையோ முறை இருவரும் நெருக்கமாக இருந்திருந்தாலும், இந்த முருகனின் சந்நிதியில் அவன் மேலுள்ள காதலை உணர்ந்தது, அவளுக்கு மிகவும் உவப்பாக இருந்தது.

தான்யா அதிர்ச்சியில் இருக்கிறாள் என்று நினைத்து, ஆதரவாக அவளை அணைத்திருந்தவன் மெல்ல விலகி, ' போகலாமா தான்யா!' என்று கேட்டான். தான்யா சரியென்று தலையசைத்து, மகிழ்ச்சியாக அவன் பின்னால் சென்றாள்.

இந்தக் காதல் உணர்வை அறிந்து கொண்டதும், காற்றில் பறப்பது போலிருந்தது அவளுக்கு. கனவுலகில் மிதப்பவள் போல், சிரித்த முகத்துடன் அவனுடன் செல்ல, இருவரும் ஒன்றாக மெல்லப் படியிறங்கினார்கள்.

எதிரில் வந்த முதியவர் ஒருவர், ‘என்ன பூமித் தம்பி! இந்தப் புள்ளை யாரு? சம்சாரமா? எப்பக் கல்யாணம் ஆச்சு? நமக்கெல்லாம் சொல்லவே இல்லையே!‘ என்று விசாரிக்க, பூமிநாதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

‘இல்லிங்கய்யா! இவுக நம்ம சொந்தக்காரப் புள்ளைங்க. வீட்டுக்கு வந்திருக்காக. அதான், கோயிலைக் காட்டலாமுன்னு கூட்டி வந்தேன். எனக்குக் கல்யாணம்னா, அய்யாகிட்டச் சொல்லாமச் செய்வேனா?‘ என்று பவ்யமாகவே பதில் சொன்னான்.

தான்யா எதற்காக வந்திருக்கிறாள் என்பதை எல்லாம், தேவையில்லாமல் எதற்குச் சொல்ல வேண்டும் என்பது அவன் எண்ணம்.

‘அப்படியா! நல்லது. சீக்கிரமே நல்ல சேதி சொல்லுங்க தம்பி!‘ என்று கூறி விடைபெற்று, அவர் படியேறிப் போனார்.

‘உப்!‘ என்று மூச்சு விட்டு, ‘தப்பித்தோம்’ என்பதுபோல் பூமிநாதன் படியிறங்கினான்.

தான்யாவிற்குச் சிரிப்பு தாங்கவில்லை. அவர் கேட்ட கேள்வி அவளுடைய மன உணர்வுக்குப் பொருத்தமாக இருந்ததால், மிகவும் ரசித்தாள். இப்போது தான் பூமிநாதன் அவளைத் திட்டுவதில்லையே. அதனால், தன் முக மலர்ச்சியைக் கூட மறைக்காமல், அவனைப் பின்தொடர்ந்தாள்.

‘வா! வெயிலுக்கு இதமாக இளநீர் குடிக்கலாம்‘ என்றது கூட, ஏதோ அமிர்தம் குடிக்கலாம் என்றதுபோல்

தோன்றியது. தான்யா சந்தோஷமாகத் தலையை ஆட்டி அவன் பின்னால் சென்றாள். அவன் இளநீரை வாங்கி அவள் கையில் தந்ததும், மகிழ்ச்சியாக அதைப் பருகினாள். சின்னச் சின்ன முக்கியத்துவம் இல்லாத விஷயங்கள் கூட, அவளுக்கு மிகுந்த பரவசத்தைத் தந்தன.

அருகில் பூ விற்றுக் கொண்டிருந்த சின்னப் பெண், அவர்களை பூ வாங்கச் சொல்லிக் கெஞ்சினாள். பூமிநாதன் என்னவோ, அந்தப் பூக்காரப் பெண்ணிடம் இரக்கப்பட்டுத் தான் பூ வாங்கினான்... ஆனால், வாங்கியதை அவள் கையில் கொடுத்தவுடன், என்னவோ... அவளுக்காகவே வாங்கியது போல, தான்யா பரவசப்பட்டுப் போனாள். உடனே, அதைத் தலையிலும் வைத்துக் கொண்டாள்.

அதற்குள் வண்டியை எடுத்து வந்து அவளருகில் நிறுத்த, அவள் ஏறி அமர்ந்து கொண்டாள். வண்டி கிளம்பியதும் தான்யா அவனைப் பிடித்துக் கொள்ளாமல் வேடிக்கை பார்த்தபடி வர, பூமிநாதனே வண்டியை நிறுத்தி, 'நல்லா பிடிச்சிட்டு இருக்கியா? வரும்போதே பழக்கமில்லன்னு தடுமாறினியே? என் தோளையாவது பிடிச்சுக்கோ!'' என்று அக்கறையுடன் கூற, தாள முடியாத ஆனந்தம் எழுந்தது தான்யாவிற்கு.

வரும்போது அவள் மனதில் எந்த உணர்வும் இல்லாததால், பூமிநாதனின் இடுப்பைச் சுற்றிக் கைபோட்டுக் கொள்ள முடிந்தது. ஆனால், தனது காதலை உணர்ந்த பின்போ, அவனை அணைத்தபடி

உட்காரக்கூட், அவளுக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. ஆனாலும், அவன் அக்கறையுடன் சொன்னதும், அவனது தோளைப் பற்றிக் கொள்ள, வண்டி ஊரை நோக்கிப் பறந்தது.

# 11

**அ**ன்று காலை சிகப்பி வரும்போதே ரொம்பவும் தாமதமாகிவிட்டது. அப்படி வந்தவளின் முகமோ, சோகமாக இருந்த்து. ரொம்ப நேரம் அழுதது போல முகமும் கண்களும் சிவந்திருந்தன.

ஆச்சிதான், அவள் முகம் வாட்டமாக இருப்பதைப் பார்ததுவிட்டு, 'என்ன புள்ள! நேத்து உன் புருசன்கூட சண்டை போட்டியா? அடிச்சி, கிடிச்சிப் புட்டானா? ஏன் உன் முகமே சரியாயில்லை? உடம்புக்குச் சொகமில்லியா? முதல்ல இந்தக் காஃபித் தண்ணியைக் குடி.''

அதைக் கேட்டதும், அடக்கி வைத்திருந்த சோகமெல்லாம் உடைப்பெடுத்து வெளியே கிளம்பி வந்தது சிகப்பிக்கு.

அவர் கொடுத்த காஃபியை வாங்கி பக்கத்தில் வைத்துக் கொண்டு, சமையலறையிலேயே தூண் ஓரமாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள் சிகப்பி. தான்யாவும் அப்போது சமையலறையில் ஆச்சியோடு தான் பேசிக் கொண்டிருந்ததனால், சிகப்பி வருத்தமாக

வந்தது அவளுக்கும் புரிந்தது. கொஞ்சநாட்கள் தான் என்றாலும், சிகப்பியோடு நன்கு பழகி விட்டதால் அவளுடைய வருத்தம் இவளையும் பாதித்தது.

பூமிநாதன் ஒரு வாரமாக ஊரில் இல்லை. விவசாயிகள் மாநாடு என்பதால் வெளியூருக்குப் போயிருந்தான். அவன் இருந்திருந்தால், அவன் பின்னாலேயே போய்க் கொண்டும், அவன் முகத்தையே பார்த்துக் கொண்டும் பொழுதைக் கழித்திருப்பாளே!

'நேத்து ராவைல (இரவில்) பூரணி வயித்தக் கலக்குது... கொல்லைக்குப் போவணும்... துணைக்கி வரியாம்மான்னு கூட்டா (கூப்பிட்டாள்). மேலு சொகமில்லன்னு நா(ன்)தான் அலுப்பு பட்டுகிட்டு, இந்தச் செல்வம் பயல துணைக்கி அனுப்பினேன். அவனோ, சினேகிதனைப் பார்த்ததும் அவன் கூட வெளயாட ஓடிட்டான். இந்தப் புள்ள தனியா கொல்லிக்குப் போச்சுது.

அங்க அசலூருகாரன் எவனோ சாராயம் போட்டுக்கிட்டு இருந்தவன், இவ தனியா வாரதப் பாத்துட்டு, தூக்கிட்டுப் போனான். இந்தச் சின்னப் புள்ள பயத்துல கூப்பாடு போடவும், அதுக்கு ரெண்டு அடி வெச்சு அது வாயப் பொத்தி, கொல்லிக்கு இன்னும் உள்ளார கொண்டுகிட்டுப் போயிருக்கான்.

இந்தப் புள்ள, அவன் அடிச்ச அடியில மயங்கிக் கெடந்திருக்கு. நல்ல வேள! யாரு செஞ்ச புண்ணியமோ? என் குல தெய்வம் கருப்பு மாதிரி, நம்ம சின்னமுத்து அய்யா அந்தப் பக்கமா வந்தாக.

'ஏலே! யாருலே அது'ன்னு சத்தம் போட, அந்தக் கருங்காலி, பட்டுக் கெடப்பான், நாசமா போறவன், என் புள்ளய அங்கனயே கீழ போட்டுட்டு ஓடிப் போயிட்டான். அவுக தேன் அவள மயக்கம் தெளியவச்சு, வீட்டுக்குக் கூட்டியாந்தாக.

புள்ளக்கி, பயத்துல ராவுலேயே காச்சல் வந்துபுடுச்சு. நல்ல வேளைக்கி அவுக வரலியின்னா, என் புள்ள கதி என்னவாயிருக்கும்?' என்று சொன்னவளின் கண்களிலிருந்து, கண்ணீர் நிற்காமல் கொட்டிக் கொண்டிருந்தது.

சிகப்பியின் பதினைந்து வயதுப் பெண்தான் பூரணி. அவர்கள் வீட்டில் கழிப்பறை இல்லாததால், காட்டோரமாகத் தான் போய் வருவார்கள். சிகப்பிக்கு உடல் நிலை சரியில்லாததால், தன் ஏழு வயது மகன் செல்வத்தைத் துணைக்கு அனுப்பியிருக்கிறாள்.

அங்கு குடித்துக் கொண்டிருந்த யாரோ ஒருவன், அவள் தனியாக வருவதைப் பார்த்ததும், போதை கண்ணை மறைக்க, அவளைத் தூக்கிக் கொண்டு ஒதுக்குப் புறமான இடம் தேடிப் போகும் வழியில், உள்ளூர்காரர் ஒருவர் பார்வையில் பட பயத்தில் அவளை கீழே போட்டு விட்டு ஓடிப் போயிருக்கிறான்.

இதுபோன்ற செய்திகளை, தான்யா செய்தித்தாள்களில் படித்திருக்கிறாள் தான். ஆனாலும் நேரடியாகத் தெரிந்த ஒருவரின் பாதிப்பைப் பார்த்தபின்னர், அது அவளுக்குள் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆச்சி சிகப்பியைச்

சமாதானம் செய்து கொண்டிருந்தார்.

''அழுவாத புள்ள! இந்த வரைக்கும், புள்ள தப்பிச்சுது. அதனால, என்ன இப்படி ஆகிப்போச்சேன்னு விசனப்படாம, இனிமே என்ன செய்யறதுன்னு ரோசனை பண்ணு. இன்னிக்கு நான் சோறு தாரேன். வீட்டுக்குக் கொண்டு கிட்டு போ. ஒரு நா ஓய்வெடுத்தா, சரியா போகும்.'

அவர் பேசும்போதே, ஒரு எண்ணம் உதித்தது தான்யாவிற்கு. 'சிகப்பி அக்கா! உங்க வீட்டுக்காரருக்கு கட்டிட வேலையெல்லாம் தெரியும்தானே?''

அவள் கேட்டதில் கண்களைத் துடைத்துக் கொண்ட சிகப்பி, 'ஏந்தாயி கேக்குற? எங்க வூட்டக் கட்டினதே, என் வூட்டுக்காரரு தானே? நல்லாவே வீட்டு வேலயெல்லாம் தெரியும்.'

'அப்ப அவரு டாய்லெட்... வந்து, கழிப்பறையும் கட்டித் தருவாரா?'

'தாராளமா செய்வாரும்மா. ஆனா கட்டத்தான் எங்ககிட்டக் காசில்லை. அதனாலதானே இப்படி எல்லாம் அலவாப்(கஷ்டம்) பட்டுக்கிட்டு இருக்கோம்! எங்க வீட்டுக் கிட்டயே இடமிருக்குது. ஆனா வாங்கற அஞ்சு பத்து கூலியில, அதுக்கு ஏது வழி?'

'அங்க டாய்லெட் கட்டினா, நீங்க மத்த பொண்ணுங்களை அதை யூஸ் பண்ண விடுவீங்களா?

'ஏந்தாயி? போகும்போது என்ன கொண்டு கிட்டு போகப்போறோம்? நீ சொல்லு! அடுத்த புள்ளைகளும்,

என் புள்ளையைப் போலத் தானே? எல்லாம் ஒண்ணு மண்ணா பழகுனதுக. ஆனா, காசுக்கு எங்க தாயி போறது? ஏதாவது பாங்குல லோன் தராகளா?'

'அதெல்லாம் இல்லக்கா! நீங்க சாயந்திரம் வேலை முடிச்சி அவரை வரச் சொல்லுங்க! காசுக்கு நான் ஏற்பாடு செய்யிறேன்.'' அவள் சொன்னதில் சமாதானம் அடைந்த சிகப்பி, ஆச்சி கொடுத்த சாப்பாட்டை வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

அவள் போனதும் தான்யாவிடம், 'ஏம்மா! இதைக்கட்ட நாப்பது அம்பதாயிரம் ரூபாய் ஆகுமேம்மா? ஏதும்மா காசு? உங்கப்பா கிட்ட கேக்கப் போறியா?'' என்று யோசனையுடன் கேட்டார் ஆச்சி.

'இல்ல ஆச்சி! அப்பா எங்களுக்கெல்லாம் தனியா அக்கௌன்ட் ஓபன் பண்ணிக் குடுத்திருக்கார். எங்களோட செலவுக்காக அவர் தர்ற பணத்தை, அதுலதான் போட்டு வெச்சிருப்போம். நான் நல்ல ரேங்க் எடுத்து பாஸ் பண்ணதுனால், எனக்கு ஸ்காலர்ஷிப்பும் கிடைச்சுது. அதையும், அதுலதான் போட்டு வெச்சிருக்கேன். இப்போ, சுமார் ஒரு லட்சத்துக்கு மேல இருக்கு. இப்ப இங்க வந்தப்போ கூட, என்னோட செலவுக்காக அப்பா மாசம் அம்பதாயிரம் போடறாரு. ஆனா, எனக்கு என்ன செலவு இருக்கு? எல்லாம் நீங்கதானே பாத்துக்கறீங்க? அதுலருந்து தான், இதை கட்டலாம்னு இருக்கேன்.''

ஆச்சிக்கு ஒரே சந்தோஷம்! அவள் கையை அன்பாகப் பிடித்துக் கொண்டு, 'எந் தங்கமே! உனக்கு

எம்புட்டு நல்ல மனசு! உன் நல்ல மனசுக்கு, நீ ஒரு குறையும் வராம இருப்பே! அமோகமா வாழ்வேம்மா!' என்று ஆசீர்வதித்தார்.

'உங்க பேரனோடன்னு சொல்லுங்க ஆச்சி!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் தான்யா.

வயலில் கூலி வேலை செய்து பிழைக்கும் சுமார் நூறு குடும்பங்கள் அந்த ஊரில் இருந்தன. வசதியானவர்கள் எல்லாம் தங்களது வீட்டிலேயே கழிப்பறையைக் கட்டிக் கொண்டிருந்தனர். வசதியில்லாததால், திறந்த வெளியை நாடியே செல்ல வேண்டியிருந்தது, இவர்களைப் போன்றவருக்கு.

அன்று மாலையே வேலை முடிந்து சிகப்பியோடு வந்தான் அவளது கணவன். ஒரு குளியலறையும், ஒரு கழிப்பறையுமாக அடுத்தடுத்து இரண்டு அறைகளாகக் கட்டுவதற்கான செலவு விவரங்களை, அவரிடம் கேட்டறிந்து கொண்டாள். பக்கத்தில் அமர்ந்து ஆச்சியும் யோசனை சொல்ல, இடமும் முடிவானது. தான் பணத்தை ஏற்பாடு செய்வதாகவும், உடனே வேலையை ஆரம்பிக்கும்படியும் சொன்னாள் தான்யா.

சிகப்பியின் கணவனும் தன் மகளுக்கு நேர்ந்த நிலையை நினைத்து, தனக்குக் கூலியே வேண்டாமென்றும் கூறிவிட்டான். அவர்கள் வீட்டுக்கு அருகில் வசித்தவர்கள் அனைவரும், தம் மகளுக்கோ அல்லது மனைவிக்கோ கூட இந்தக் கதி நேரலாமென நினைத்து, இந்தக் காரியத்துக்கு தங்களாலான உதவியைச் செய்ய முன்வந்தனர்.

மறுநாள் காலை தான்யா ஏடிஎம்மில் இருந்து பணம் கொண்டு வந்து தர, இரண்டு நாட்களில் வேலை முடிந்தது. ஐந்துக்கு ஐந்து அடி கொண்ட இரண்டு அறைகளிலும், பத்தடிக்கு உயரத்திற்குச் சுவர் எழுப்பி, அதன்மேல் சிமெண்ட் ஷீட் போடப்பட்டிருந்தது. சுவற்றை மெதுவாகப் பூசிக் கொள்ளலாமென்று விட்டுவிட்டனர்.

தான்யாவின் ஆலோசனைப்படி இரண்டு சோலர் மின் விளக்குகளும் போடப்பட்டன. மின்சாரம் இல்லாத நேரத்திலும், பெண்கள் பயமில்லாமல் போய்வர, எப்போதும் வெளிச்சமாக இருக்க வேண்டுமென்பது அவளது எண்ணம். அந்த இடமும், ரொம்ப ஒதுக்குப்புறமாக இல்லாமலும், அதே நேரத்தில், யாராவது கூப்பிட்டால் கேட்கும் தொலைவிலும் இருந்தது. எல்லோருமே தான்யாவை வெகுவாகப் பாராட்டி, தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்கள்.

பூமிநாதனிடம் இந்த செய்தியைப் போனில் சொல்கிறேன் என்று ஆச்சி சொன்னபோது, தான்யா தடுத்து விட்டாள். அவன் ஊருக்குத் திரும்பி வரும்போது சொல்லிக் கொள்ளலாம் என்றும் சொல்லிவிட்டாள்.

மூன்று நாட்கள் கழித்து ஊருக்கு வந்த பிறகுதான், பூமிநாதனுக்கு இந்த விஷயமே தெரிய வந்தது. அவனுடைய குரலைக் கேட்க வேண்டுமென்று தான்யாவிற்குத் தோன்றும் போதெல்லாம்,

வேண்டுமென்றே இல்லாத சந்தேகங்களைத் தேடிட் பிடித்துக் கேட்பாளே ஒழிய, இதைப்பற்றி மூச்சு விடவில்லை. காதல் என்ற மாபெரும் உணர்வு மனதிற்குள் நுழைந்து விட்டால், தான் விரும்புபவருக்குப் பிடித்ததையெல்லாம் செய்து அவரைச் சந்தோஷப் படுத்த வேண்டும் என்று தோன்றுவது இயற்கைதானே!

பூமிநாதனின் விருப்பமெல்லாம், இந்த ஊருடைய நலன்தானே? அவன் செய்யும் நற்செயல்களில், தன்னாலான உதவியைச் செய்ய வேண்டுமென்பது அவளது ஆசை. அதற்கேற்ற சந்தர்ப்பம் கிடைத்தவுடன், தவறாமல் அதைப் பயன்படுத்திக் கொண்டாள்.

பூமிநாதன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள், வழியில் பார்த்தவர்களெல்லாம் ஏகத்துக்கும் தான்யாவை புகழ்ந்து தள்ளிவிட்டனர். வீட்டிற்கு வந்து ஆச்சியிடம் முழு விபரத்தையும் தெரிந்து கொண்டவனுக்கு, தான்யாவின்மேல் மிகுந்த மதிப்பு உண்டானது. உணர்ச்சிப் பெருக்கில் அவளது இருகைகளையும் பிடித்துக் கொண்டு, ''ரொம்பத் தாங்க்ஸ் தான்யா!'' என்றவன், 'இவ்வளவு காசு உங்கிட்ட ஏது? உங்க அப்பாகிட்டக் கேட்டு வாங்கினியா?'

தான்யா தன் ஸ்காலர்ஷிப் பணத்தில் கட்டியதாகக் கூற, ரொம்பவே சந்தோஷப்பட்டான்.

'எங்கப்பாகிட்டச் சொல்லிட்டுத் தான் செஞ்சேன். சந்தோஷமா செய்யுமான்னு சொல்லிட்டாரு.'

'நானே, இதை ரொம்ப நாளா செய்யணும்னு நெனச்சிட்டிருந்தேன். பண வசதியில்லாததுனால செய்ய முடியல. இங்க இருக்கற பெண்களுக்கு, இது பாதுகாப்பு இல்ல. இந்த ஊர்ல இருக்கறவங்க நல்லவங்கன்னாலும், வெளியூர்காரன் எவனாவது ப்ரச்னை பண்ணாம இருக்கணும்னு உள்ளுக்குள்ள பயம்.

ஒரு கோயிலைக் கட்டுவதை விட, ஒரு ஏழையோட படிப்புக்கு உதவி செய்வது அதிக புண்ணியம்ன்னு பெரியவங்க சொல்லுவாங்க. அதனாலதான், கூடம் கட்டறதுக்கு முன்னுரிமை குடுத்து, முதலில் அதைச் செய்தேன்.'

'ஆனா, அதைவிட முக்கியம் சுகாதாரமும், பாதுகாப்பும் இல்லையா? மொகஞ்சதாரோ, ஹரப்பான்னு... சிந்து சமவெளி நாகரிகம் மூலமா, உலகத்துக்கே முன்னோடியா இருந்தவங்க நாம்ப. க்ரேட் பாத்னு உலகத்துக்கே பாடம் சொன்னவங்க, இப்ப இந்தியா முழுக்க இந்தக் கழிப்பறை ப்ரச்சனையால பாம்பு கடிச்சோ, இல்ல... இந்த மாதிரியான மனித மிருகங்களாலயோ... எத்தனை பேரு உயிரையும் மானத்தையும் தொலைச்சிருக்காங்க. நீங்க ஏன், இதை முதல்ல செய்யல?' உணர்ச்சிப்பெருக்குடன் கேட்டாள்.

'தப்புதான். நாங்க, முதலில் இதைத்தான் செஞ்சிருக்கணும். கவர்ன்மெண்ட்ல டாய்லட் கட்ட லோன் தராங்களே; அதை வாங்கிக் கட்டிக்கலாம்னு இருந்துட்டோம்.'

'டாய்லட் கட்ட கவர்ன்மென்ட்! குப்பை அள்ள கவர்ன்மெண்ட்! பெத்த புள்ளையைப் படிக்க வைக்க கவர்ன்மென்ட்! சாப்பாட்டுக்கு அரிசி தர கவர்ன்மென்ட்! ஃப்ரீயா டிரஸ்...ஏன் செருப்பு தரவும் கவர்ன்மென்ட்! எல்லாமே கவர்ன்மென்ட் தான் செய்யணும்னா... நாம வேல செஞ்சி சம்பாதிக்கறது எதுக்கு? சாராயம் குடிக்கவா?' -சூடாகக் கேட்டாள் தான்யா.

'ஹே! கூல். நீ சொன்னது முழுக்க வேலிட் பாயின்ட். ஆனா இந்த மென்டாலிட்டி, ஒரே நாளில் மாறிடாது. நாம எல்லாரும் சேந்துதான், ஏதாவது செய்யணும்.'

'ஸாரி! நான் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிட்டேன், நீங்க இந்த ஊருல ப்ளாஸ்டிக் யூஸ் பண்ணவே கூடாதுன்னு சொல்லிட்டாங்களாமே, இதுவே எவ்வளவு பெரிய விஷயம்! நிலாவிலிருந்து பூமியைப் பார்த்தா, ப்ளாஸ்டிக் குப்பைதான் தெரியுதாமே?'

'ஓ! நீயும் அந்த ஆர்டிகிளைப் படிச்சியா?

'அதோட, இன்னொரு விஷயத்துக்கும் உங்களை நான் ரொம்ப அட்மையர் பண்றேன். இந்த ஊருல பூச்சி மருந்தே அடிக்கக் கூடாதுன்னு வெச்சிருக்கீங்களே! இது, எவ்வளவு நல்ல விஷயம்? வேப்பம் புண்ணாக்கு, சோப் தண்ணீன்னு, இயற்கை முறையில பூச்சிகள் அழிக்கிற வழியைச் சொல்லிக் கொடுக்கறீங்களே! உண்மையில... இந்தக் கொஞ்ச நாளில், உங்க்க்கிட்ட நான் நிறையக் கத்துக்கிட்டேன்.''

'பூச்சி மருந்தை யூஸ் பண்ணக் கூடாதுன்னு

சொல்றதுக்கு, ஒரு காரணம் இருக்கு தான்யா'' என்று சொல்லும்போதே, உணர்ச்சி மிகுதியில் பூமிநாதன் குரல் நடுங்கியது.

'எங்கப்பாவுக்கு வயிற்றுல கான்சர்னு கண்டுபிடிச்சபோது, எனக்கு வயசு பதினாலு. சாப்பிட முடியலன்னு செக்-அப் பண்ண டாக்டர் கிட்டப் போனபோது தான், இந்த ஷாக். அது வெளிய தெரியறதுக்குள்ள ரொம்ப முத்திடுச்சு. அம்மா அப்படியே உடைஞ்சுட்டாங்க. எங்கெங்கெல்லாமோ கொண்டு போய்க் காட்டினோம். அந்த ஹாஸ்பிடலில் தான் எத்தனைச் சின்னக் குழந்தைகள்? மூணு நாலு வயசிலருந்து... நான் நாளைக்கு உயிரோட இருப்பேனான்னு ஏக்கத்தோட பாத்துகிட்டு இருந்ததைப் பார்த்தபோது, கண்ணுல ரத்தம் வந்தது. என் விரோதிக்குக்குக் கூட, அந்த நிலைமை வரக்கூடாது.

அந்த டாக்டர்கள் எல்லோரும் சொன்னது ஒண்ணுதான். உணவில பூச்சி மருந்தை அதிகமா கலக்கறதுனாலயும், ரீ-சைக்கிள் பண்ணிய சமையல் எண்ணெயை யூஸ் பண்றதுனாலயும் தான், இப்பல்லாம் கேஸர் பெருகுது. ஆனா ரீ-சைக்கிள் பண்ணின ஆயிலை, முன்னாயும் யூஸ் பண்ணோம்தானே!

ஆக, விவசாயம் பண்ற முறையே மாறிச்சு. பூமியே விஷமாயிடுச்சு. பசிக்காக வேட்டையாடற சிங்கம் கூட, இன்னொரு சிங்கத்தைத் தொடாது. ஆனா இந்த மனுசங்க? கேவலம் பணத்துக்காக, அடுத்தவன் செத்தாக்கூட பரவாயில்லயா?

அப்படிப் பணத்தை மூட்டை கட்டி வைச்சு, என்ன செய்யப் போறாங்க? எங்கப்பா துடிதுடிச்சுச் செத்துப்போனது பேரிடின்னா, அவரை இழந்த சோகம் தாங்காம அம்மாவும் போனது இன்னொரு அடி.

இதைச் சொல்லும் போதே, பூமிநாதனின் உடல் நடுங்கியது. கண்கள் சிவந்திருந்தன.

''இனிமே, என்னை மாதிரி பெற்றோரை இழந்துட்டு.... இன்னொரு பையனோ... பெண்ணோ நிக்கக் கூடாது. இந்தியா முழுக்க என்னால இதைச் செயல்படுத்த முடியலைன்னாலும், என்னால முடிஞ்ச வரைக்கும் முயற்சி பண்றேன்.

சின்ன வயசிலேயே அப்பா, அம்மா இல்லாமல் அனாதையாகப் போவது எவ்வளவு பெரிய கொடுமை? எங்கூட ஆச்சி இருந்தாலும், அப்பா அம்மாவுக்கு மாற்றாக, அவர் இருக்க முடியுமா?''

தன் அன்புக்குரியவன் வாடி நிற்பது பொறுக்காமல், தன்னை மறந்து அருகில் சென்று அவனை அணைத்துக் கொண்டாள் தான்யா. ஒரு நிமிடம் அப்படியே நின்றவன், சூழலை உணர்ந்து அவளை விட்டு விலகிக் கொண்டான். 'அவள் கள்ளமில்லாமல் தன் அன்பைக் கொட்டுகிறாள்' என்று எடுத்துக் கொண்டானே தவிர, அவளது காதலைப் புரிந்து கொள்ள முடியவில்லை அவனால்.

'மற்றதெல்லாம் நல்லா புரியும்; ஆனா, இந்த விஷயத்துல மட்டும், நீங்க பெயில் தான்! என்று

மனதுக்குள் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் தான்யா.

‘ஏய்! நீ அவனை விரும்பறதை, எப்பயாவது அவன் புரிஞ்சுக்குறமாதிரி நடத்திருக்கியா? உன் மனசுக்குள்ள, என்ன பூந்தா பார்க்க முடியும்?’’

தான்யாவிற்கு, அவனிடம் தானாகப் போய், தன் காதலைச் சொல்லவும் வெட்கம். அவனே புரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தாள். ஆனால் அவள் காதலால் செய்வதையெல்லாம் பரோபகாரம், இரக்ககுணம் என்று மற்ற காரணங்களைக் கற்பித்துக் கொண்டானே தவிர, இதைமட்டும் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவில்லையா, அல்லது புரிந்து கொள்ள விரும்பவில்லையா என்று தெரியவில்லை.

# 12

**தா**ன்யாவிற்கு, இப்போதெல்லாம் பூமிநாதன் ஜெபம்தான். ஒன்று, அவனோடு இருப்பாள், அல்லது அவனைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பாள். வேறு யாரிடம்... ஆச்சியிடம்தான்!

அன்று அவர்களின் குடும்பப் போட்டோ ஆல்பத்தைக் காட்டும்படிக் கேட்க, ஆச்சி அவற்றையெல்லாம் உள்ளேயிருந்து எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தார். சின்ன வயதிலேயே பூமிநாதனுக்குக்

கூரிய பார்வை இருந்தது.

'கண்ணைப் பாரு கத்தி மாதிரி? பாக்கறவளை குத்திடற மாதிரி பார்வை. இந்தப் பார்வைக்கு பயந்து தானே, நான் மனசுல இருக்கறதச் சொல்லமுடியாம தவிக்கிறேன்!' - தான்யா மனசுக்குள் பூமிநாதனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டேவர, ஒரு பழைய போட்டோவைப் பார்த்ததும், அவள் கண்கள் நிலை குத்தி அதிலேயே நின்றன. அதில இரண்டு குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான பட்டுப் பாவாடை கட்டி, தலையில் ஜடை பின்னி, நெற்றிச்சுட்டி வைத்து அழகாக அலங்காரம் செய்து விட்டிருந்தனர். தான்யா பரபரப்பானாள்.

''ஆச்சி! யாரு ஆச்சி இது? இந்த மாதிரியான போட்டோ ஒண்ணை, எங்க வீட்டுலயும் பார்த்திருக்கேன். இவங்க உங்களுக்குச் சொந்தமா?' ஏதாவது கல்யாணத்திற்கு வந்த குழந்தைகளின் புகைப்படமாக இருக்குமோ என்ற எண்ணத்தில் கேட்டாள்.

அதைப் பார்த்த ஆச்சி சிரித்துவிட்டு, 'அது, என் மகனும், எங்க மூத்தாரோட மகளும் தேன். அவளுக்குப் பட்டுப் பாவாடையெல்லாம் கட்டி அலங்காரமெல்லாம் செஞ்சதும், எனக்கும் அது போல வேணும்னு என் மகன் அடம் புடிச்சான்னு, அவனுக்கும் எல்லாம் போட்டு... இந்தப் போட்டோவை எடுத்தோம்.'

'ஆச்சி! அது எங்கம்மா ராஜலஷ்மி!' என்று

மகிழ்ச்சியோடு கூவினாள் தான்யா.

'ஆரு!!! ராஜலஷ்மி மவளா நீ? அப்ப, நீயும் என் பேத்தி தான்டி ராசாத்தி! நான், உனக்கு அம்மத்தா கண்ணு!'' என்று கண்களில் நீர் பெருக அவளை அணைத்துக் கொள்ள, தான்யாவும் அவரை அணைத்துக் கொண்டாள்.

'நீங்க ஏன் ஆச்சி... வந்து அம்மத்தா... இதுவரை எங்க வீட்டுக்கே வரலை? அம்மா கூட, உங்களைப் பற்றிச் சொன்னதேயில்லையே!'

'என்ன கண்ணு செய்யறது? எல்லாம் விதி. உங்கம்மாவோட ஐயா பெரிய பண்ணை. ஆத்தங்குடியில, நாங்க ஒண்ணா இருந்தோம். எங்கய்யா, அவுக தம்பி, அண்ணன் தம்பின்னு அப்படி ஒத்துமை. உசிரா இருப்பாக. மதினியும் நானும் கூட, அக்கா தங்கச்சி மாரிதான் இருந்தோம்.

யாரு கண்ணு பட்டுதோ! ஒரு கூத்தாடிப் பயலக் காதலிச்சு, அவுக பொண்ணு அவன் பின்னாடி போனதுமே, இங்க குடி கெட்டது. பொண்ணு ஓடிப் போன அவமானம் தாங்காம, என் மூத்தாரு நாண்டு கிட்டுச் செத்தாரு.

அவரு போனவுடனே, மதினியும் அந்த ஏக்கத்திலியே போய்ச் சேந்தாக. அண்ணன் குடும்பமே அழிஞ்சு போனதைப் பாத்து, அவுக மேல உசிராயிருந்த எங்கய்யாவும், வெதும்பி வெதும்பியே... போயிட்டாக.

பெறவு நா, என் புள்ளக்காக மனசைத் தேத்திக்கிட்டு, அந்த ஊருலயே இருந்தேன். என்

புள்ளய வளத்து, அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வெச்சேன். இனிமேயும் கஷ்டம் வராதுன்னு நினைச்ச என் நினப்புல, மண் விழுந்துடுச்சு. என் புள்ளயும் போயி, மருமகளும் போயி, இப்ப என் பேரனுக்காக, உசிர வெச்சுகிட்டு இருக்கேன்.''

மூக்கைச் சிந்தித் துடைத்துக் கொண்டு, கண்ணையும் துடைத்தார் ஆச்சி. அவர்கள் குடும்பமே நிர்மூலமாகிப் போனதற்கான காரணம், தனது பெற்றோரின் காதலாலா?

'ஆச்சி! நீங்க ஆத்தங்குடியிலருந்து, இங்க எப்படி வந்தீங்க?'

'என் புள்ளக்கி மேலுக்குச் சொகமுல்லாம போகவும், அங்க அம்பாரமா இருந்த எங்க சொத்தையெல்லாம் வித்து, ராச வைத்தியம் பார்த்தோம். என்ன பிரயோசனம்! அவனக் காப்பாத்த முடியலியே! இது எங்க அப்பாருடைய வீடு. நான் ஒரே பொண்ணுன்றதால, அவரு சொத்து எனக்கு வந்துச்சு.

எங்க ஐயாவோட செல்வீகத்துக்கு இது உறை போடக் கூட காங்காது (காணாது). ஆனா, என் புள்ளயோட வைத்தியத்துக்கு அப்புறம், இதுதான் மிஞ்சிச்சு. அதனால, அந்த ஊரை விட்டு இங்கன வந்துபுட்டோம்.''

'ஆச்சி! உங்களுக்கு இன்னும் எங்கம்மா மேல கோபமா?' -தயங்கியபடியே கேட்டாள் தான்யா.

'நடந்தது நடந்து போச்சி! இனி அழுதாலும் புரண்டாலும், போனவுக வரப்போறாகளா என்ன? இப்ப

இருக்கற சொந்தம், உங்க அம்மாதானே? ராஜலஷ்மி இப்ப எப்படி இருக்குறா? நல்லா இருக்குறாளா? உங்கய்யா, அவளை நல்லா வெச்சிருக்கானா?'

'ஆச்சி! அப்பா, அம்மாவை ராணி மாதிரி வெச்சிருக்காரு. அவங்களுக்கு உங்களையெல்லாம் பார்க்க முடியலேயேங்கறதைத் தவிர, வேற எந்தக் குறையும் இல்ல.''

'உங்கம்மாவோட பேசணும் போல இருக்குது. போன் போட்டுத் தாரியா?'' என்று ஆச்சி கேட்க, போனில் வீட்டு நம்பரைத் தட்டினாள் தான்யா.

இதற்குமுன் இருவரும் ஓரிருமுறை பேசியிருந்தாலும், இந்தத் தொலைதூர அழைப்பினால் அவர்களுக்கிடையேயான உறவு முறை இருவருக்கும் தெரியவில்லை.

தான்யா ஆச்சியுடன் எடுத்துக் கொண்ட ஓரிரு புகைப்படங்களை வாட்ஸ்-அப்பில் தோழிகளுக்கு அனுப்பினாளே ஒழிய, ஏனோ வீட்டிற்கு அனுப்பியதில்லை.

இப்போது தான்யா போன் செய்ததும், ராஜலஷ்மி போனை எடுத்தார். ஏதோ தினமும் பேசுவது போல, மகள் சும்மா தான் போன் செய்திருக்கிறாள் என்று நினைத்து, 'என்னம்மா! இன்னைக்கு என்ன நியூஸ்?'' என்று சிரித்தபடியே கேட்டார்.

''நான் என் அம்மத்தாவைக் கண்டு புடிச்சது தான் நியூஸ்!' என்று சந்தோஷமாகப் பதிலளித்தாள் தான்யா.

'என்ன! ஏதாவது ஜோக் அடிக்கிறியா?'

'இதோ நீங்களே பேசுங்க!'' என்று சொல்லிவிட்டு ஆச்சியிடம் போனைக் கொடுத்தாள் தான்யா.

யாரிடம் போனைக் கொடுத்தாள் என்பது தெரியாமல், 'ஹலோ! என்று தயக்கமாகக் குரல் கொடுத்தார் ராஜலஷ்மி.

'ராஜம்மா! என்று வாஞ்சைடன் ஆச்சி குரல் கொடுக்க, திகைப்பும் சந்தேகமுமாக, 'யாரு?' என்று கேட்டார் ராஜலஷ்மி.

'நான் தாய்யா... உன் சின்னம்மா வள்ளியம்மை!'' என்று ஆச்சி ஆனந்தமாகக் கூற,

'சின்னம்மா! நீங்களா? நீங்களா இத்தனை நாளா, என் பொண்ணைப் பாத்துக்கிட்டிருந்தீங்க? பாட்டி வீட்டுல தான், அவ இத்தனை நாளும் இருந்தாளா? இது எனக்குத் தெரியாதே! தெரிஞ்சிருந்தா, நானே உங்களைப் பாக்க ஓடி வந்திருப்பேனே!

நீங்க என்னை மன்னிச்சுட்டீங்களா சின்னம்மா? எல்லாரும் எப்படி இருக்காங்க? சின்னய்யா, மெய்யப்பன் அண்ணாச்சி எல்லாம் எங்க இருக்காங்க? நீங்களும், பூமித் தம்பியும்தான் அந்த வீட்டுல இருக்கறதா, தான்யா சொன்னாளே? பூமி உங்க பேரனா? மெய்யப்ப அண்ணாச்சி மகளா? மதனி எப்படி இருக்காக?'' என்று வரிசையாகக் கேள்விகளை அடுக்கினார்.

ராஜலஷ்மி கேட்கக் கேட்க, ஆச்சியின் கண்களில் கண்ணீர் பெருகியது. நடந்ததையெல்லாம் அவர் கண்ணீரோடு சொன்னவுடன், ராஜலஷ்மி கதறி

விட்டாள். இருவரும் ஒருவரையொருவர் சமாதானம் செய்து கொள்ளும் வகையில் பேசினர்.

"எனக்கு, இப்பவே உங்களைப் பார்க்கணும் போல இருக்கு சின்னம்மா! நான் உடனே அங்கே கிளம்பி வரேன்!' என்று சொல்லிவிட்டு போனை வைத்தார்.

# 13

மீண்டும் போனை எடுத்த ராஜலஷ்மி, கணவருக்குப் போனைப் போட்டு, 'ஏங்க! இப்பவே எனக்கு உங்க கிட்டப் பேசணும்... கொஞ்சம் வீட்டுக்கு வரீங்களா?'' என்று தழுதழுத்த குரலில் கேட்டாள். பலராம் ஷூட்டிங்கில் இருக்கும்போது, இதுவரை ராஜலஷ்மி போன் செய்ததே இல்லை. எந்தத் தொந்தரவும் கொடுத்ததும் கிடையாது.

இப்போது திடீரென்று மனைவி போன் செய்து அழைக்கவும், 'அவளுக்கு உடம்பு ஏதும் சரியில்லையோ?' என்று நினைத்த பலராம், சொல்லிக் கொண்டு உடனே கிளம்பிவிட்டார்.

அரைமணி நேரத்தில் பலராமின் 'ஆடி' கார் வீட்டினுள் நுழைந்தது. அமைதியாக இருந்த வீட்டிற்குள் நுழைந்த அவரை, ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த அன்னா தான் முதலில் பார்த்தாள்.

'என்னம்மா? இன்னிக்கு எங்கயும் அவுட்டிங்

இல்லையா?அம்மா எங்க?''

'இன்னிக்கு ஒரு நாள், ஒரு சேஞ்சுக்கு வீட்டுல இருக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். தான்யா வேற இல்லாம, ஒரே போர். உங்களோட ரூம்ல படுத்துகிட்ட அம்மா, இன்னும் வெளிய வரவேல்ல!''

'அப்படியா! ஏன்? சரி, நானே போய்ப் பாக்கறேன்.'

மாடிப் படியேறி அவர்களது அறைக்குப் போனார். எப்போதும் நல்ல புடவையும் பளிச்சென்ற புன்னகையுமாக இருக்கும் அவரது ராஜி, அன்று கசங்கிய புடவையும், கலைந்த தலையும், சிவந்த கண்ணுமாகப் படுக்கையில் படுத்திருந்ததைக் கண்டு, அவருக்குத் தாங்க முடியவில்லை.

'ஏய் ராஜி! என்னடா? உடம்பு சரியில்லையா?'

மனைவியை நெருங்கி அவளை மடியில் எடுத்துப் போட்டுக் கொண்டு, அவள் தலையைக் கோதினார். அவரைப் பார்த்ததும், சிறு தூறலாக இருந்த அவளது அழுகை, பெரு மழையாகக் கொட்டியது.

அழுகையினோடே, 'சின்னம்மா கிட்ட, இன்னிக்குப் பேசினேன்' என்று மனைவி சொன்னதும்,

'யாரு? தான்யா தங்கிருக்கிறாளே.....அந்த வீட்டு வள்ளியம்மை ஆச்சி தானே?' என்று நிதானமாகக் கேட்டார் பலராம்.

அவர் சொன்ன பதிலில் விலுக்கென்று தலையைத் தூக்கிய ராஜலஷ்மி, 'அப்ப... உங்களுக்கு எல்லாமே தெரியுமா? எங்கிட்ட ஏன் சொல்லல?' என்று

ஆதங்கத்துடன் கேட்டாள்.

'எப்படிம்மா சொல்றது? தான்யாவை ஆறு மாசம் ஃபீல்டு வொர்க் செய்ய அனுப்பறதுக்கு முன்ன, அவங்கள எனக்குத் தெரியாது. நம்ப மூர்த்தி சார், பூமிநாதனை ரெகமண்ட் பண்ணினது ஞாபகம் இருக்கா?

ஆறு மாசம் நம்ம பொண்ண ஒரு வீட்ல தங்க வெக்கணுமே.... அவங்க யாரு..... எப்படின்னு தெரிஞ்சிக்கணும்னு, உடனே ஒரு பிரைவேட் டிடெக்டிவ் வெச்சு, அவங்களைப் பத்தி விசாரிச்சேன். அப்பத் தான் தெரிஞ்சது... அவங்க உன் சின்னம்மான்னும்... பூமிநாதன் உன் அண்ணன் பையன்றதும்!'

'தான்யா அங்க போயி, மூணு மாசம் ஆகுது. நீங்க இதுவரைக்கும் மூச்சே விடலியே!' என்ற ராஜலஷ்மி, எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு அவரைப் பார்த்தபடி அமர்ந்து கொண்டாள்.

'அவங்க வீட்டுல நடந்ததையெல்லாம், உங்க சின்னம்மா கிட்டக் கேட்டியா?'

'ஆமா! சின்னம்மா நடந்ததையெல்லாம் சொன்னாங்க!' என்று சொல்வதற்குள், ராஜலக்ஷ்மியின் குரல் தழுதழுத்தது.

'அவங்க வாழ்க்கையில நடந்த சில இழப்புகளுக்கு, நாம தான் காரணம். அப்படி இருக்கும்போது, அவங்க நம்மள மன்னிச்சுட்டாங்களான்னு தெரியலை. எனக்கு, என்னை நம்பி என் கையைப் பிடிச்சுட்டு வந்த தேவதை நீ! என்னால

உன்னை எல்லா வகையிலும் சந்தோஷமா வெச்சுக்க முடிஞ்சாலும், இந்த ஒரு வகையில மட்டும்... உன் வருத்தத்தைப் போக்கவே முடியவே இல்லை!

இப்ப, இவ்வளவு வருஷத்துக்கப்புறம்.... அவங்க என்ன நினைக்கிறாங்கன்னு தெரிஞ்சுக்கத் தான், தான்யாவை நான் அங்க அனுப்பினேன். அவ அங்க போனதுலயிருந்து, இந்தப் போன் காலை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனா, இதுக்கே மூணு மாசம் ஆயிடுச்சு. இன்னும் நான் நினைக்கறதெல்லாம், எப்ப நடக்கும்னு தெரியல. உங்க சின்னம்மா, உங்கிட்ட நல்லா பேசினாங்களா?'

'இன்னும் என்ன நடக்க வேண்டும்?' என்று கேட்க நினைத்த ராஜலக்ஷ்மி, அவரது அடுத்த கேள்வியில் அதை மறந்து, மீண்டும் உணர்ச்சி வசப்பட்டார்.

'சின்னம்மா ரொம்ப அன்பா பேசினாங்க. சின்னப் பிள்ளையா நான் இருக்கும்போது, அவங்களுக்கு என் மேல ரொம்பப் பாசம். சின்னையாவும் அப்படித் தான். அவுக இப்ப இல்லயாம். எங்க ஐயாவும், அம்மாவும் போனதும்... அவுகளும் போயிட்டாங்களாம்.

மெய்யப்பன் அண்ணாச்சியும் கேன்சரால போயிட்டாங்க. மதனியும் இப்ப இல்லையாம். அவுகளை காப்பத்தத் தேன், ஊருல இருந்த சொத்து பூரா வித்துருக்காக. அதுக்குப் பொறவு, இப்பச் சின்ன மாங்குடில இருக்காக. நான் சின்னபுள்ளையா இருக்கும்போது, மெய்யப்ப அண்ணாச்சி கூட, அவுக அம்மத்தா வீட்டுக்குப் போயிருக்கேன்.

இத்தனை நாளா, அவுக பாவம் ஒண்டியா அண்ணாச்சி மகனை வளத்திருக்காக! நாமெல்லாம் இருந்தும், பிரயோசனம் இல்லாமப் போச்சே!' என்று சொல்லும்போதே ராஜலஷ்மியின் கண்களில் மீண்டும் கண்ணீர் ஊற்றெடுத்தது.

'நாம அவுகளைப் பாக்கப் போகலாமா? எனக்கு இப்பவே அவங்கள பாக்கணும் போல இருக்குங்க.''

'போகலாம்மா! கண்டிப்பா போகலாம்' என்றவர் மனைவியை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். இருவருக்கும் அவர்களது காதல் வாழ்க்கை மனதில் ரீ-வைண்ட் ஆனது.

# 14

ஆத்தங்குடியின் பெரிய தனக்காரரின் ஒரே மகள் ராஜலக்ஷ்மி. பிறக்கும்போதே தெய்வீகக் களையுடன், கொள்ளை அழகுடன் பிறந்ததால், புதுவிதமாக ராஜலஷ்மி என்று பெயர் வைத்தனர்.

அவளுக்கு ரொம்பப் பிடித்தமான விஷயங்கள் எல்லாமே, கலை சம்பந்தப்பட்டவைதான். ஆடல், பாடல், கூத்து, நடகம், சினிமா என எது நடந்தாலும், அவளால் அந்த இடத்தைவிட்டு நகர முடியாது. அவர்கள் ஊரில் கூத்து நடந்தபோது தான், ராமநாதனை முதன் முதலாகப் பார்த்தாள்.

ராமநாதனுக்கு நடிப்பதற்குத் தேவையான

முகவெட்டும், உயரமும், தோற்றமும், கணீரென்ற குரலும் இருந்தது. யாருமே இல்லாத அனாதையான ராமநாதன், சிவகங்கை அருகே இருந்த ஒரு கிராமத்தில் விவசாயக் கூலி. அவனுடைய லட்சியமே, பெரிய நாடக நடிகராக வேண்டும் என்பதுதான்.

அதனால், ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்து, ஊர் ஊராகப் போய்க் கொண்டிருந்தான், இப்போதுதான் கொஞ்ச நாளாக அவனுக்கு ராஜபார்ட் வாய்ப்பு கிடைக்க ஆரம்பித்திருந்தது. நாடகங்களில் நடித்துக் கொண்டும், வாய்ப்பு இல்லாத நேரத்தில் வயல் வேலை என்றும், வாழ்கையை ஓட்டிக் கொண்டிருந்தான்.

ஒருமுறை, பத்துநாட்கள் ஆத்தங்குடி கிராமத்தில், ‘அல்லி அர்சசுனர்’ நாடகம் போடுவதற்கான வாய்ப்பு வந்தது. அர்ஜுனனாக ராஜபார்ட். அவன் நடிப்புக்கு, இப்போது ஏகப்பட்ட ரசிகர்கள். உற்சாகத்துக்குக் கேட்பானேன்?

அதிலும், தினமும் பட்டுப் பாவாடை தாவணியில், கொள்ளை அழகுடன் கூடிய ரசிகையொருத்தி அவன் நாடகத்துக்கு வந்து, முதல் வரிசையில் அமர்ந்து கொண்டு இருந்தாள். அவள் அப்பா, பெரும் பணக்காரர் போலும். அவளுடைய சிபாரிசில், அவர்களது குழுவை வீட்டுக்கு அழைத்து நல்ல விருந்தளித்ததோடு, துணிமணிகளையும் பரிசளித்தார்.

முதலில் அவளை ஒரு நல்ல ரசிகையாக மட்டுமே நினைத்தான் ராமநாதன். ராஜலக்ஷ்மியோ, அவன் நடிப்பில் மயங்கி, 'ஹீரோ ஒர்ஷிப்' செய்த்தோடு,

மணந்தால், அவனைத்தான் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தாள்.

ராமநாதன் எங்கு நாடகம் போட்டாலும், அவனைப் பின்தொடர்ந்து போனாள். வீட்டிலிருந்த வர்கள் இதை முதலில் சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை. அவள் ராமநாதனிடம் தன் காதலைச் சொன்னபோது, அசந்து போனான். அவனுக்கு உள்ளூர அவளைப் பிடித்திருந்தாலும், இருவருடைய குடும்ப நிலையும் கொஞ்சம் கூடப் பொருந்தாது என்பதால், முடிந்தவரையில் அவளது மனதை மாற்ற முயன்றான்.

ஆனால் அவள் பிடிவாதமாக இருக்க, அவனும் இளைஞன் தானே... அவன் மனமும் அவளிடம் சாய ஆரம்பித்தது. பின்பு, அவனும் அவளைக் காதலிக்க முடிவு செய்தான்.

இருவரும் ஒரே இனமாக இருந்தாலும், ராமநாதனின் ஏழ்மை நிலை இருவரையும் சேர விடாதென்று, ராஜலஷ்மிக்கு நன்றாகவே புரிந்தது. அதனால், வீட்டில் தங்கள் காதலை அவள் சொல்லவேயில்லை.

அப்பா திடீரென்று திருமணம் செய்து வைக்க முடிவு செய்வார் என்று. அவள் நினைக்கவேயில்லை. திருமணம் வேண்டாமென்று சொல்ல நினைத்தாலும் அது முடியாததால், திருமணத்திற்கு முதல் நாள் ராமநாதனுடன் ஊரை விட்டுக் கிளம்பிவிட்டாள். இருவருமாக தமிழ்நாட்டில் இருந்தால் மாட்டிக் கொள்வோம் என்று, மும்பைக்கு ரயில் ஏறினர்.

ராஜலஷ்மி எடுத்த முடிவு வேண்டுமானால் தவறாக இருக்கலாம், ஆனால் தேர்ந்தெடுத்த துணை, நல்ல துணைதான். ராமநாதன் அவளை அவ்வளவு சந்தோஷமாக வைத்துக் கொண்டார். மும்பைக்கு வந்த ஓரிரு ஆண்டுகள் போராட்டமாக இருந்தாலும், போகப்போக அவர்களது வாழ்க்கைத் தரம் உயர ஆரம்பித்தது.

ராமநாதனுக்கு நடிப்பைத்தவிர வேறு எதுவும் தெரியாததால், ஒரு லைட்மேன் சிபாரிசில், சினிமா ஸ்டுடியோவில் வேலைக்குச் சேர்ந்தான். அப்படியே ஒன்றிரண்டு சீன்களில் நடித்தவனின் நேரம் நன்றாக இருந்த காரணத்தால், ஒரு பெரிய டைரக்டர், புதுமுகம் தேடியபோது ராமநாதனுக்கு வாய்ப்பு கிடைத்தது. 'ராமநாதன்' என்ற அவனது பெயர், சினிமாவுக்காக 'பலராம்' என்று மாற்றி வைக்கப்பட்டது.

சிவந்த, ஒல்லியான நடிகர்களையே அதிகம் பார்த்த வடநாட்டவர்க்கு அவனது மாநிறமும், கட்டுமஸ்தான உடலும் வித்தியாசமாக இருந்ததால் வரவேற்பு குவிந்தது. தற்போது சுமார் இருநூறு படங்களுக்குமேல் நடித்து, வயது அறுபதைத் தொடும் நிலையில், ஹிந்திப் படவுலகின் லெஜண்ட் வரிசையில், அவருக்கும் இடம் கிடைத்தது.

பொருளாதார வசதி மேம்படும் வரை, குழந்தைகள் வேண்டாம் என்று முடிவு செய்தவருக்கு, வீட்டைக் கட்டிய பின்பே தான்யா பிறந்தாள். அப்போதே, அவருக்கு வயது முப்பத்தி ஐந்து. இரண்டு

வருடங்கள் கழித்து அன்னா பிறந்தபோது, அந்த வீடு பங்களாவானது. ஒரு முன்னணி நடிகருக்கு என்னென்ன வசதிகள் இருக்குமோ, அவையெல்லாம் அவரிடம் வந்து சேர்ந்தது.

ஆனால் இவையனைத்தையும் பெற்ற பின்னரும், அவர் ஒன்றை மட்டும் மறக்கவில்லை. வசதியான குடும்பத்தை விட்டுவிட்டு, தன்னையே நம்பி வந்த ராஜலக்ஷ்மியை, எதற்காகவும் வருத்தப்பட வைக்கக் கூடாதென்பது தான் அது.

அவளுக்கோ, தன் குடும்பத்தைப் பிரிந்து வந்த வருத்தத்தைத் தவிர வேறு எந்தக் கவலையும் இருந்ததில்லை. இப்போது அதையும் போக்குவதற்கான முயற்சியை, அவளுடைய அன்புக் கணவர் எடுத்திருக்கிறாரே! இன்னும் என்ன வேண்டும்?

# 15

பூமிநாதன் மாலையில் வீட்டிற்குள் நுழைந்த போது ஆச்சியும், தான்யாவும் இழைந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். எப்போதுமே இருவரும் ஒன்றாக ஏதாவது கதை பேசிக் கொண்டிருப்பார்கள் தான். இப்போது, பாசப் பிணைப்பு இன்னும் அதிகமாகியிருப்பதாகத் தோன்றவும், 'என்ன விஷயமாக இருக்கும்?' என்று யோசித்தபடியே உள்ளே நுழைந்தான்.

ஆச்சி மலர்ந்த முகத்தோடு, 'பூமி! தான்யா யாருன்னு தெரியுமாப்பா? அவ, எனக்குப் பேத்தி, உனக்கு அயித்தை மக! உனக்கு இந்த விஷயத்தைச் சொல்லத் தான்... நானும், தான்யாவும் அப்பப் புடிச்சு போன் போட்டோம். ஆனா, 'போன் ஆப் பண்ணியிருக்கு' என்ற சேதி வந்துட்டே இருதுச்சு. என்னப்பா ஆச்சு போனுக்கு? என்று மகிழ்ச்சியாகக் கேட்டார்.

'அது சார்ஜ் இல்லாதனால, 'சுச் ஆப்' ஆயிடுச்சு ஆச்சி! ஆமா, இது என்ன... நீங்க புதுக் கதை சொல்றீங்க? நமக்குச் சொந்தக்காரங்களே கிடையாதுன்னு சொல்லுவீங்க... இப்ப, இவங்க எப்படி நமக்குச் சொந்தமாம்?

ஆச்சி கடந்தகால வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னார்.

'ராஜலக்ஷ்மி இவங்க ஐயா கூட போனதுமே, அடுத்தடுத்து எல்லாம் நடந்து போச்சா... அதனால, கோபத்துல அவளைப் பத்திப் பேசறதையே விட்டுப்புட்டோம். அப்புறம், உங்கப்பாவும் அம்மாவும் போன பொறவு, இதெல்லாம் பேசக்கூட நேரமில்லை!

இப்பத் தான் எல்லாம் தெரிஞ்சிடுச்சே! அவுக எல்லாம், இங்க உடனே வாரோம்னு சொல்லியிருக்காக! நானும் கண்ண மூடிட்டா, உனக்கு யாரு ஆதரவுன்னு கவலைப்பட்டேன். அந்தக் கவலைய, குன்னக்குடி முருகன் தீத்துப்புட்டான்ப்பா.''

முகமெல்லாம் புன்னகையுடன் அவர்கள்

பேசுவதை தான்யா கேட்டுக் கொண்டிருந்தாள். அவர் சொன்னதைக் கேட்டதும் ஆதரவாக அவரை அணைத்து, 'அப்படியெல்லாம் யோசிக்காதீங்க ஆச்சி! நாம எல்லாரும், இனிமே சந்தோஷமா இருப்போம்'' என்றாள்.

எல்லோரும் பேசி முடித்துச் சாப்பிட்டும் முடித்த பின்னர், ஆச்சி அன்றைய திருப்புமுனைச் சம்பவங்களாலும், அதிகமாக உணர்ச்சிகளைக் கொட்டியதாலும், களைத்துப் போய் படுக்கச் சென்று விட்டார். பூமிநாதன் வீட்டுக்கு வெளியேயிருந்த திறந்த வெளியில் படுத்துக் கொண்டு, மேலே தெரிந்த நிலாவைப் பார்த்தபடி, தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

பொதுவாக்வே, சாப்பிட்டவுடனேயே தன் அறைக்குச் சென்று விடும் தான்யா, அன்று பூமிநாதனிடம் எப்படியும் பேசி விட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டாள். அவளுடைய குடும்பம் சின்ன மாங்குடிக்கு வருவதற்கு முன்பு, தன் மனதிலுள்ளதை அவனிடம் சொல்லிவிட வேண்டுமென்பது அவளது எண்ணம்.

எனவே அவன் வெளியே படுத்திருப்பதை அறிந்து, அங்கேயே சென்றாள். அவள் வந்ததும் எழுந்து அமர்ந்த பூமிநாதன், 'வா தான்யா! உட்காரு. சொல்லு! அப்புறம், உன் ஆராய்ச்சியெல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு?' என்று யதார்த்தமாகக் கேட்டான்.

தான்யா அவனருகில் அமர்ந்தபடி, 'ம்... நல்லாதான் போயிட்டிருக்கு!' என்று சொன்னாள்.

இருவரும் சிறிதுநேரம் செடி கொடிகளைப் பற்றிப் பேசிவிட்டு, அமைதியாக அந்த நேரத்தை அனுபவித்தனர். அமைதியான இரவு நேரம் அது.

பவர்கட் நேரமானதால் சுற்றிலும் இருளாக இருந்தது. ஆனாலும், நிலவொளி, மெல்லிய தென்றல் காற்று... என்று சூழல் என்னவோ ரொமான்டிக்காக இருந்தது. தான்யா மெல்ல தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

‘வந்து... நாங்க உங்க ரிலேட்டிவ்ன்றதுல, உங்களுக்கு சந்தோஷம் எதுவும் இல்லையா? நீங்க அந்த ந்யூஸை, ரொம்பச் சாதாரணமாத் தானே எடுத்துக்கிட்டீங்க? நீங்க கஷ்டப்படும்போது நாங்க உதவலையேன்னு, கோபமா?‘

அந்த இருளிலும் திரும்பி அவள் முகத்தைப் பார்த்த பூமிநாதன், அவளது கண்களைக் கூர்மையாக நோக்கியபடி, ‘எனக்கு, இதனால பெரிசா பாதிப்பு ஏற்பட்ட மாதிரி தெரியல. நீ இந்தப் பயிற்சிக்காக, மூவாயிரம் மைலுக்கு அந்தப் பக்கம் இருக்கிற மும்பையிலருந்து, இங்க வந்த.

இதோ, உன் வேலை முடிஞ்சதும், கிளம்பிப் போகப் போற. என் பொழப்பு இங்க இருக்குது. எப்பவாவது உன் கல்யாணத்தும் போதோ... இல்லை, என் கல்யாணத்தும் போதோ, பாத்துக்கப் போறோம். இதுல எக்ஸைட் ஆக, என்ன இருக்குது?‘

‘அடப்பாவி! நாம ஒட்ட வந்தால், இவன் இப்படி வெட்டறானே! இவனுக்கு ஜாடையா பேசினாலல்லாம்

புரியாது போலிருக்கே! விஷயத்தை, உடைச்சுத் தான் சொல்லணும் போல' என்று மனதுக்குள் புலம்பினாள்.

''நாம ஏன்... வேற வேற வழியில போகணும்? இரண்டு பேரும் ஒரே பாதையில போனா...'

'என்ன சொல்ற நீ? உங்கப்பா வைச்சுக் குடுக்கறேன்னு சொன்ன பண்ணையை, இந்த ஊருலயே வைக்கலாம்னு இருக்கியா? அந்த மாதிரி ஏதாவது யோசனை இருந்தா சொல்லு... அதுக்கு இந்த ஊரு வேண்டாம். இது, தண்ணிப் பஞ்சம் உள்ள ஊரு. நானே நல்ல இடமாப் பாத்து, உனக்கு வாங்கித் தரேன்.'

'மண்ணாங்கட்டி! எனக்கு மாப்பிள்ளையா வாய்யான்னா, என்னவோ ரியல் எஸ்டேட் ப்ரோக்கர் மாதிரி பேசிக்கிட்டு இருக்கான்! ம்ஹூம்... இதெல்லாம் சரிவராது' என்று நினைத்தாள் தான்யா.

'நீங்க, எனக்கு மாமா மகன் முறையாமே! ஆச்சி சொன்னாக! அப்ப நா, உங்களை எப்படிக் கூப்பிடணும் சொல்லுங்க?'

'எப்படியும் கூப்பிட வேணாம்! இந்த அத்தான், மச்சான் எல்லாம் ஓல்டு பேஷன்... பூமிநாதன் சார்-னே கூப்பிடு! அதுவே நல்லாயிருக்கு!'

'ட்யூப் லைட்டை எரிய வைத்தே தீருவது' என்ற வெறி வந்தது தான்யாவிற்கு.

''நான்... உங்களை...'' என்று ஆரம்பித்தவள், பக்கத்தில் எதுவோ ஓடவே, பயந்து போய் தாவி பூமியின் மடியில் உட்கார்ந்து, அவன் கழுத்தை இரு கைகளாலும்

கட்டிக் கொண்டவள், கண்களை இறுக மூடிக் கொண்டாள். முதலில் பயத்தினால் கட்டிக் கொண்டாலும், சில வினாடிகளுக்குப் பிறகு, 'இதை, ஏன் நம் மனதில் இருப்பதைச் சொல்லப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?' என்று நினைத்தாள்.

'பூமி சார்! ஐ லவ் யூ!' என்று அவன் காதோரமாகச் சொல்லி விட்டு, அவனது கன்னத்தில் முத்தமிட்டாள். அவள் வளர்ந்த சூழலால், 'மனதில் இருப்பதைச் சொல்ல, என்ன வெட்கம்?' என்ற எண்ணம் தான்யாவிற்கு.

முன்புபோல ஓரப் பார்வை பார்ப்பது, காலால் கோலம் போடுவதெல்லாம் அந்தக் கால தாவணி அணியும் கிராமத்துப் பெண்களோடு போய் விட்டதே! ஆனால், பூமிநாதனின் ரியாக்ஷன் தான், அவள் சற்றும் எதிர்பாராதது!

சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் முன்னர் கோபப்பட்டவன், இப்போது அவள் தன் காதலைச் சொன்னவுடன், எந்த ரியாக்ஷனையும் காட்டாமல், அமைதியாகத் தனது தோளைச் சுற்றியிருந்த அவளது கைகளை தன் இரு கைகளாலும் விடுவித்தான்.

'ஸாரி தான்யா! நான் உன்னை இப்போ அந்த மாதிரி யோசிக்கவே இல்லை. ஐயம் ஸாரி, ஒன்ஸ் எகெய்ன்!' என்று சொல்லிவிட்டு, அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

யாரோ முகத்தில் ஓங்கி அறைந்தது போல இருந்தது தான்யாவிற்கு அவளுடைய கனவு உலகம்,

ஒரே நொடியில் சூனியமானதுபோல் தோன்றியது. எவ்வளவோ நாட்களாக மனதில் பொத்தி வைத்திருந்த பொக்கிஷமொன்று, ஒரு நொடியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டதே!

தன்னை வேண்டாமென்று சொல்ல என்ன காரணம் இருக்க முடியும்? ஆனால் அவன் ஆரம்பத்திலிருந்தே அவளிடம் பெரிதாக ஈடுபாடு காட்டவேயில்லையே! ஏன் வந்தாய் என்பதுபோல் தானே நடந்து கொண்டான்?

நாம் தான் அவசரப்பட்டு விட்டோமோ? அவன் செயல்களால் அவ்வப்போது அக்கறை காட்டியதும், கொஞ்ச நாட்களாக நட்பாகப் பழகியதும், நம் கண்ணை மறைத்து விட்டதோ?'

மனம் பல விதங்களிலும் அலை பாய்ந்தது. அரை மணி நேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தவள், மெள்ள எழுந்து சென்று அவளது அறையில் படுத்துக் கொண்டாள்.

# 16

**ம**றுநாள் காலை எழுந்தபோது, தான்யாவின் கண்கள் சிவந்திருந்தன. அவள் தான், இரவு முழுவதும் உறங்கவேயில்லையே! அம்மா நேற்றே போன் செய்து, அவள் வீட்டினர் அனைவரும் இன்று பன்னிரண்டு மணிக்கு வந்துவிடுவார்கள் என்று சொல்லியிருந்தார்.

அவர்களுடைய வருகைக்காக, ஆச்சி தடபுடலாக ஏதேதோ ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். பூமிநாதனுக்கும் நிறைய வேலைகளைச் சொல்லியிருந்தார் கூடவே சிகப்பிக்கும் ஆணைகள் தூள் பறந்து கொண்டிருந்தது.

ஆனால், தான்யாவின் மனதில் கொஞ்சம் கூட அந்தச் சந்தோஷம் இல்லை. மௌனமாக்க் கிணற்றடிக்குச் சென்று, அங்கு ஏற்கெனவே இருந்த தண்ணீரில் குளித்துத் தயாரானாள். அதன் பிறகும் சமையறைக்குள் போகாவிட்டால், சரியாக இருக்காது என்று நினைத்தவள், முயற்சி செய்து முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

ஆனாலும், தவறாகப் புரிந்து கொண்டார் ஆச்சி. வெகுநாள் கழித்து தன் குடும்பத்தைப் பார்க்கும் சந்தோஷத்தில், அவர்களோடு வெகுநேரம் போனில் பேசிய பின்பும், தூங்காமல் இருந்திருக்கிறாள் என்று நினைத்தார்.

'என்னாம்மா! ராவு முச்சூடும் தூங்கவே இல்லியா? கண் சிவந்துபோய் கிடக்கே!'' என்று கேட்டார். ஆச்சி அவ்வாறு கேட்டவுடன், என்ன சொல்வதென்றே தெரியவில்லை தான்யாவிற்கு. அங்கேயே உட்கார்ந்து கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்த பூமிநாதன், அவளது நிலையை இன்னும் மோசமாக்கினான்.

அவனது முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை.

குற்ற உணர்வோ, தர்மசங்கடமோ கூட இல்லாதது, தான்யாவின் வலியை அதிகப்படுத்தியது. அத்தோடு, 'தன் தனிப்பட்ட தோல்வியை, யாருக்கும் இனி வெளிக்காட்டக் கூடாது' என்ற முடிவையும் எடுக்க வைத்தது.

உடனே முகத்தை சீராக்கிக் கொண்டு வரவழைத்த புன்னகையுடன் 'ஆமா ஆச்சி! அம்மா அப்பாகூட பேசின பிறகு, ரொம்ப நாளா பேசாமல் இருந்த ஃபிரெண்ட்ஸோட எல்லாம் சேட் பண்ணனிதுல, டைம் போனதே தெரியல ஆச்சி. அதனால, தூங்க லேட் ஆயிடுச்சு'' என்று சொல்லும்போதே, அவளது கண்கள் சவாலுடன் பூமிநாதனின் முகத்தையும் நோக்கின.

'பார்! நீ என்னை நிராகரித்ததால், நான் ஒன்றும் இடிந்து போகவில்லை; நன்றாகவே இருக்கிறேன்!' என்பது போல நோக்கியவளைப் பார்த்தவனின் முகத்திலோ, இப்போதும் எந்த உணர்ச்சியும் இல்லை. ஏதோ, தனக்கும் இந்தச் சூழலுக்கும் சம்பந்தமேயில்லை என்பதுபோல, அவன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கஞ்சியைக் குடித்து முடித்துவிட்டு, 'அப்ப சரி ஆச்சி! என் வேலையை முடிச்சுட்டு வரும்போது, நீங்க சொன்ன வேலையையும் முடிச்சுட்டு வந்திர்றேன்' என்றவன், அவளைப் பார்க்காமலே அறையை விட்டு வெளியேறினான்.

'உன்ற அத்தையும், மாமாவும் பன்னண்டு மணிக்கு வாராக! அதுக்குள்ள வந்துரு தம்பி!' என்று

ஆச்சி பின்னாலிருந்து குரல் கொடுத்தார். தான்யாவின் மனம் கசந்தது.

'என்ன பெரிய சொந்தம்?' என்று நேற்று கேட்டவனிடம், ஆச்சி வலியப் போய் அவள் குடும்பத்தைப் பற்றிச் சொன்னது, கசப்பான முறுவலைத் தோற்றுவித்தது.

'வாம்மா! வந்து, நீயும் கஞ்சியைக் குடிச்சிப்புடு. ராஜியும் மாப்பிள்ளையும் வராகன்னு, ஆட்ட அடிச்சி பிரியாணி போடச்சொல்லி இருக்குதேன். செட்டி நாட்டு பிரியாணின்னா... ராஜி ரொம்ப விருப்பமா சாப்பிடுவாப்புல. என் பேத்தி அன்னலஷ்மிக்கு என்ன புடிக்கும்? அப்படியே, மாப்பிளைக்கு என்ன புடிக்கும்ன்னும் சொல்லு! அதையும் செய்யச் சொல்லுதேன்.'

ஆச்சி ஒர் சமையற்காரம்மாவை ஏற்பாடு செய்திருந்தார். கூட உதவிக்குச் சிவப்பி. ''அவங்க எல்லோருக்குமே செட்டிநாடு பிரியாணியே பிடிக்கும் ஆச்சி! அன்னா, ஃபுல் கட்டு கட்டுவா பாருங்க! '' என்று அவருக்குப் பதில் சொன்னவள், அதிக நேரம் அங்கிருந்தால், அவளது மனநிலையை அவர் கண்டுபிடித்து விடுவாரோ என்று பயந்தாள்.

கஞ்சியைக் குடித்ததும், ''கொஞ்சம் வேலையிருக்கு ஆச்சி!'' என்று கூறிவிட்டு, தன் அறைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.அறைக்கு வந்தவுடன் ஒரு புத்தகத்தை எடுத்து, அதில் என்ன இருக்கிறது என்றே தெரியாமல் வெறித்தவளுக்கு, இரவு

முழுவதும் உறங்காத களைப்பு மேலிட்டு, கண்ணை மூட வைத்தது.

வாசலில் கார் நின்றதோ, எல்லோருடைய பேச்சுக்குரலோ... எதுவுமே அவளை எழுப்பவில்லை. தான்யாவைத் தேடி அவளது அறைக்கே வந்த அன்னா அவளை உலுக்கி எழுப்பி, ‘ஹே தான்யா! இது தான் நீ ஃபார்மிங் கத்துக்கற லட்சணமா?'' என்று கலாய்த்த போதுதான், அவளுக்கு விழிப்பே வந்தது.

கண்களைத் திறந்தவள், வெகு நாட்கள் கழிந்துத் தன் செல்லத் தங்கையைக் கண்ட சந்தோசத்தில் ‘ஏய்! எப்ப வந்தே? அப்பா அம்மா எல்லோரும் எங்கே?'' என்று அவளை அணைத்தபடியே கேட்டாள்.

‘நாங்க வந்து பத்து நிமிஷமாகுது! அங்க ஒரே பாசமழை பொழியுது! அதுல நனையாம தப்பிச்சி, நான் உன்னைத் தேடி இங்க வந்தா... நீ கும்பகர்ணி மாதிரி, பட்டப்பகலில் தூங்கிட்டிருக்க. அதான், உன்னக் கிளப்பிக் கூட்டிட்டுப் போக வந்தேன்!'' என்றாள் அன்னலஷ்மி.

‘ஏய்! ஆச்சியை அப்படில்லாம் கலாய்க்காதடி! அவங்க ரொம்ப நல்லவங்க.''

‘ஓ! அப்ப நம்ம மச்சான் எப்படி?'' என்று சொல்லிவிட்டு, கண்களைச் சிமிட்டினாள் அன்னா.

‘ஏய்! யாரைடி சொல்ற? பூமி சாரையா? யாரு உனக்கு, இந்த ரிலேஷன்ஷிப்பெல்லாம் சொல்லிக் குடுத்தாங்க?''

‘எத்தனை சினிமாவுல பாத்திருக்கேன்? அது

இருக்கட்டும்! இது என்ன அசிங்கமா பூமி ஸார்? கேக்கவே நல்லா இல்லையே!''

''அது நம்ம ரிலேஷன்ஷிப் தெரியாம இருக்கும்போது, அப்படிக் கூப்பிட்டது. அது அப்படியே பழகிடுச்சு' என்ற தான்யா, இதற்குமேல் பதில் சொன்னால் ஆபத்தான இடத்துக்குப் போகுமென்று பயந்து,

'வாடி! நாமும் அங்க போகலாம்'' என்று அன்னாவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தபோது, தங்கை சொன்னதுபோல பாச மழை இன்னும் ஓய்ந்திருக்கவில்லை.

ஆச்சியும் ராஜலக்ஷ்மியும் அருகருகே அமர்ந்து, ஒருவரது கையை ஒருவர் பிடித்தபடியே பேசிக் கொண்டிருந்தனர். பலராம், எதிரில் அமர்ந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். பூமிநாதனோ, கதவோரத்தில் கையைக் கட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

'வழக்கம் போல ஒட்டாமல்' என்று தான்யா நினைத்துக் கொண்டாள்.

'வாங்கப்பா! வாங்கம்மா!' என்றவள், தன் அப்பாவின் அருகில் சென்று உட்கார்ந்து, அவரது தோளில் செல்லமாகச் சாய்ந்து கொண்டாள். ராஜலஷ்மி அவர்களுக்கு அம்மா என்றாலும், அவர்கள் மூவருக்கும் (அம்மா ராஜலஷ்மியையும் சேர்த்து) அன்பும், அரவணைப்பும் தருவது அவள் அப்பாதானே! அதனால், இப்போது மனம் சங்கடப்படும்போது,

இயல்பாக அப்பாவிடம் போய் ஒட்டிக்கொண்டாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு, ராஜலஷ்மி மீண்டும் ஆச்சியிடம் பேச்சைத் தொடர்ந்தார். அன்னாவும் அவளருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

பலராம் மகளின் கைகளை அன்பாகப் பிடித்தபடி, ''என்னடா! உன் டிரெய்னிங் எல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு? நல்லா கத்துக்கிட்டியா? சிட்டி லைப்லயே இதுவரை இருந்துட்டு, இப்ப வில்லேஜ் எக்ஸ்பீரியன்ஸ் எப்படியிருக்கு? உனக்குப் பிடிச்சுதா? நல்லா என்ஜாய் பண்ணினியா?' என்று கேட்டார்.

பூமிநாதன் அவர்கள் பேசுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்ததால் சங்கடப்பட்டு, நிமிர்ந்து அவனைப் பாராமல் அப்பாவை மட்டும் பார்த்தபடி, 'நல்லாயிருந்துச்சுப்பா! நிறையக் கத்துக்கிட்டேன். ஆச்சி ரொம்ப அன்பா பாத்துகிட்டாங்கப்பா' என்றாள்.

நிமிர்ந்து பூமிநாதனைப் பார்த்தவர், ''என்னப்பா! தான்யா தனியா பார்ம் (Farm) வெச்சு நடத்தற அளவுக்கு ரெடியாயிட்டாளா? இன்னும் என்னென்ன கத்துக்கணும்?' என்றார்.

அப்போதும், தான்யா நிமிர்ந்து பூமிநாதனைப் பார்க்கவில்லை. அவரது கையைப் பிடித்தபடி குனிந்தபடியே இருந்தாள்.

'அவங்க எல்லாம் கத்துக்கிட்டாங்க அங்கிள்! ஷார்ப்பா இருந்ததுனால, எல்லாமே சீக்கிரமே பிக்கப் பண்ணிக்கிட்டாங்க. இன்பேக்ட், இப்ப நீங்க

போகும்போது... அவங்களையும் கூடவே கூட்டிட்டுப் போயிடலாம்.'

திடீரென அவன் இவ்வாறு சொன்னதும், தான்யாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. 'இதுவரை, இப்படி ஒரு பேச்சு நடக்கவேயில்லையே! இப்போது என்ன திடீரென்று?' தலை குனிந்திருந்த தான்யா, சடாரென்று தலையை நிமிர்த்தி, இதுவரை பார்க்காமல் தவிர்த்த பூமியின் முகத்தைப் பார்த்தாள். அவனது முகத்திலோ, எந்த உணர்ச்சியும் இல்லை.

'நேற்று, நான் என் காதலைச் சொன்னதும், அவனுக்கு நான் நியூஸென்ஸாகத் தெரிகிறேனோ? இங்கேயே இருந்தால், இவள் தொல்லை தாங்காது... பேசாமல், ஊருக்கே பேக் பண்ணிவிட வேண்டியது தான் என்று முடிவு செய்து விட்டானே! என்னவோ, வந்தவுடனே உன்னை வா வா என்று ஆசையாக வரவேற்ற மாதிரி, இது என்ன நினைப்பு தான்யா? எப்போதுமே, ஏன் வந்தாய் என்பதுபோல் தானே அவன் உன்னை நடத்தியிருக்கிறான்? என்னவோ, இப்ப மட்டும் புதுசா அலட்சியப்படுத்தற மாதிரி சொல்ற?'

'தான்யாவோட தொல்லையைத் தாங்க முடியவில்லையா? அதான், பேக்-அப் பண்ணச் சொல்லிட்டீங்களா பூமி அத்தான்?' அன்னா என்னவோ, விளையாட்டாகத் தான் கேட்டாள். ஆனால், தாழ்வு மனப்பான்மையில் உழன்று கொண்டிருந்த தான்யாவிற்கு, அது கண்ணீரை வரவழைத்தது.

பலராம், வந்ததிலிருந்தே பார்த்துக் கொண்டு

தான் இருந்தார்! ‘இதுவரை, தான்யா பூமிநாதனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை... பூமிநாதன் என்னவோ, துணிக்குப் போடும் கஞ்சியை நிறையக் குடித்தவன்போல, விறைப்பாக இருக்கிறானே!

சரி, தம்பிக்கு தன்மானம் நிறைய இருக்கிறதுபோல என்று நினைத்தால், அழகு சொட்டும் என் பெண்ணை, என்னவோ கல்லையும், மண்ணையும் பார்ப்பதுபோல உணர்ச்சியே இல்லாமல் பார்க்கிறானே! இப்போது அன்னா விளையாட்டாகச் சொன்னதற்கு, தான்யா ஏன் டென்ஷன் ஆகிறாள்?’

‘ம்‘ என்ற பலராமின் முகத்தில், யோசனை படர்ந்தது. ‘சரி! இதைப் பிறகு யோசிப்போம்’’ என்று ஒத்தி வைத்துவிட்டு மகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார். அந்தச் சில நொடிகளின் அமைதியில், அன்னாவின் கேள்விக்கு எந்தப் பதிலையும் பூமிநாதன் சொல்லவில்லை; ஆமோதிக்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை! பேசாமல் வேடிக்கைப் பார்த்தான்.

தலைகுனிந்து, தன் கலங்கிய கண்களை மறைக்க முயன்றாள் தான்யா. கடைசியில், இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பலராம்தான் சமாதானம் செய்ய வேண்டியிருந்தது.

‘என்னம்மா! அக்காவை இப்படிக் கிண்டல் செய்யறே? அவ இந்த ஃபார்ம் செட் பண்ற விஷயத்துல எவ்வளவு சென்சிடிவ்னு, உனக்குத் தெரியும் தானே? நீயே இப்படிச் சொல்லலாமா?’’

தந்தையின் அந்த ஆறுதலான பதிலில், அவரிடம்

இன்னும் நெருங்கி அமர்ந்து, தோளில் சாய்ந்து கொண்டாள். அன்னாதான் ‘ஸாரி தான்யா!’’ என்று தர்மசங்கடமாகச் சொன்னாள். அவள் விளையாட்டாகச் சொல்லப் போக, அது அக்காவைப் புண்படுத்தி விட்டதே!

ஆனால், பலராமின் யோசனையில் இப்போது கவலை கலந்திருந்தது. ’அவரது பூப்போன்ற மகள், ஒரு சின்னக் கேலிக்குக் கண் கலங்கும் அளவுக்கு, இங்கு என்ன நடந்திருக்கும்?’

‘தன் இரண்டு மகள்களையுமே பணத் திமிரோடோ, அகம்பாவத்துடனோ வளர்க்கவில்லையே! மிகவும் எளிமையாகத் தானே வளர்த்தோம்? அதனால், தான்யா ஏதேனும் செய்திருக்க முடியாது. அப்படியானால், பூமிநாதன்தான்...’ என்று யோசித்தார். ஆச்சியின் பதிலும் அவரது கருத்து சரியே என்று உறுதிப்படுத்தியது.

அதுவரை பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்த ஆச்சியும், ராஜலஷ்மியும் இவர்களது பேச்சால் கவனம் கலைந்து, இவர்கள் பக்கமாகத் திரும்பினர். அவர்கள் பேசினாலும், அன்னா சொன்னது ஆச்சியின் காதில் விழுந்திருந்தது.

அவள் விளையாட்டாகப் பேசுகிறாள் என்று நினைக்க, அது தான்யாவைக் கண்கலங்க வைக்கவும், ‘என்னம்மா இப்படிச் சொல்லிப்புட்டே? தான்யா போல ஒரு தங்கமான பொண்ண, யாராவது அப்படிச் சொல்லுவாகளா? அது மனசுக்குள்ள, ரொம்ப நாளா

உங்களையெல்லாம் காங்காம ஒரே ஏக்கம்.

நேத்துலருந்து, உங்க நினப்பாவே இருக்கு. இப்ப எங்க கூடவும் பழகிடுச்சா? அதான், எங்களைப் பிரிஞ்சி இப்ப ஊருக்குப் போகணும்னதும், வருத்தப் பட்டிருக்கும்!'' என்றார் இடைபுகுந்து.

தனது மானத்தைக் காப்பாற்றிய ஆச்சிக்கு மனதிற்குள் நன்றி சொன்ன தான்யா, எழுந்து போய் அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு செல்லம் கொஞ்சினாள்.

சூழ்நிலை, மீண்டும் சகஜமானது. ஆச்சி அனைவரையும் சாப்பிட அழைக்க, எல்லோரது கவனமும் அதில் சென்றது. இரண்டு நாட்கள் ஆனந்தமாகப் பொழுது கழிந்தது. தான்யா, பூமிநாதனுடன் தனியாக இருக்கும் சூழலைத் தவிர்த்தாள்.

அவனும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை என்பது வேறு விஷயம். எல்லோரும் ஓய்வாக அமர்ந்திருந்த நேரத்தில் பேச்சை ஆரம்பித்தார் பலராம்.

'தம்பி! நான் உங்ககிட்ட என் பொண்ணுக்குத் தேவையான டிரெய்னிங் கொடுத்தால், உங்க ஊரோட வளர்ச்சிக்கு ஒரு கோடி ரூபாய் நிதியைத் தர்றதா சொன்னேன். அதுக்கு, நீங்க என்னென்ன திட்டங்கள் வெச்சிருக்கீங்கன்னு... உங்களுக்கு ஆட்சேபணை இல்லன்னா, நான் தெரிஞ்சிக்கலாமா?

'ஸார்! அதைப் பத்தி இப்ப என்ன? நீங்க சொன்னதே போதும். எனக்குப் பணமெல்லாம்

தேவையில்லை. நானே பாத்துக்குவேன்!‘ என்று பூமிநாதன் பணிவாக மறுத்தான்.

‘இல்லப்பா! அதை நான், பொதுச் சேவைக்காகத் தானே கொடுக்கிறேன்? நானும், இந்த ஏரியாவுல இருந்துதான் மும்பை போய், இவ்வளவு தூரம் வளந்திருக்கேன் என்னோட ஊருக்கு நான் இதெல்லாம் செய்ய ரெடின்னாலும், எடுத்துச் செய்யவும்... ஒரு பொறுப்பான ஆள் வேணுமில்லை? இங்கன்னா நீங்க இருக்கீங்க! நீங்க பணத்தை உருப்படியா செலவு செய்வீங்க இல்ல?‘

’’ஏங்க! என்ன இது? நம்ம பூமியை, நீங்க மரியாதையா நீங்க... வாங்கன்னு கூப்பிடறீங்க. அவன் நம்ப மருமகன்ங்க. எங்க அண்ணாச்சி மகன். நீ... வா-ன்னு ஒருமையில கூப்பிடுங்க!’’ அங்கு நடக்கும் பனிப்போர் தெரியாமல், இடைபுகுந்து யதார்த்தமாகக் கூறினார் ராஜலஷ்மி.

‘ஏம்மா! அது சின்ன வயசிலருந்தே பாத்து... பேசிப் பழகியிருந்தா, சரியாயிருக்கும். இப்ப தம்பி பெரிய ஆளாகி, ஊருக்கே தெரிஞ்ச விவசாய விஞ்ஞானி! அவரைப் போய், மரியாதையில்லாம கூப்பிடலாமா?‘

பூமிநாதன் இதற்கும் எந்த உணர்ச்சியை காட்டவில்லை. எந்தப் பதிலையும் சொல்லவில்லை. அதுவரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த தான்யா தான் பதில் சொன்னாள்.

‘அப்பா! நிறையச் செய்யலாம்பா! இந்த ஊர்ல இருக்கிற கவர்ன்மென்ட் ஸ்கூலைக் கட்டி, நாற்பது

வருஷமாச்சாம். எப்ப வேணா இடிஞ்சு விழற மாதிரி இருக்கு. அதைச் சரி செய்யலாம். இங்க, தினமும் ஏழு மணி நேரம் கரண்ட் கிடையாது. படிக்கிற புள்ளைங்கல்லாம் கஷ்டப்படறாங்க. பூமிநாதன் ஸாரும், கூடம் ஒண்ணு கட்டியிருக்காரு. அதைச் சரியா பூசக் கூட இல்ல. அங்க ஸோலார் எனர்ஜில எரியற மாதிரி லைட்ஸ், பேன் போட்டிருக்காரு, அதை இன்னும் நல்லா கட்டி, அதுல பசங்க கத்துக்க கம்ப்யூட்டர்ஸ், இன்டர்நெட் கனெக்ஷனோட வெச்சிக் குடுக்கலாம்.

அவசரத்துக்கு உடம்பு சரியில்லன்னாகூட, இங்க ஹாஸ்பிடல் இல்ல. அஞ்சு கிலோமீட்டர் தள்ளிப் போகணும். எமர்ஜென்ஸிக்கு ட்ரீட் பண்ற மாதிரி, இங்க ஒரு சின்ன டிஸ்பென்ஸரி கட்டலாம்.

சிகப்பியோட பொண்ணு நேச்சர்ஸ் காலுக்காக வயலுக்குப் போனப்ப, ஒரு ரோக் அவ கிட்ட மிஸ் பிகேவ் பண்ணப் பாத்தான். நான் கூட உங்ககிட்டச் சொன்னேனேப்பா... ஒரு டாய்லட் கட்ட என்னொட அக்கவுண்டல இருந்து பணம் தரவான்னு? அது ஒண்ணு போதாதுப்பா.

இங்க இருநூறு பேமிலிக்கு மேல இருக்காங்க, அதனால, இன்னும் பத்து டாய்லெட்டை, பாத்ரூம் வசதியோட சேர்த்துக் கட்டலாம். இன்னும் எவ்வளவோ இருக்குப்பா... நீங்க செய்யறீங்களா? ' என்றவள், உரிமையாக அவர் தோளில் சாய்ந்து அவர் கன்னத்தைப் பிடித்து, முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அவரும் மகளின் தலையை ஆசையாக வருடி,

'கண்டிப்பா செய்யலாம்டா! நீ என்ன இங்க வந்து பார்மிங் மட்டும் அப்ஸர்வ் பண்ணாம, இன்னும் நிறைய விஷயங்களை அப்ஸர்வ் பண்ணியிருக்கே போலிருக்கே!' என்று விசாரித்தார்.

'அதே தான் மாப்புள! தான்யா செஞ்ச உதவியால, இந்த ஊரே சந்தோஷப்பட்டுப் போய், அவளைப் பாராட்டுச்சு. அதோட வெள்ள மனசுக்கும், நல்ல குணத்துக்கும்... அது ராசாத்தியா... ஓஹோன்னு வாழணும்!' என ஆச்சி வாழ்த்தினார். பெற்றோர் இருவருக்கும் பெருமை தாங்கவில்லை. பூரிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

# 17

இரண்டு நாட்கள் கழித்து பலராமின் குடும்பம் கிளம்பியபோது, தான்யாவும் அவர்களுடன் கிளம்பிவிட, ஆச்சிதான் கண்ணீர் வடித்தார்.

'இத்தனை நாளா என் பேத்தி இருந்தப்ப, இந்த வீடே எவ்வளவு கலகலன்னு இருந்துச்சு. இப்ப, திரும்ப வீடே வெறிச்சோடிப் போகும்! இந்த ஆச்சியை மறந்துபுடாதே ராசாத்தி! இனி, எப்பப் பாக்கப் போறோமோ தெரியலியே!' என்று தான்யாவை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார். அவருடைய வெள்ளந்தியான அன்பை அனுபவித்திருந்த தான்யாவிற்கும், அழுகை வந்தது.

அவளுக்கு, அதனால் மட்டுமா அழுகை வந்தது? 'தன்னுடைய உயிராக நினைத்தவனை, (அவன் வெறுத்தாலும்) இதுவரை பார்த்துக் கொண்டிருக்கவாவது முடிந்தது. இப்போது, அதற்கும் வாய்ப்பில்லையே!

அவன் சொன்னதுபோல், இனிமேல் அவர்கள் ஏதாவதொரு திருமணத்தில் சந்தித்துக் கொண்டால்தான் உண்டு. இதற்குமேல், அவள் திருமணம் செய்து கொள்வாளா என்றும் தெரியவில்லை. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

'ஆச்சி! நீங்க மும்பைக்கு வாங்க! வந்து, எங்க கூட இருங்களேன் ஆச்சி' என்று மனதார அழைத்தாள்.

'ஏம்மா! ஒத்தையா நிக்குற என் பேரனை விட்டுட்டு, நா எப்படிமா வர முடியும்? அவனுக்கு ஒரு கல்யாணம் ஆகட்டும். பொறவு பாக்குறேன்!' என்று வெள்ளந்தியாகக் கூறினார்.

சிவப்பி, சிறு பிள்ளைகள் என எல்லோரிடமும் தான்யா நன்றாகப் பழகியதால், அனைவருமே அவளை வழியனுப்ப வந்திருந்தனர். எல்லோரிடமும் விடைபெற்று விட்டு, பூமிநாதனிடம் மட்டும் எதுவும் சொல்லாமல் போவது வினோதமாக இருக்கும் என்பதால், தயங்கித் தயங்கி அவனருகே சென்றாள் தான்யா.

அவன் முகத்தை மெல்ல நிமிர்ந்து பார்த்து, 'நான் கிளம்பறேன் பூமி ஸார். நீங்க செய்த உதவிக்கெல்லாம், ரொம்பத் தாங்க்ஸ்!'' என்று மெல்லிய குரலில்

சொன்னாள். அவன் அதற்கும் பதிலேதும் சொல்லாமல், தலையை மட்டும் ஆட்டினான்.

'அது சரி! அவன் உன்னைப் போகாதே என்றா சொல்லப் போகிறான்? சினிமாவில் வரும் கிளைமாக்ஸ் காட்சியைப் போல், கடைசி நிமிஷத்தில் உன்னைக் கட்டிப் பிடித்து, 'ஐ லவ் யூ!' என்றா சொல்லப் போறான்? நீ ஊருக்குக் கிளம்பற வழியைப் பாரு தான்யா!' என்று மனக் குரல் அவளை உந்தியது.

அவனை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்து விட்டு, மற்றவருடன் போய் அவர்களுக்காகக் காத்திருந்த பென்ஸ் காரை நோக்கி நடந்தாள். கடைசி ஆளாக அவள் காரில் ஏறி அமர்ந்ததும், கார் கிளம்பியது.

அனைவருக்கும் கையாட்டி விடைபெறத் திரும்பியபோது, அங்கு பூமிநாதன் இல்லாதது அவளது கண்ணில் பட்டது. 'விட்டது சனி' என்று உள்ளே போய் விட்டான் போலிருக்கிறது. இவ்வளவு தூரம் வெறுத்துப் போகும் அளவிற்கா, நான் நடந்து கொண்டேன்?'

இந்த இரண்டு நாட்களாக பூமிநாதன் அவளை நடத்திய முறை, அவளது தன்மானத்தைப் புண்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவளுடைய தன்னம்பிக்கையையும் ரொம்பவே குறைத்திருந்தது.

பின்சீட்டில் சாய்ந்து கொண்டவள், கார் ஊரை விட்டு வெளியேறி விட்டதைக் கண்டாள். இந்த ஊருக்கு வரும்போது இருந்த உற்சாகத்தில், இப்போது ஒரு சதவிகிதம் கூட இல்லை. சொல்ல முடியாத

அளவுக்கு சோர்வு தாக்க, கண்களை மூடிக்கொண்டாள். மற்றவர்களெல்லாம் அவள் இவ்வளவு நாளும் பழகியவர்களைப் பிரிந்த வருத்தத்தில் இருக்கிறாள் என்று நினைக்க, பலராமின் முகத்திலோ ஆழ்ந்த யோசனை ஓடியது.

# 18

**ஊ**ருக்கு வந்து ஒரு வாரமாகி விட்டிருந்தது. தான்யா எல்லோரிடமும் வழக்கம்போல் இருந்தாள் என்றாலும், அதில் உயிர்ப்பில்லை. மேலோட்டமாக பார்த்தபோது வேறுபாடு ஏதும் தெரியாவிட்டாலும், அவள் முகத்தில் இயல்பாக இருந்த புன்னகையின் அளவு குறைந்திருந்தது, அவளுடைய அம்மாவுக்கே தெரியவில்லை.

அங்கு அதிகமாக வேலை செய்த்தாலும், ஆச்சியைப் பிரிந்து வந்ததாலும்தான், அவள் வருத்தத்தில் இருக்கிறாள் என்று சமாதானம் செய்து கொண்டார். ஆனாலும், அவளது நடவடிக்கைகள் பலராமை மட்டும் ஏமாற்ற முடியவில்லை. ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு மீண்டும் அதே இடத்திற்கு சென்றார்.

‘நீங்க மறுபடியும் எனக்கு ஒரு உதவி செய்யணும்’ என்று ஆரம்பித்தார். தான்யா ஓரளவுக்கு பழைய நிலைக்கு வர, இரண்டு மாதங்கள் ஆகியிருந்தன.

இப்போது ஓரளவு இயல்பாகச் சிரித்தாள். தீடிரென்று அமைதியாகும் வழக்கம், ரொம்பவே குறைந்திருந்தது. பலராம் ரொம்பவே யோசித்து அதற்கு ஒரு வழி கண்டு பிடித்திருந்தார்.

'நீ ஃபார்ம் வாங்கி செட் பண்ண, கொஞ்ச நாள் ஆகும். நல்ல இடமா பார்க்கணும். அதுவரைக்கும் வேலை பாக்கறியாம்மா?'' என்று கேட்டார் ஒரு நாள்.

அருகிலிருந்த ராஜலஷ்மி, 'ஏங்க! இந்த ஐடியாவே எனக்குப் படிக்கல. முன்ன இப்படித் தான், தான்யா சின்ன மாங்குடி போகும்போதும், என் வாயை அடைச்சீங்க. அது ஏதோ நல்ல வழியில முடிஞ்சுது. என் சின்னம்மாவையும், மருமகனையும் கண்டுபிடிச்சோம்.

இப்ப எதுக்குங்க இந்த வேலையெல்லாம்? நமக்கு இருக்கிற வசதிக்கு, இதெல்லாம் தேவையா? நல்ல பையனாப் பாத்து, கல்யாணம் செஞ்சிடலாங்க. அவளுக்கும் இருபத்தி மூன்று வயசாகுது. இப்பப் பாக்க ஆரம்பிச்சாலே, ஆறு மாசம் ஆகும். என்ன சொல்றீங்க?' என்று இடைமறித்தார்.

அவர் பேசப் பேச தான்யாவின் முகத்தில் திகிலடைவதைக் கண்ட பலராம், 'ஏய் ராஜிம்மா! என்ன பேசற? அவ இதுவரைக்கும் படிப்பு படிப்புன்னே இருந்துட்டா... வெளி உலகம் என்னன்னே தெரியாத பொண்ணு அவ. கொஞ்ச நாள் வேலை பாத்தா, அவளுக்கும் ஒரு நல்ல எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும். கல்யாணத்துக்கு, இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்' என்று முடித்தார்.

எப்போதும் போல், தன் மனதைப் புரிந்து கொண்டு பதில் சொன்ன அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு 'தாங்க்ஸ்-பா! எனக்கு இப்பக் கல்யாணம்லாம் வேணாம்பா! நீங்க சொன்ன மாதிரி, நான் கொஞ்ச நாள் வேல பாக்கறேன் பா!' என்று கெஞ்சலாகச் சொன்னாள்.

'என்னவோ பண்ணுங்க! வழக்கம் போல, அப்பாவும் பொண்ணும் கூட்டணி அமைச்சிட்டீங்க. இனி நான் பேசறது எதுவுமே... காதுல விழாது!'' என்றபடியே ராஜலஷ்மி நகர்ந்து கொண்டார்.

பேராசிரியர் மூர்த்தி மூலமாக, ஆர்கனிக் பார்ம் ஒன்றில் கன்சல்டன்ட் ஆக அவளை வேலைக்குச் சேர்த்திருந்தார். புது விஷயங்களைக் கற்றுக் கொள்வதிலும், கற்றதைச் செயல்படுத்துவதிலும் உற்சாகம் கொண்டாள் அவள்.

சனி, ஞாயிறுகளில் கல்லூரித் தோழிகளுடன் ஊரைச் சுற்றினாள். நான்கு மாதம் கழித்து வந்ததால், அவர்களுக்கிடையே பேசிக் கொள்ள, ஏகப்பட்ட விஷயங்கள் இருந்தன. ஆனாலும், அவர்கள் பூமிநாதனைப் பற்றிக் கேட்கும்போது மட்டும், மேலோட்டமாக ஏதாவது பேசி மழுப்பி விடுவாள்.

பலராம் சினிமாத் துறையில் இருந்தாலும், அந்தத் துறைக்கான சில பலவீனங்கள் ஒன்று கூட இல்லாதவர். இன்னும் தன் பழைய வாழ்வை மறக்காதவர். அவருக்கு, குடும்பம் தான் எல்லாம். ராஜலஷ்மியையும் சேர்த்து, மூவரையுமே பார்த்துக் கொள்வது அவர்தான்.

'அமைதியாகப் போய்க் கொண்டிருந்த குடும்பத்தில், தான் அவசரப்பட்டுத் தவறு செய்து விட்டோமா?' என்ற கவலை அவருக்குக் கொஞ்ச நாளாகவே இருந்தது. எப்போதும் சிரித்த முகமாக, எந்தக் கவலையும் இல்லாமல் செடி கொடிகளோடு சந்தோஷமாக இருந்த தான்யாவை, பயிற்சி என்ற பெயரில் சின்ன மாங்குடிக்கு அனுப்பியது தவறோ? நாம் ஒன்று நினைக்க, அது வேறொன்றாக ஆகிவிட்டதே!

என்ன பிரச்சனை என்று வாயால் சொல்லாவிட்டாலும், அவளுக்கும் பூமிநாதனுக்கும் இடையே விரிசல் என்பது, அவர்கள் இருவரும் பழகிய முறையிலேயே தெரிந்தது. அது சாதாரணமான பிரச்சனை என்றால், தான்யா அதையெண்ணி இவ்வளவு நாட்களாக வாட்டமாக இருக்க வேண்டியதில்லையே!'

அவருடைய அனுபவத்தில் மகளுக்கும் அந்த பூமிநாதனுக்கும் இடையே ஏதோ காதல் பிரச்சனை என்று தெரிகிறது. ஒருவேளை அவன் ஆசைப்பட்டுக் கேட்டு, இவள் மனதில் எதுவும் இல்லையென்றால்.... கல்யாணத்தைப் பற்றிய பேச்சை ராஜி எடுத்தபோது, ஏன் இவள் முகத்தில் இவ்வளவு பயம் தெரிய வேண்டும்?

அப்படி இல்லாமல், இவள் கேட்டு அவன் மறுத்திருந்தால்? ஆனால், என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள ,அவனுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே! அழகு, அறிவு குணம், வசதி

என எதிலும் குறையில்லையே! பிறகு ஏன், அவன் மறுக்க வேண்டும்? அதுவும் உறவுமுறையைத் தெரிந்தபோதும்!'

இப்படி பலவிதமாக யோசித்துக் கொண்டிருந்த போது, அவருக்கு நம்பகமான இடத்திலிருந்து ஒரு தகவல் வந்தது. உடனே, அவரது முகத்திலிருந்த கவலை மறைந்து, அங்கு புன்னகையொன்று பூத்தது.

'சரி! வரும்போது வரட்டும். விட்டுப் பிடிப்போம்!' என்று நினைத்தார்.

# 19

**கா**லை ஏழு மணியிருக்கும். வாசலிலிருந்த செக்யூரிட்டி, இன்டர்காமில் 'சாப்! உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்காரு! உங்க ரீலடிவ்னும் சொல்றாரு. பேரு பூமிநாதன்னு சொல்றாரு. உள்ள விடலாமா சாப்?'' என்று கேட்டார்.

புல்வெளியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த பலராம், அவர் பேசியதைக் கேட்டதும் வாய் நிறைய புன்னகையோடு, 'உள்ள விடுங்க. அவர் நமக்கு வேண்டியவர் தான். என்னோட மருமகன் தான். நீங்களே கூட்டிட்டு வாங்க!'' என்று சொல்லி போனை வைத்தார்.

'வாய்யா வா! என் பெண்ணை இவ்வளவு நாள் அழ வெச்ச இல்ல... இன்னிக்கு உன்னை, அதுக்குப்

பதில் சொல்ல வைப்பேன்!' என்று மனதிற்குள் பூமிநாதனைச் செல்லமாகக் கடிந்து கொண்டார். பூமிநாதன் ஏன் இன்று வருகிறான் என்பது, அவருக்கு முன் கூட்டியே தெரியுமே!

செக்யூரிட்டியே, பூமிநாதனை மரியாதையுடன் உள்ளே அழைத்து வந்தான். 'அவன் இந்தப் பிரம்மாண்டமான பங்களாவையும், தன் வசதியையும் பார்த்து அசந்து போவான்... அதன் பின்பு, என்ன மாதிரியான பின்னணியில் இருந்து வந்த பெண்ணைத் தான் நிராகரித்திருக்கிறோம் என்பதை நினைத்து, அவன் வருந்த வேண்டும்' என்று பலராம் நினைத்தார். அதற்கு மாறாக, ஏமாற்றமே அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.

அவனொன்றும், சுற்றுப்புறத்தை பெரிய ஆர்வத்துடன் பார்க்கவில்லை. வெகு சாதாரணமாக நடந்து வந்தவனின் கையில், ஒரு சிறிய பை மட்டுமே இருந்தது. அவரருகில் வந்ததும் மெலிதாகப் புன்னகைத்துவிட்டு, 'குட்மார்னிங் அங்கிள்!'' என்று சொன்னான்.

'குட்மார்னிங்! உக்காருப்பா!' என்று அவனிடம் இருக்கையைக் காட்டியவர், செக்யூரிட்டியிடம் தலையசைத்தார். அவ்ர் போனதும், 'சொல்லுங்க தம்பி! எப்படியிருக்கீங்க? ஆச்சி நல்லாயிருக்காங்களா?' என்று விசாரித்தார்.

''ஆச்சி நல்லாயிருக்காங்க. உங்களையெல்லாம், ரொம்ப விசாரிச்சதா... சொல்லச் சொன்னாங்க.''

'என்ன தம்பி! இங்க ஏதாவது கான்ஃபரன்ஸ்,

இல்ல மீட்டிங்கா...? இவ்வளவு நாள் கழிச்சு, திடீர்னு இந்தப் பக்கம்?'

அவனது வேலையைச் சுலபமாகச் செய்யவிடக் கூடாது என்பதில், பலராம் உறுதியாக இருந்தார். பூமிநாதனும் அதற்குச் சற்றும் சளைத்தவன் அல்லவே!

'உங்களையெல்லாம் பார்க்கத் தான் வந்தேன் அங்கிள்! அத்தை எங்கே? தான்யா, அன்னா எல்லோரும் எப்படி இருக்காங்க?'

'ஆமாண்டா! உங்க வீட்டுக்கு வந்தவளை, நீ துரத்தி விடுவே! இப்ப இங்க வந்து, அவ எப்படியிருக்கான்னு கேப்ப!' என்று நினைத்துக் கொண்டார்.

'ராஜி உள்ள தான் இருக்கா! அன்னா ஜிம் போயிருக்கா!' என்றவர், அவன் யாரைப் பற்றி அதிகமாகக் கேட்க நினைத்தானோ, அவளது பெயரை மட்டும் சொல்லவேயில்லை.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே காஃபி ட்ரேயுடன் வந்த ராஜலஷ்மிக்கு, பூமிநாதனைப் பார்த்ததும் முகமெல்லாம் மலர்ந்தது. எழுந்து போய் அவரிடமிருந்து காஃபி ட்ரேயை வாங்கி, டேபிளின் மேல் வைத்தான்.

'ஆஹா! தம்பி எங்க கவர் பண்ண்ணுமோ, கரெக்டா அங்க செஞ்சுடறான்! பொழச்சிக்குவான்!' என்று பலராமின் மனம் நினைத்தது.

'வாப்பா! எப்படியிருக்க? சின்னம்மா எப்படி இருக்காங்க? அவங்களை ஏன் கூட்டிட்டு வரல?'

'நான் நல்லாயிருக்கேன் அத்தை! நான் சென்னைக்கு ஒரு வேலையா வந்து, இரண்டு நாள் இருந்துட்டு, அங்கேருந்து நேரா இங்க வரேன்! அதனாலதான், ஆச்சியைக் கூட்டிட்டு வரலை. அடுத்த தடவை கண்டிப்பா கூட்டிட்டு வரேன் அத்தை! எங்க யாரையும் காணோம்? அன்னா, தான்யா எல்லாரும் எங்க?''

'அன்னா, ஜிம் போயிருக்கா. தான்யா, வீட்டுல தான் இருக்கா' என்றாள் ராஜி.

'நீ சென்னைக்கு எதுக்குப் போனே... அங்கயிருந்து, அர்ஜெண்டா ஏன் இங்க வந்திருக்கன்னு, எனக்குத் தெரியாதா? கொஞ்ச நேரம் கஷ்டப்படு தம்பி! என்று நினைத்தார். கொஞ்ச நேரம், பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் கழித்து, பூமிநாதன் பலராமை நிமிர்ந்து நேராகப் பார்த்து, 'அங்கிள்! நான் உங்க்க்கிட்ட, முக்கியமான ஒரு விஷயத்தை... தனியாகப் பேசணும்!' என்றான்.

'வாரே வா! இதை... இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்! உனக்கும் எவ்வளவு நேரம் பொறுமையிருக்குன்னு பாத்தேன். இப்ப நீயே வழிக்கு வந்தியா?'

'சொல்லுப்பா! என்ன விசயம்? உங்க அத்தைதானே இருக்கா இங்க? வேற யாரும் இல்லையே. சும்மா சொல்லு!''

'அவ்வளவு ஈஸியா உன்னை விடுவேனா?'

என்றது அவரது மனம்.

'இல்ல மாமா! இது அஃபிஷியல் விஷயம். நாமதான் டிஸ்கஸ் பண்ண முடியும். அத்தைக்குப் புரியாது.' நானும் சற்றும் சளைத்தவனில்லை என்று பூமிநாதன் நிரூபித்தான்.

'அப்பச் சரி! எனக்கெங்கே புரியப் போகுது. நீங்க பேசுங்க. நான் போய், டிபன் ரெடியாயிடுச்சான்னு பாக்கறேன். பூமி! நீ மாமா கிட்டப் பேசிட்டு, டிபன் சாப்பிட வா! ரொம்ப நேரம் ஆக்கிடாதே!' என்று கூறி அவனுக்கு வழி வகுத்துக் கொடுத்துவிட்டு, உள்ளே போனார் ராஜலஷ்மி.

'வாயேன்-பா! என் ஆபிஸ் ரூம்ல உட்கார்ந்து பேசுவோம்'' என்று பலராம் அழைத்தார்.

'வேண்டாம் அங்கிள்! இங்கேயே பேச, வசதியா தானே இருக்கு!'

'ஏதோ, இந்தப் பேச்சு வார்த்தை முடியாமல், வீட்டிற்குள் வரமாட்டேன்' என்று சபதம் செய்தவன் போல, பூமிநாதன் மறுத்தான். 'ரோஷக்காரன் தான்' என்று மனசுக்குள் பலராம் பாராட்டிக் கொண்டார்.

இருவரும் சுமார் இருபது நிமிடங்கள் போல பேசிக்கொண்டனர். முதலில் பூமிநாதன் எதையோ விளக்க, பலராம் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். பிறகு அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பூமிநாதன் பொறுமையாகப் பதில் சொல்ல, அதன்பிறகே பூமிநாதன் அனுமதி கேட்டான்.

எழுந்து அவனுக்குக் கைகொடுத்து, ‘ஆல் த பெஸ்ட்!‘ ’ என்று கூறிவிட்டு, மாடியிலிருந்த இரண்டாவது அறைக்கு வழிகாட்டி அனுப்பிவிட்டு, மனைவியைத் தேடிச் சென்றார் பலராம்.

உள்ளே சென்றவர், ‘ராஜி!’’ என்றழைக்க, ‘‘என்னங்க! பூமித்தம்பி எங்க? டிபன் வைக்கச் சொல்வா?‘ என்று ராஜலக்ஷ்மி கேட்டார்.

‘நீ என் கூட ஆபிஸ் ரூமுக்கு வா! உன்கிட்டக் கொஞ்சம் பேசணும். டிபனை அப்புறம் சாப்பிடலாம்!‘ என்று கூறி அவரை அழைத்துச் சென்றவர், ஆபிஸ் அறையிலிருந்த சோபாவில் அமர்ந்துகொண்டு, மனைவியை அருகில் அமர்த்திக்கொண்டார்.

‘நீ ரொம்ப நாளா சொல்லிட்டே இருக்கியே! அது கூடிய சீக்கிரம் நடக்கப் போகுது.‘

‘என்னதுங்க?‘

‘‘எல்லாம் உன் பொண்ணு கல்யாணம் தான். நான் உங்கிட்ட மயங்கினா மாதிரி, உன் அண்ணன் பையன்... நம்ப பொண்ண விரும்பறானாம். அதான், பொண்ணு கேட்டு வந்திருக்கான். எனக்குப் பிடிச்சிருந்துச்சு... ஓகேன்னு சொல்லிட்டேன். நான் ஓகேன்னு சொல்லிட்டா... நீயும் சரின்னு சொல்லிடுவேன்னுதான், உன்னைக் கேக்கல. நீ என்ன சொல்ற? உனக்கும் ஓகே தானே?‘ என்று மனைவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டார் பலராம்.

‘என்னங்க நீங்க? இதைவிட, வேற என்ன சந்தோஷம் வேணும்? எனக்கு ரொம்ப சந்தோஷம்ங்க.

ஆமா... பூமித்தம்பி எங்க?'

''அவன், தான்யாவை பார்த்து பேச மாடிக்குப் போயிருக்கான். ஸாரி...! போயிருக்கார். மாப்பிள்ளை இல்லியா? இனிமே, நாம மரியாதையாதான் பேசணும். அவங்க பேசிட்டு வரட்டும்... அப்புறம் நாம எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவோம். என்ன?'

'சரிங்க! நான் போய், ஒரு ஸ்வீட் செய்யச் சொல்றேன்'' என்றவர், சந்தோஷமாக எழுந்து சென்றார்.

பலராம் மனைவியிடம் பல விஷயங்களைச் சொல்லவில்லை. தான்யா ஏற்கனவே பூமிநாதனிடம் தன் அன்பைச் சொன்னது; அவன், அதை ஏற்காதது; மகளது மனம் பூமிநாதன் மேலேயே லயித்திருந்ததால், தான் ஒரு நண்பரின் உதவியை நாடியது; அவர் உதவியால் பூமிநாதன் என்ன செய்கிறான்... உண்மையிலேயே, அவன் தான்யாவை விரும்பவில்லையா என்பதை அறிய முயன்றது... என்பது போல் இன்னும் எத்தனையோ?

ராஜலக்ஷ்மி ஒரு குழந்தை மாதிரி. பலராம் சொல்லும் அனைத்துமே, அவருக்கு வேத வாக்கு. அதனால், தேவையில்லாமல் எல்லா விஷயங்களையும் சொல்லி, மனைவியின் குழந்தை மனத்தைக் குழப்ப விரும்பவில்லை. அவளைக் காலமெல்லாம் கண் போல பார்த்துக் கொள்ள நாம் இருக்கும்போது, கவலைகளை ஏன் அவளிடம் சொல்ல வேண்டுமென்று, தேவையானதை மட்டும் சொல்லிவிட்டு, மற்றதை மறைத்து விட்டார் பலராம்.

# 20

பூமிநாதன் படியேறி இரண்டாம் அறை வாசற்கதவைத் தட்டியதும், 'கம் இன்!'' என்றழைத்த தான்யாவின் குரல் கேட்டு, மெள்ள உள்ளே நுழைந்தான்.

அவளோ கம்ப்யூட்டரில் மும்முரமாக ஏதோவொரு வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அறையை சுத்தம் செய்யும் வேலைக்காரப் பெண் தான் வந்திருக்கிறாள் என்று நினைத்தவள், கம்ப்யூட்டர் திரையிலிருந்து கண்ணை விலக்காமலே, 'பாஞ்ச் மினிட்' (அஞ்சு நிமிஷம்) என்று சொல்லிவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தாள்.

பூமிநாதன் மெள்ள உள்ளே வந்து அறையைப் பார்வையிட்டான். ரூம் நடுவே பெரிய கிங்சைஸ் பெட் இருக்க, இது வரை சினிமாவில் மட்டுமே பார்த்திருந்ததைப் போல், அதைச் சுற்றி திரைச்சீலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஸ்பிலிட் ஏசி, பெரிய சைஸ் டிவி, ஹோம் தியேட்டர், ஒரு ப்ரிட்ஜ், பெரிய வார்ட் ரோப், புத்தக அலமாரிகள் என்ற அனைத்தையும் வைக்குமளவிற்கு, அந்த அறை மிகவும் விசாலமாக இருந்தது.

இதையெல்லாம் பார்த்தவுடன், பூமிநாதனின் மனதில் சிந்தனையும், தயக்கமும் பிறந்தது. பிறகு

இதெல்லாம் எதிர்பார்த்தது தானே என்ற எண்ணத்தில், தயக்கத்தை உதறிவிட்டு, தான்யாவைப் பார்த்தான். வீட்டில் இருந்ததால், ஆகாய நீல வண்ணத்தில் ஸ்லீவ்லெஸ் நைட்டியொன்றை அணிந்திருந்தாள். அசையாமல் அவள் பின்னால் தள்ளி நின்று கொண்டு, அவளையே கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

எதையோ வித்தியாசமாக உணர்ந்ததால், வேலையை நிறுத்திவிட்டு, பின்னால் திரும்பிய தான்யா, அங்கு பூமிநாதன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் கருநீலநிற ஜீன்ஸும், க்ரீம்கலர் கார்கோ ஷர்ட்டும் அணிந்திருப்பதைப் பார்த்ததும், நமக்குத் தான் பைத்தியம் பிடித்து விட்டதுபோலும் என்றே முடிவு செய்து கொண்டாள்.

அவள் எப்போதுமே பூமிநாதனை வேட்டி சட்டையில் தான் பார்த்திருந்தாள். 'தனது அறைக்குள் அவன் எப்படி வந்திருக்க முடியும்?' அதுவும் தனியாக.

'இது நிச்சயம் பிரமைதான். அவன் நிஜமாகவே வந்திருந்தால், யாராவது சொல்லி இருப்பார்களே! நிச்சயம் அவனைத் தனியாக தன்னுடைய அறைக்கு அனுப்பமாட்டார்கள். அந்த உருவத்தையே உற்றுப் பார்த்தால், நிச்சயம் பிரமை கலைந்து போகும்!' என்று நினைத்தாள்.

'என்ன தான்யா! நான் உண்மையிலேயே உன்னைப் பார்க்க வந்திருக்கேனோன்னு, உனக்குச் சந்தேகமா?'

பூமிநாதன் பேசியதும், தான்யாவிற்கு ஆச்சரியம் பொங்கியது. உடனே எழுந்தவள் திரும்பி, 'நீங்க நிஜமாதான் வந்திருக்கீங்க! திடீர்னு உங்களை என்னோட ரூம்ல பார்த்ததும், கொஞ்சம் ஷா... ம்... சர்ப்ரைஸ்! உக்காருங்க ஸார். ஆச்சி எப்படியிருக்காங்க? என்ன சாப்பிடறீங்க? அம்மா அப்பாவைப் பார்த்தீங்களா?' -படபடத்தாள் தான்யா.

நிதானமாக அவளருகே சென்று நின்றவன், தன் இரு கைகளையும் ஜீன்ஸ் பாக்கெட்டில் விட்டபடி, ''நான் எதுக்கு வந்தேன்னு கேக்க மாட்டியா தான்யா?' என்று அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடியே கேட்டான்.

அவன் அருகே வந்ததால், அவளுடைய படபடப்பு இன்னும் அதிகமானது. அப்போதுதான், குனிந்து தான் அணிந்திருந்த உடையைப் பார்த்தவள், 'நான் போய் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வரேன். நீங்க அம்மா அப்பாகிட்டப் பேசிட்டு இருங்க!' என்று அங்கிருந்து நழுவப் பார்த்தாள்.

அப்போது, தான்யாவின் அடிமனதிலிருந்த அவனைப் பற்றிய உணர்வுகள், மீண்டும் மேலெழும்பத் துவங்கின.

பூமிநாதன், நகர முயன்றவளின் தோள் மீது கை வைத்துத் தடுத்தான். 'நான் ஏன் வந்திருக்கேன்னு கேக்கவே மாட்டியா தான்யா? என்றபடியே அவளது விழிகளை ஊடுருவிப் பார்த்தான்.

வெறும் தோளில் அவன் கை வைத்ததும் அவளுக்குள் மின்னல் பாய்ந்தது. அவனுடைய ஆழ்ந்த

குரல் அவளது கவனத்தை முற்றிலும் ஈர்க்க, 'தான் எங்கே, எதற்காக போக நினைத்தோம்?' என்பதையே முற்றிலும் மறந்து நின்றாள் அவள்.

''எதுக்காக வந்திருக்கீங்க?' என்று மெல்லிய குரலில் கேட்டாள். 'உன்கிட்ட... நான் உன்னை ரொம்ப விரும்பறேன். ஐ லவ் யூ, வித் ஆல் மை ஹார்ட்-ன்னு சொல்லத்தான்!' என்று ஆழ்ந்த குரலில் அவளது கண்ணைப் பார்த்துக் கூறினான் அந்தக் கள்ளன்.

அவன் சொன்னதை கிரகித்துக் கொள்ள பத்து வினாடிகள் ஆனது தான்யாவிற்கு. புரிந்தவுடன் தன் தோள் மேல் வைத்திருந்த அவன் கையைப் பிடித்துத் தள்ளியவளின் கோபம், அதிலேயே தெரிந்தது.

'என்னை என்னன்னு நினைச்சிங்க? நீங்க 'சூ'ன்னா ஓடிப்போயிட்டு, சொடக்குப் போட்டுக் கூப்பிட்டா ஓடி வர்ற, நாய்க்குட்டினா? நான் அன்னிக்கு என்னோட காதலைச் சொன்னப்ப, இப்ப எனக்கு அந்த மாதிரி அபிப்ராயம் எதுவுமில்லன்னு சொன்னீங்க! இப்ப என்ன... அந்த எண்ணம் மாறிடுச்சா?

போனா போகிறா... நம்ம அத்தை பொண்ணு... அவளை ஏத்துக்குவோம்னு... பெரிய மனசு பண்ணி, முடிவெடுத்துட்டீங்களா பூமி ஸார்?'' அதைக் கேட்கும் போதே, அவளது மனதில் இவ்வளவு நாட்களாக இருந்த வலி முழுவதும், அந்த வார்த்தைகளில் தெறித்து வந்தன.

தன் வார்த்தைகள், அவள் மனதில் எவ்வளவு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியிருக்கிறது என்று

பூமிநாதன் உணர்ந்தான். தன் வார்த்தைகள் அவளைக் காயப்படுத்துமென்று அவனுக்குத் தெரியும். ஆனாலும், உயிரையே உருக்கும் அளவுக்கு அது அவளை வாட்டிவிடுமென்று நினைத்ததில்லை.

அந்த வேதனை திடீரென்று அவனையும் தாக்கியதில், உடனே அவளை இழுத்துத் தன்னோடு இறுக அணைத்துக் கொள்ள, திமிறினாள் அவள்.

'கொஞ்சம் நேரம் சும்மாயிரு தான்யா! பார் மை ஸேக், நோ நோ... பார் காட் ஸேக்...!' என்றான். அவள் திமிறினாலும், அவன் இரும்புப் பிடியிலிருந்து விடுபட முடியாது என்பதோடு, அவன் குரலில் இருந்த கதறலும் சேர்ந்ததில், அவள் அமைதியானாள்.

''நான் உன்ன, அப்பவே லவ் பண்ணினேன் தான்யா!' என்று உணர்ச்சி மிகுந்த குரலில் சொன்னான் பூமிநாதன்.

'அப்ப ஏன்...' -தலையை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள் தான்யா.

'ஏன் அப்பவே சொல்லலைன்னு கேக்கறியா? அதுக்கு இரண்டு காரணங்கள் இருக்கு. ஒண்ணு, உங்கப்பா என் மேல வெச்ச நம்பிக்கை. இரண்டாவது, நீ என்மேல வெச்ச நம்பிக்கை.''

புரியாமல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தான்யாவின் கூந்தலை அன்பாகக் கோதிவிட்டு, ''உங்கப்பா என்னை நம்பி உன்னைச் சின்ன மாங்குடிக்கு அனுப்பினாரு. ஃபார்மிங்கைப் பத்தி

கத்துக்க வந்த சின்னப் பொண்ணை மயக்கி, இவன் கவர் பண்ணிட்டானேன்னு என்னைத் தப்பா நினைச்சுட்டார்ன்னா? அதனால, முதல்ல அவர்கிட்ட முறையா பேசிட்டுத் தான், உங்கிட்ட என் காதலைச் சொல்லணும்னு நெனச்சேன்.'

'எந்தக் காலத்துல இருக்கீங்க நீங்க? உங்களுக்குள்ள என்ன 'அந்நியன் அம்பி'ன்னு நெனப்பா? இப்பல்லாம் லவ் மட்டுமில்லாமல், லிவ்-இன் ரிலேஷன்ஷிப் வரைக்கும் வந்துடுச்சு. நீங்க என்னமோ, இப்பக் கூட அப்பாகிட்டச் சொல்லிட்டுத் தான் லவ் பண்ணனும்னு சொல்றீங்க! எங்கப்பா, அந்தக் காலத்துலயே... அம்மாவை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டவரு தெரியுமா?''

'அதனால தான், நான் இந்த முடிவை எடுத்தேன். நீ உங்கப்பா, அம்மாவோட லவ் ஸ்டோரியோட 'ஸக்சல்புல்' சைடைத் தான் பார்த்தே. ஆனா, அதோட பாதிப்பை நான் அனுபவிச்சிருக்கேன். என்னோட... அதாவது நம்மளோட தாத்தா பாட்டி, அப்புறம் இன்னொரு தாத்தான்னு... எல்லாரையும் அடிச்சிட்டுப் போயிடுச்சே.

உங்க அப்பா அம்மாவோட லவ், ஒரு குடும்பத்தையே காலி பண்ணிடுச்சே! அது மட்டுமில்ல தான்யா! நீயே இந்த மாடர்ன் மும்பையில பிறந்து வளர்ந்தாலும், ஒரு லிமிட்டுக்கு மேல நீயும், ஐ மீன்... வரம்பு மீறி நீ சொல்ற லிவ்-இன் கல்ச்சருக்கெல்லாம் போக மாட்டே.''

''நான் ப்ரூவ் பண்ணட்டுமா?'' என்று குறும்பாகச் சொன்னவன், குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். பின்பு இரண்டு கன்னங்களிலும் உதடுகளை ஒற்றிவிட்டு அவள் உதட்டுக்கு வந்தபோது, இருவருக்குமே இது பரிசோதனை என்பது மறந்து போனது.

சில நிமிடங்களுக்குப் பிறகு, அவன் முகம் அவள் கழுத்தில் புதைந்தபோது, தான்யா இந்த உலகத்திலேயே இல்லை. இந்தப் புது அனுபவத்தால் அவள் உடலில் ஜிவ்வென்று ரத்தம் பாய, முகம் சூடாகிச் சிவந்தது. அவனுடைய கழுத்தைச் சுற்றியிருந்த கைகள் அவன் பின் தலைமுடியில் பதிந்து, அவன் தலையை இன்னும் அருகில் இழுத்தது.

அவன் கைகள் உயர்ந்து அவளது வலது தோளிலிருந்த நைட்டியின் பட்டையை தோளிலிருந்து அகற்ற முயன்றபோது, அவள் விழித்துக் கொண்டாள். அவளது கைகள் கூச்சத்துடன் அவன் தலையிலிருந்து விலகி அவள் உடையை அகற்ற முயன்ற அவனது கையை அழுத்தமாகப் பற்றியது.

'பாத்தியா தான்யா! நான் சொன்னது நிஜம் தானே?' என்றபோது, அவனும் உணர்ச்சி வசப்பட்டிருந்ததை, அவனுடைய கம்மிய குரல் காட்டிக் கொடுத்தது.

தான்யாவிற்கு காதலை ஏற்காததால் வந்த வருத்தம் ஒரு புறம் என்றால், தானே வலிய அவனை அணைத்து அவன் கன்னத்தில் முத்தம் கொடுத்ததும்,

அவன் மனதில் தன்னைப் பற்றிய மட்டமான உணர்வை ஏற்படுத்தி விட்டதோ என்ற தவிப்பும் இருந்ததை, அவன் புரிந்து கொண்டான். மனதில் இருந்த தவிப்பினாலேயே, அவனை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவள் கூச்சப்பட்டதை அவன் பார்த்தானே!

‘ம்... முதலில், நம் இருவருக்கும் இடையே இருக்கும் தவறான கருத்துக்களை நீக்க வேண்டும்‘ என்று முடிவு செய்தான்.

‘நீ உங்கப்பா, அம்மா, ஆச்சி இப்படி எல்லார் கிட்டயும் கழுத்தைக் கட்டிக்கறது, கையைப் பிடிக்கிறது, பிடிச்சதைச் செஞ்சா கன்னத்துல கிஸ் பண்றத, இயல்பா பழகிட்டே. அதே உரிமை உணர்வோட, அன்னிக்கு நீ என் கன்னத்துல கிஸ் பண்ணும்போது... நான் ஏன் எழுந்து போனேன்...? இதுக்கு மேல இங்க இருந்தா, என்னோட கண்ட்ரோல் போயிடும்ன்ற பயம் தான்.

நீ ’இன்னசன்டா’ உன் அன்பை வெளிப்படுத்தினே. நான் இந்த குண்டுக் கண்ணுல, இந்த வழுவழுப்பான கன்னத்துல, இந்தச் செர்ரி உதட்டுல... ஏற்கனவே மயங்கியிருந்தேன். அதனால, இதுக்கு மேல இருந்தா, தப்பாயிடும்னு தான், அங்க இருக்காம எழுந்து போயிட்டேன்.‘

‘நான் அன்னிக்கு எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா? நாமளே வந்து சொன்னதுனால... நாம ரொம்ப சீப்பா ஆயிட்டோமான்னு, எனக்குள்ள ரொம்ப வருத்தம். அதுக்கு முன்னாலயே கூட, நீங்க ஒண்ணும் ரொம்ப ஃப்ரெண்ட்லியா இருந்ததில்லையே! இதுல,

நானே வலிய வந்து என் லவ்வைச் சொன்னது தப்போன்னு, ரொம்பப் பீல் பண்ணேன்.''

'தான்யா! முதல்ல, நான் உன்மேல எரிச்சலா இருந்தது நிஜம் தான். என் வேலையை டிஸ்டர்ப் பண்ண ஒருத்தி வந்துட்டாளேன்னு, உன் மேல ரொம்பக் கோபமாயிருந்தேன். ஆனா, அன்னிக்கு முள்ளு தச்சவுடனே நீ என் தோளைப்புடிச்சே. உடனே நான் வள்ளுன்னு விழுந்தவுடனே, டக்குனு உன் கண்ணுல தண்ணி வந்தது பாரு... அதுலயே, நான் விழுந்துட்டேன். அதுக்குப் பிறகும் நான் விறைப்பா இருந்தது, எனக்கு நானே போட்டுக்கிட்ட பூட்டு தான் தான்யா.'

'இந்தக் கொஞ்ச நாளா நான் பட்டபாடு... யார் கிட்டயும் எதையும் சொல்லவும் முடியல. எனக்கு என்ன பிரச்சனைனாலும், அப்பாகிட்டத் தான் சொல்வேன். ஆனா... இதை அப்பாகிட்டக்கூட, சொல்ல முடியல. மனசுக்குள்ளயே வைச்சு...'' என்று சொல்வதற்குள், அவளது குரல் தழுதழுத்தது.

'ஸாரிடா!' என்றபடியே அவள் முதுகை வருடிய பூமிநாதனின் குரலில், ஆழ்ந்த வருத்தம் தெரிந்தது. அவனும் வருந்துகிறான் என்பது புரிந்ததும், 'அது என்ன... நான் உங்க மேல வச்ச நம்பிக்கை?'' என்று பேச்சை மாற்றினாள் தான்யா.

''ஓ! அதுவா!'' என்றபடி அவள் தோளைத் தொட்டுத் திருப்பி அவளுடைய அறையை சுட்டிக் காட்டியவன், ''இவ்வளவு வசதிகளையும், உன் குடும்பத்தோட பாதுகாப்பையும் விட்டுட்டு, நீ என் கூட

வாழ விரும்பணும்னா... உனக்கு என் மேல எவ்வளவு நம்பிக்கையும், காதலும், அதோட டெடிகேஷனும் இருக்கணும்?

நீ சின்ன மாங்குடியில, நம்ப வீட்டுல நாலு மாசம் இருந்தியே... அங்க பாதி நேரம் கரண்ட் கிடையாது... ஏசி கிடையாது... ஏன், தண்ணியைக் கூட கிணத்துல இருந்து இறைச்சுத் தான் எடுக்கணும்.

அதெல்லாம், ஒரு பெரிய விஷயமா உனக்குத் தெரியாம இருக்கலாம். ஆனா, உன்னோட காதல் உன்னோட வாழ்க்கையில உயர்த்தணும். வசதியான சூழலிலிருந்து இறக்கி உன்னைக் கஷ்டப்பட வெச்சா, அப்புறம் நானும் உன்னைக் காதலிக்கிறேன்னு சொல்றதுல... அர்த்தமே இல்லையே!

நான் உண்மையா என் லவ்வைச் சொல்றதுக்கு முன்னால, அதைச் செயல்ல காட்டணும். அதுக்குத் தான், இவ்வளவு நாள் ஆச்சு. ஆனா, அவ்வளவு வசதியா உன்னை வெச்சுக்க இப்ப முடியன்னாலும், ஓரளவுக்காவது வசதிகளை ஏற்படுத்திட்டுத்தான், இப்பத் தைரியமா வந்து உன் கிட்ட என்னோட காதலைச் சொல்றேன்!' என்ற பூமிநாதன், அவளது வலது கையைப் பற்றி முத்தமிட்டான்.

'அப்படி என்ன பண்ணினீங்க இவ்வளவு நாளா?'

'உனக்கே தெரியும்... நானும் ஆச்சியும்தான் இத்தனை நாளா அங்க இருந்தோம். அதனால, பெரிய அளவுல வருமானம் தேடணும்ற... 'கோல்' எதுவும் வைச்சுக்கல. ஏதோ ஆராய்ச்சி செய்யறது, மீட்டிங்

போறது, கான்பரன்ஸ் போறது... கிடைச்ச காசுல ஊருக்குச் செலவு பண்றதுன்னு இருந்துட்டேன்.

எத்தனையோ கம்பெனிகளில், என்னை அட்வைஸரா வரச் சொல்லிக் கூப்பிட்டிருக்காங்க. அது மாதிரி ஒரு இடத்துல மாட்டிக்கக் கூடாதுன்னுதான், இதுவரை எந்த ஆஃபரையும் ஒத்துக்கலை.

ஆனா, மீண்டும் உன்னப் பாக்கறதுக்கு முன்னாடி, ஒரு வேலையைத் தேடிக்கணும்... வருமானத்துக்கு வழி பண்ணிக்கணும்னுதான் சென்னைக்கு வந்தேன். இரண்டு கம்பெனில, அட்வைஸரா இருக்க ஒப்புக்கிட்டேன். அதன் மூலமா நல்ல வருமானம்னு கன்பர்ம் ஆனவுடனே, அதுக்கு மேல என்னால அங்க தாக்குப் பிடிக்க முடியல. ஊருக்குக் கூடப் போகாம, சென்னையிருந்து ஃப்ளைட் பிடிச்சு நேரா இங்க வந்தேன்.''

இதுவரை, அவன் தன் காதலை உதாசீனப்படுத்தி விட்டானே என்றிருந்த கொஞ்ச நஞ்ச வருத்தமும், தான்யாவிற்குப் போய் விட்டது.

அவன் அழுத்தமானவன் தான். ஆனால், இவ்வளவு ஆழமாக... அதுவும் தனக்காக மட்டுமே யோசிக்கிறான் என்பதை அறிந்தவுடன், அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அவன் கழுத்தைத் தன் இரு கைகளாலும் தாவியணைத்துக் கொண்டு, அவன் முகமெங்கும் முத்தமழை பொழிந்து, தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினாள்.

அதை முழுமையாக வாங்கிக் கொண்ட

பூமிநாதன், தன் தோள்களிலிருந்து அவள் கைகளை விடுவிடுத்து, 'நான் ரொம்ப இதயம் பலஹீனமானவன். இந்த அதிரடித் தாக்குதலெல்லாம் எனக்குத் தாங்காது!' என்று குறும்பாகக் கண்சிமிட்டிச் சொன்னான்.

'உங்களை...'' என்றபடியே அவன் மார்பில் குத்திய தான்யாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

'எனக்கு ஒரு ஆசை உண்டு தான்யா. நான் முன்னல்லாம் லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணுவேன்னு நினைச்சதேயில்லை. ஆச்சியே பாத்துட்டு... எந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாங்களோ, அவளையே கல்யாணம் பண்ணிட்டு, வாழ்க்கை முழுவதும் லவ் பண்ணணும்னு நினைச்சேன்.

நீ சொல்ற 'லிவ்-இன் ரிலேஷன்ஷிப்' எல்லாம், கொஞ்ச நாள் தான். அதுக்கு அப்புறம் தனித்தனியா பிச்சிக்குது. எந்தப் பொண்ணையும், பையனையும் முதல்ல சேத்து வக்கிறது... 'பிஸிகல் அட்ராக்ஷன்' தான். அது கல்யாணத்துக்கு முன்னாடியே கிடைக்கிறதுனால, சலிச்சிடுது.

இரண்டு வெவ்வேறு சூழலில் இருந்து சேரற மனிதர்கள், செட்டாவதற்கு கொஞ்சம் நாளாகும். ஒரு செடியைக் கூட... பிடுங்கி இன்னொரு இடத்துல நட்டா, அது மீண்டும் துளிர்க்கக் கொஞ்சம் நாட்களை எடுத்துக்கறது நியாயம் தானே? அதே போல, இரண்டு மனிதர்கள் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கற வரைக்கும்,

அவங்களுக்கு பைண்டிங் ஃபோர்ஸா இருக்கறது... இந்தப் பிஸிகல் அட்ராக்ஷன் தான்.

'மோகம் முப்பது நாள்! ஆசை அறுபது நாள்!' என்பது இந்தத் திருமணப் பந்தம் செட்டாகிற 'பீரியட்'. அதுக்குள்ள இரண்டு பேருக்கும், அடுத்தவங்களோட ப்ளஸ், மைனஸ் புரிஞ்சிடும்... புரிஞ்சிடணும்!

அப்படிச் செட்டாயிட்டா, அந்தச்செடி வளர்ந்து பல வருஷம் தழைக்கும். நம்முடைய ரிலேஷன்ஷிப்பும் அப்படி வருஷக்கணக்கா இருக்கணும்னுதான், நான் ஆசைப்படறேன்.''

அவன் சொன்னதிலிருந்தே, சொல்லாமல் விட்டதையும் சேர்த்தே புரிந்து கொண்டாள் தான்யா. இருவருடைய நெருக்கமும், திருமணத்துக்கு முன்னால் அளவாக இருக்க வேண்டுமென்பதைத் தான் அவன் சொல்ல வருகிறான் என்பதும், அவளுக்குப் புரிந்தது.

ஒரு பெண் தன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னாலே, 'எல்லாம்'' முடித்துவிட்டு கை கழுவி விடும் பல இளைஞர்கள் இருக்கும் காலம் இது. இந்தக் காலத்தில், அவன் இப்படிப் பேசுவது, உண்மையிலேயே அவன் தமிழ்ப் பண்பாட்டை மதிக்கிறான்' என்பதை, தெள்ளத் தெளிவாகப் புரிய வைத்தது.

'தான்யா! இதுக்கு மேல நாம இங்க இருந்தா, எல்லாரும் நம்பளைத் தேடிக்கிட்டு, இங்கயே வந்துருவாங்கன்னு நெனக்கிறேன். நாம போலாமா?' என்று கேட்டான்.

‘‘நீங்க கீழே போய், பேசிட்டு இருங்க. நான் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு, டூ மினிட்ஸ்ல வந்திடறேன்!‘ என்று அவள் பரபரப்பாக ஓடவும், ’இன்னும் பேபிதான்!’ என்று நினைத்ததில், சிரிப்புதான் வந்தது அவனுக்கு.

அவன் வெளியேறி கீழே ஹாலுக்குப் போன போது, அவர்களது குடும்பமே டைனிங் டேபிளில் காத்திருந்தது. அவன் சிரித்த முகத்துடன் வந்ததுமே, ’எல்லாம் சுபம் தான்’’ என்று புரிந்து கொண்டார் பலராம்.

அதைப் பற்றிக் கேட்காமல், ‘வாங்க மாப்பிள்ளை, சாப்பிடலாம்!’’ என்று குறிப்பால் அவர் புரிந்து கொண்டதை அறிவுறுத்தினார். ராஜலக்ஷ்மி அருகே வந்து அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு, ‘‘ரொம்பச் சந்தோஷம்பா!’’ என்று உணர்ச்சியுடன் சொன்னார்.

‘கங்கிராட்ஸ் பூமி அத்தான். இல்ல... இப்ப அக்காவோட ஹஸ்பெண்ட்ன்றதால, மாமான்னு கூப்பிடணுமா? என்று அன்னாவும் வாழ்த்து சொன்னாள்.

பூமிநாதன் தலையசைத்து அவர்கள் வாழ்த்தை ஏற்றுக் கொண்டவுடன் திருமணத்தை எங்கே, எப்போது நடத்துவது என்று பேசிக் கொண்டிருந்தனர். ‘‘சாப்பிட்ட பின்னர், ஆச்சியிடம் பேசி முடிவு செய்கிறேன்’’ என்று சொன்னார் பலராம்.

தான்யா பத்து நிமிடம் கழித்து அவசரமாக வந்து, அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். வந்தவள் முதலில் தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ‘தாங்க்ஸ்

அப்பா!' என்று மகிழ்ச்சியாகச் சொல்ல, அவர் பாசத்துடன் அவளது முதுகை வருடினார்.

கொஞ்ச நாட்களாக வாடியிருந்த, அவருடைய பூப்போன்ற மகளது முகத்தில், இன்று தெரிந்த மலர்ச்சி அவர் கவலையை முற்றிலும் போக்கியது.

ராஜலக்ஷ்மி குறுக்கிட்டு 'ஏய்! எனக்குத் தாங்க்ஸ் சொல்லமாட்டியா? கல்யாணத்துக்கு, அப்பா மட்டும் ஓகே சொன்னா போதுமா?' என்று சிரிப்புடன் கேட்டார்.

அவர் கழுத்தையும் கட்டிக் கொண்டு, 'உங்களுக்கு ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்-மா! கல்யாணத்துக்கு ஓகே சொன்னதுக்காக மட்டும் இல்ல, இப்படியொரு சூப்பரான அண்ணன் பையனை எனக்கு இன்ட்ரொடியூஸ் பண்ணினதுக்கு!' என்று கூறிவிட்டு, கண் சிமிட்டினாள் தான்யா.

'அடி!' என்று செல்லமாக அவள் முதுகில் ஒரு அடி வைத்த ராஜலக்ஷ்மி, ''என்னோட வாழ்க்கையில மிகப் பெரிய வரமே உங்க அப்பாதான். அதே மாதிரி உன்னையும், என் மருமகன் பாத்துப்பாரு!' என்று சொல்லிக் கொண்டே அவர் கண்கள் பலராமை நோக்கிய அதே நேரத்தில், பலராமும் தன் மனைவியை பார்த்துக் கொண்டிருந்தார்.

இத்தனை வருடங்கள் கழித்தும், அவர்களுடைய காதல் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதை, அந்த அறையிலிருந்த மற்ற மூன்று ஜோடிக் கண்களும் கண்டு உணர்ந்தன.

'ஹலோ பேரண்ட்ஸ்! இன்னிக்கு ஹீரோ -

ஹீரோயின், அக்காவும் மாமாவும் தான். உங்களுக்கு... கேரக்டர் ரோல் தான். அதனால, நீங்க டூயட் பாடக் கூடாது!' என்று அன்னா அவர்களைக் கலாய்க்க, அங்கு எழுந்த சிரிப்பலை ஓய வெகு நேரமானது.

பலராம் ஆச்சியுடன் பேசி திருமணத் தேதியை ஒரு மாதத்திற்குள் இருக்கும்படி வைத்தார். சின்ன மாங்குடியிலேயே திருமணத்தை நடத்துவதென்றும், அதன்பிறகு மும்பையில், அவரது நண்பர்களுக்கு ரிசப்ஷன் அழைப்பு விடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# 21

கல்யாணத்திற்கு ஒரு மாதமே இருந்ததால், கல்யாண ஏற்பாடுகள் வேகமாக நடந்தன. பூமிநாதனுக்கு திருமண ஏற்பாடுகளோடு வேறு வேலைகளும் இருந்ததால், ரொம்பவே பிஸியாக இருந்தான். அவன் மட்டுமே தனியாக எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்க முடியாது என்பதால், அவனது உதவிக்கு இரண்டு பேரை அனுப்பியிருந்தார் பலராம்.

முதலில் பூமிநாதன் மறுத்தாலும், பிறகு தன் வேலைப்பளுவை உணர்ந்து அதற்கு ஒத்துக் கொண்டான். பலராம் தன் மருமகன் அதிகத் தன்மானம் பார்ப்பவன் என்பதை உணர்ந்ததால், நேரடியாகத்

திருமணச் செலவுகளில் பங்கேற்கவில்லை.

இந்த ஒரு மாதமும், தான்யா பூமிநாதனுக்கு போன் செய்யவேயில்லை. அவன் ஓரிருமுறை போன் செய்தபோதும், அவள் வீட்டில் இல்லை. 'சரி! நம்பாளு ஷாப்பிங்ல பிஸியாக இருக்காங்க போல இருக்கு' என்று நினைத்து பூமிநாதனும் விட்டுவிட்டான்.

திருமணத்துக்கு முதல் நாளே, பலராம் குடும்பத்துடன் சின்னமாங்குடி வந்துவிட்டார். இருவருக்கும் நெருக்கமானவர்கள் நிறைய பேர் இருந்ததால், சின்ன மாங்குடியிலேயே இருந்த பெரிய திறந்த வெளியில் மண்டப அலங்காரம் செய்து திருமணம் நடந்தது.

எல்லோரிடமும் சிரித்த முகமாக இருந்த தான்யா, அவனை மட்டும் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை என்பதை, பூமிநாதனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். ஏன், புதுமணப் பெண்களைப் போல ஓரக்கண்ணால் கூடப் பார்க்கவில்லை.

முதலில், அது வெட்கத்தினால் இருக்குமென்று நினைத்தவன், அவள் சடங்குகள் நடக்கும் நேரம் முழுவதிலும்... ஏன், தாலி கட்டும்போது கூட, அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை என்றதும், பூமிநாதன் தவித்துப் போனான்.

மணமேடையில் அவளை நெருங்கி அமர்ந்தாலும், நெற்றியில் குங்குமம் வைக்கும் சாக்கில் அவளது தோளைச் சுற்றிக் கை போனபோதும், அவள் கன்னத்தில் லேசாக முத்தம் வைத்தபோதும்,

கைப்பிடித்து அக்னிவலம் வரும்போது அவள் கையைச் சுரண்டியும், என அவனும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தான். ம்ஹூம்! பலன் தான் இல்லை.

வாழ்த்த வந்தவர்களை அறிமுகம் செய்தபோது கூட, அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாளே ஒழிய, அவனைக் கண்டுகொள்ளவேயில்லை. பூமிநாதனுக்குள் கிலி பிடித்தது.

'என்னடா பூமிநாதா? உன் திருமண வாழ்க்கையின் ஆரம்பமே, பூகம்பம் போலிருக்கிறதே!'' என்று மனது அவனுக்கு அனுதாபப்பட்டது.

'தான்யா ஏன் இப்படியிருக்கிறாள்? அவளுக்கு என்ன கோபம்? என்ன காரணம்? ஒன்றுமே புரியவில்லையே!'

'ஸ்... அப்பா! முதல் நாளே கண்ணைக் கட்டுதே! இன்னும் மிச்ச நாளை எப்படித் தள்ளப் போறோமோ?' என்று அங்கலாய்த்தான் பூமிநாதன். எந்நேரமும் யாராவது கூடவே இருந்ததால், தான்யாவுடன் பேசவும் முடியவில்லை.

அப்படியும் முயன்று,'என்ன தான்யா?' என்று கேட்டபோதும், அவளிடம் எந்த ரியாக்ஷனும் இல்லை. மேலே பேச முயலுமுன் யாரோ வந்துவிட, பேச்சு தொடரவில்லை.

திருமண விருந்து முடிந்து மற்றவர்கள் விடைபெற்றபின், குடும்பத்தினர் மட்டும் வீட்டுக்கு வந்தனர். வீட்டில் வந்து விளக்கேற்றிய பின் ஆச்சி தான்யாவைக் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளச்

சொல்ல, பூமிநாதன் அவளருகில் குனிந்து 'என்னோட ரூம்ல போய், ரெஸ்ட் எடுக்கறியா?' என்று கேட்டதை, தான்யா காதில் கூட வாங்கவில்லை. பூமிநாதன் பேசிக் கொண்டிருக்கும்போதே எழுந்து ஆச்சியுடன் போனவள், அதன்பிறகு அவன் கண்ணிலேயே படவில்லை.

அன்று மாலை நேரத்தில், மாடியிலிருந்த அவனுடைய அறையில் முதலிரவுக்கான அலங்காரம் நடந்தது. கீழே பூமிநாதன், பலராம் மற்றும் ஊர் தலைவர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருக்க, தான்யா அவளது அறையிலேயே இருந்தாள். அங்கு நிறைய பெண்கள் இருந்ததால், உள்ளே சென்று பேச அவனுக்குக் கூச்சமாக இருந்தது.

'சரி! இன்னிக்கு ராத்திரிக்குள்ள அவளுடைய கோபம் என்னவாக இருந்தாலும், அதைச் சரி பண்ணிடனும்!' என்று முடிவு செய்து கொண்டான். பூமிநாதனின் பொறுமையை மிகவும் சோதித்த பிறகு, இரவும் ஒருவழியாக வந்தது.

இரவு உணவைச் சாப்பிடும் போதும், தான்யா மௌனமாகவே சாப்பிட்டாள். பூமிநாதன் தனியாகப் பேசிக் கொள்ளலாமென்று நினைத்து, முயற்சி செய்வதையே விட்டுவிட்டு சாப்பிட்டவுடன் தன் அறைக்குப் போய்விட்டான்.

தன் அறையிலிருந்த கட்டிலில் அமர்ந்து அவன் காத்திருக்க, சற்று நேரம் கழித்து உள்ளே வந்தாள் தான்யா. வந்தவள், கையில் வைத்திருந்த பால் செம்பை அங்கிருந்த மேஜையில் வைத்தாள்.

'இதையெல்லாம் உன்னை யாரு தூக்கிட்டு வரச்சொன்னது? ஆச்சியா? இல்ல உங்கம்மாவா?'' என்று பூமிநாதன் படபடக்க, தான்யா அதை கண்டு கொள்ளாமல் நேராக வந்தவள், அவன் காலில் விழுந்து வணங்கினாள்.

'அய்யய்யோ! அடுத்தது இது என்ன?' என்று பதறி பூமிநாதன் அவளைத் தூக்க முயல, மீண்டும் அவனிடமிருந்து நகர்ந்தவள் மேஜை மேல் வைத்திருந்த பாலை எடுத்துத் தம்ளரில் ஊற்றி, அவனிடம் கொடுத்தாள்.

அதற்குள் பூமிநாதனின் பொறுமை தீர்ந்து போனதால், அவள் கையிலிருந்த பால் டம்ளரை வெடுக்கென்று பிடுங்கி மீண்டும் மேஜைமேல் வைத்தவன், கட்டிலில் அமர்ந்து அவளையும் இழுத்துத் தன் மடியில் அமர்த்திக் கொண்டான்.

'என்னடா! ஏன் என் கூடப் பேசவே மாட்டேங்கறே? உடம்பு ஏதும் சரியில்லையா? ஆனா, எல்லாரோடையும் பேசினதானே? என் மேல ஏதாவது கோபமா? நீ சொன்னாத் தானே தெரியும்? காலையிருந்து யோசிச்சு யோசிச்சு, மண்டையே காஞ்சு போச்சு!'

அவன் கேட்கக் கேட்க, அப்போதும் அவள் தலைகுனிந்தே இருந்தாள்.

பூமிநாதனின் டென்ஷன் எகிறியது. ''ஏய்! நானும் கேட்டுகிட்டேயிருக்கேன். நீ பேசாம இருந்தேன்னா எப்படி? என்று கோபமாக அவள் முகத்தை

அழுத்தமாகப் பிடித்து, தன் பக்கமாகத் திருப்பினான். உணர்ச்சியே இல்லாதது போல முகத்தை வைத்துக் கொண்டு, ‘நீங்க ஆசைப்பட்ட மாதிரி, நான் புதுசா உங்களுக்கு அறிமுகமான பொண்ணா நடிச்சேனா? ஆச்சி சொல்ற பொண்ணைக் கல்யாணம் பண்ணிட்டு, அப்புறமா அவளை லவ் பண்ணணும்னு... நீங்க தானே அன்னிக்குச் சொன்னீங்க'' என்றாள் தான்யா.

''சரி! புதுசா அறிமுகமாற பொண்ணு எப்படி நடந்துப்பான்னு தெரிஞ்சுக்கலாம்னு, பழைய படத்தையெல்லாம் போட்டுப் பார்த்தேன். அதுல எல்லாம், இவ்வளவுதான் காட்டறாங்க. அதுக்கப்புறம், டூயட் பாடறாங்க. இது வரைக்கும் நான் கரெக்டா பெர்பார்ம் பண்ணினேனா? ஆர் யூ ஸாடிஸ்பைட்?‘

கண்களில் குறும்புடன், கண் சிமிட்டியபடியே தான்யா கேட்டபோது, ‘கோபப்படுவதா? சிரிப்பதா?’ என்றே தெரியவில்லை பூமிநாதனுக்கு.

‘உன்னை...‘ என்றவன் வேகமாக அவள் முகத்தருகே குனிந்தபிறகு சில நிமிடங்கள் அங்கு பேச்சே எழவில்லை. இருவரும் மூச்சு வாங்குவதற்காக சிறிது இடைவெளி எடுத்தபோது, பூமிநாதனுக்கு அவள் செய்த குறும்பு, இப்போது அடக்க முடியாத சிரிப்பைத் தந்தது. அவனுடைய ரியாக்ஷனை நினைத்துப் பார்த்து, அந்தச் சிரிப்பில் இணைந்தாள் அவள்.

உள்ளூர, ‘அவன் அழுத்தமானவன், எதற்கும் கலங்காதவன்’ என்ற எண்ணம் இருந்தது தான்யாவிற்கு. ஆனால் இப்போது, தான் சில மணி நேரங்கள்

பேசவில்லை என்றதும், அவன் பதட்டமடைந்ததைப் பார்த்தவுடன், அவளுடைய தன்னம்பிக்கை அதிகரித்தது.

சிரித்து முடித்தவுடன், 'நான் உங்களுக்கொரு யூஸ்புல்லான பொருளை வாங்கியிருக்கேன்!'' என்றவள், எழுந்து போய் ஒரு கிஃப்ட் ரேப் செய்யப்பட்டிருந்த பார்சலை எடுத்து வந்தாள்.

அவள் சொன்னதும்தான், 'அட! ஆமா... நான் கூட உனக்கு ஒரு நல்லா யூஸாகிற கிப்ட் வாங்கியிருக்கேன்!' என்றபடி அவனும் எடுத்து வர, இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். அவரவர் பரிசைப் பிரித்துப் பார்த்தவுடன், இருவரும் வெடித்துச் சிரித்தனர்.

அவனுக்கு 'ஹன்ட்ரட் வேஸ் டு ஷோ யுவர் லவ் டு யுவர் லைப் பார்ட்னர் ' (Hundred ways to show your Love to your Life Partner) என்ற ஆங்கிலப் புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்திருந்தாள்.

பூமிநாதன் அவளிடம் கொடுத்திருந்த புத்தகத்திலோ, 'வகை வகையான செட்டிநாட்டுச் சமையல்' என்று இருந்த்து.

சிரித்து முடித்த தான்யா, 'நீங்க வாங்கின புக், எனக்குத் தேவையே படாதுன்னு நினைக்கிறேன். இந்த ரெண்டு மாசமும், நான் சூப்பரா சமைக்கக் கத்துக்கிட்டேன். நீங்க கவலையே படாதீங்க... நூடுல்ஸ் செஞ்சு, இனிமே உங்களைக் கொடுமைப்படுத்த மாட்டேன். ஆனா, நான் வாங்கின கிஃப்ட் உங்களுக்கு

ரொம்பவே உபயோகமா இருக்கும்னு நினைக்கிறேன்!' என்று கண்களைச் சிமிட்டிச் சொன்னாள்.

''அதை, இன்னைக்கு நைட் ஸாம்பிள் பாத்துட்டு நாளைக்குச் சொல்லுமா நீ! நான் இன்னொரு கிஃப்டும் உனக்காக வெச்சிருக்கேன்' என்றவன் மேஜை மேலிருந்த பெரிய பழுப்புநிறக் கவரை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

அதை வாங்கிப் பிரித்த தான்யா, அதன் உள்ளேயிருந்த ஒரு பத்திரத்தை வெளியே எடுத்தாள். அதில், சின்னமாங்குடியில் இருக்கும் தன் இரண்டு ஏக்கர் நன்செய் நிலத்தை, திருமதி தான்யலக்ஷ்மி பூமிநாதனுக்குக் கிரயம் செய்து கொடுப்பதாக எழுதியிருந்தது. இன்னும் பதிவு செய்யாத பத்திரம் அது.

'என்ன இது' என்று புரியாமல் தான்யா நிமிர்ந்து பூமிநாதனைப் பார்த்தாள். 'தான்யா! உனக்கு முதல் முதலா கிப்ட் வாங்கும்போது ஸர்ப்ரைஸா உனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு கிப்ட் வாங்கணும்னு நினைச்சேன். உனக்கு நகைகளில் எல்லாம் பெரிசா ஈடுபாடு இல்லன்னு தெரியும்.

வேற என்ன வாங்கலாம்னு யோசிச்சப்போ, அன்னிக்கு நீ உன்னோட பண்ணை வைக்கிற ஆசையை அவ்வளவு பாஷனேட்டா சொன்னது ஞாபகம் வந்தது. இந்த இடம் சூப்பரான இடம். நீ பண்ணை வைக்கறதுக்கு ஏற்ற இடம். அதான் வாங்கிட்டேன்' என்று பூமிநாதன் பதில் சொன்னான்.

'இதை இன்னும் ரிஜிஸ்டர் பண்ணலை. நீ வந்து

ரெஜிஸ்டர் ஆபிஸ்ல கையெழுத்துப் போட்டால்தான், உன் பேருக்கு மாத்தமுடியும். நாம ரிசப்ஷனுக்காக இரண்டு நாள்ல மும்பைக்குப் போவோம் இல்லையா? அப்போ, புதுக்கோட்டை ரிஜிஸ்டர் ஆபிஸ்ல, ஒரு மணிநேரத்தில ரிஜிஸ்டர் பண்ணிட்டுப் போயிடலாம். அதற்கான எல்லா ஏற்பாட்டையும், நான் செஞ்சு வெச்சுட்டேன். ஒகேயா?' என்று பூமிநாதன் கேட்க தான்யா பரவசத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னுடைய பரிசு அவளை மிகவும் உணர்ச்சி வசப்பட வைத்துவிட்டது என்பது தெரிந்ததும், அவளை ரிலாக்ஸ் செய்வதற்காக, 'நீ அன்னிக்குச் செஞ்ச மாதிரி அதிரடித் தாக்குதலை, இப்ப அத்தான் தாங்கிக்குவேன்மா! இப்ப, என் இதயம் ஸ்ட்ராங்காக ஆயிடுச்சு!' என்று, அன்றொரு நாள் இதே போல உணர்ச்சி வயப்பட்டு, தான்யா அவன்மேல் முத்தமழை பொழிந்ததை நினைவுபடுத்தினான்.

'இதுக்கு, அந்தத் தாக்குதல் எல்லாம் பத்தாது. அதைவிடப் பலமான தாக்குதல் தேவை!'' என்றபடியே அவனது சட்டையைப் பற்றியிழுக்க, அதன் பிறகு அங்கு பேச்சேயில்லை.

* * * * *

# 22

மறுநாள் காலை ஆறுமணிக்குக் கண்விழித்த போது, உண்மையாகவே பூமிநாதனுக்கு அந்தப் புத்தகம் தேவையில்லை என்பதை தான்யா ஒத்துக்கொண்டாள். தன் இடுப்பைச் சுற்றியிருந்த அவனது கைகளை விலக்கிவிட்டு எழ முயன்றபோது, அவனது கைகள் மீண்டும் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.

'நீங்க விழிச்சுட்டுத் தான் இருக்கீங்களா? நான் உங்களோட தூக்கத்தை டிஸ்டர்ப் பண்ணாம, எழுந்து போகலாம்னு நினைச்சேன்' என்று சிரிப்புடன் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

'நான், ஆறு மணிக்கு மேல தூங்கினதே கிடையாது. நான் கண்விழிச்சு, அரைமணி நேரம் ஆச்சு. சும்மா உன்னோட முகத்தையே பார்த்துட்டு இருந்தேன். காலையிலயே தேவி தரிசனம் நல்லதில்லையா?'

தான்யாவிற்கு, அவன் இப்படியெல்லாம் கூடப் பேசுவானா என்று ஆச்சரியம் தாங்கவில்லை. எதைச் சொன்னாலும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தவன், இப்போது கிண்டல், கேலி, சிரிப்பு என வார்த்தைகளாய்க் கொட்டுவதைப் பார்த்ததும் அவளுக்கு வியப்பு மேலிட்டது.

இதுவரையிலும், அவனுக்கு இது போல பேசிச் சிரிக்க, அவனது வயதுக்கு ஒத்தவர்கள் யாருமில்லை.

ஆச்சியோ ரொம்பப் பெரியவர். அம்மா அப்பாவும் இல்லாததோடு, சிறு வயதிலேயே அவன் பெரிய துக்கத்தைச் சந்தித்தது, அவனை ரொம்ப ரிஸர்வ்ட் டைப் ஆக மாற்றியிருக்கிறது என்பதை உணர்ந்தாள்.

இனி, அவன் இந்த வயதிற்கான ஜாலியுடன் இருக்க, நம்மால் ஆனதைச் செய்ய வேண்டுமென்று உறுதியெடுத்துக் கொண்டாள். 'தேவி தரிசனம் இருக்கட்டும். உங்களுக்கு குன்னக்குடி முருகனோட தரிசனம் வேணும்னா, உடனே கிளம்புங்க. அவரு ஒன்பது மணி வரைக்கும் தான் 'கால்ஷீட்' கொடுத்திருக்காரு. ஆச்சி ஏழு மணிக்குள்ள கிளம்பணும்னு நேத்தே சொல்லல? என்று அவனது கையைப் பிடித்து எழுப்பியபடியே கேட்டாள்.

'ஹேய்! ஐடியா! அவங்கல்லாம் கார்ல போகட்டும். நாம ரெண்டு பேரும், ஜாலியா பைக்குல போகலாமா... முன்னாடி போன மாதிரி?' என்று பூமிநாதன் கேட்க, தான்யா சங்கடமாக உணர்ந்தாள்.

'நாம புதுசா கல்யாணம் ஆகிய பின்னால், முதன்முதலா அந்தக் கோவிலுக்குப் போறதுனால, பைக்ல போக ஒத்துக்க மாட்டாங்க. இன்னிக்கிக் கார்ல போகலாம். அப்புறமா பைக்ல போகலாம்... ஓகேயா? என்று தாஜா செய்தாள்.

''சரி விடு!'' என்று வேண்டா வெறுப்பாக எழுந்தவன், தான்யா குளித்து விட்டு அணிவதற்காக உடைகளை எடுத்துக் கொண்டு வருவதற்குள், ஒரு துண்டுடன் கீழே இறங்கிப் போய்விட்டான்.

# 20

தான்யா கீழே இறங்கி வரும்போது கூடத்தில் இருந்த ராஜலக்ஷ்மி, ''என்ன மாப்பிள்ளை அப்பவே கீழே வந்துட்டாரு. நீ இவ்வளவு நேரம் தூங்கினியா?'' என்று கடிந்து கொண்டார்.

''டிரஸ் எடுத்துட்டு வர, லேட் ஆயிடுச்சும்மா?'' என்று சமாதானம் சொல்லித் தப்பித்துக் கிணற்றடிக்கு வந்தபோது, பூமிநாதன் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தான்.

சரி! அவன் குளிப்பதற்காக நீர் இறைக்கிறான் போல... அவன் குளித்து முடித்ததும் நாம் போவோம் என்று பல் துலக்க ஆரம்பித்தாள். அவனோ நீர் நிரம்பிய வாளிகளைக் கொண்டு போய் பாத்ரூமில் வைத்துவிட்டு 'நீ குளிக்கறியா தான்யா?' என்று கேட்டான்.

''நீங்க குளிங்க. எனக்கு, வழக்கம் போல சிகப்பியே தண்ணீர் எடுத்துத் தரட்டும்.'

'யாரு! யாரு! சிகப்பியா? நெற்றி வேர்வை நிலத்துல விழ நீர் இறைச்சது... இந்த பூமிநாதன். ஆனா பெருமை பூரா... அந்தச் சிவப்பிக்கா? இதெல்லாம் ஓவர்!' என்று போலியாய் அலுத்துக் கொண்டான்.

'நீங்களே, எப்பவும் என்கிட்டக் கடுகடுன்னு இருந்தீங்க. இதுல, நீங்கதான் எனக்காகத் தண்ணீர்

இறைச்சீங்கன்னு, எனக்கு எப்படித் தெரியும்? நான், ஆச்சிதான் சிகப்பியை தண்ணி இறைச்சுத் தரச் சொன்னாங்கன்னு நெனச்சேன்.''

''முதல் நாள் முள் குத்தினபோது, உன் காலைப் பாத்தேன் இல்ல. அப்ப, தண்ணி இறைச்சு செவந்து போயிருந்த உன் கைகளையும் பாத்தேன். அன்னிலருந்து, இந்தத் தண்ணீர் சேவையை... நான் தான் செஞ்சுட்டு இருக்கேன். தெரியுமில்ல?'' என்று விளக்கினான்.

''இன்னைக்கு நைட் மறக்காம எனக்கு ஞாபகப்படுத்துங்க. இதுக்கு ஒரு அதிரடித் தாக்குதல் இருக்கு உங்களுக்கு!'' என்ற தான்யா பாத்ரூமை நோக்கிச் சென்றாள்.

'பின்ன எதுக்காக, இதை வேல மெனக்கெட்டுச் சொன்னேன்னு நினைச்சே? ஐ யம் வெயிட்டிங்!' என்று குறும்பாகக் குரல் கொடுத்தான் அவன்.

இரண்டு நாட்கள் கழித்து பத்திரப் பதிவை முடித்துவிட்டு மும்பைக்குச் சென்று ரிசப்ஷனில் கலந்து கொண்ட இருவரும், ஊருக்குத் திரும்பி வராமல், அப்படியே தேனிலவுக்காக ஊட்டிக்குப் போனார்கள்.

கூட வந்த ஆச்சியையும் அதுவரை தனியாக இருக்க வேண்டாம் என்று, ஒரு மாதம் மும்பையிலேயே தங்கியிருக்கச் சொல்லி விட்டார்கள். ராஜலக்ஷ்மிக்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு, உறவினர் என்ற முறையில் சின்னம்மாவாவது அவர்களது வீட்டுக்கு வந்தாரே!' என்று ஒரே சந்தோசம்.

தான்யா கணவன் வாங்கிக் கொடுத்த நிலப் பத்திரத்தையும், ஊட்டிக்குப் போக எடுத்திருந்த டிக்கெட்டுகளையும் தந்தையிடம் காட்டினாள். அப்போது, அவளது கண்களில் தெரிந்த பெருமையைக் கண்டு, அவர் நெகிழ்ந்து போனார்.

அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை, சர்வ சாதாரணமாக அவளுடைய பாங்க் பாலன்ஸிலிருந்தே வாங்கமுடியும். உலகம் முழுவதுமே டூர் அடித்திருக்கும் தான்யாவிற்கு, வருடா வருடம் ஃப்ளவர் ஷோக்காக மட்டுமே இங்கிருந்து ஊட்டிக்குச் செல்பவளுக்கு, இது அதிசயமா என்ன?

பெரும்பாலான பெண்கள், தங்களது கணவனிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப் பொருட்களை எதிர்பார்ப்பதில்லை. முக்கியமான தருணங்களில் அவர்களது விருப்பங்களைப் புரிந்துகொள்வதும், ''நான் உன்மேல் அக்கறையாக இருக்கிறேன். ஐ கேர் அபவுட் யூ!'' என்பதை உணர்த்தும் சிறு பரிசுகளும்தான், அவர்களது வாழ்வின் மிகப் பெரிய பொக்கிஷம்.

தன் மாப்பிள்ளை அப்படி அக்கறை உள்ளவனாகவும், தன் மகள் அந்த அன்பைப் புரிந்து கொள்பவ்ளாகவும் இருந்ததில், பலராமுக்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது. அவருடைய செல்ல மகள், திருமண வாழ்க்கையின் அடிப்படையைப் புரிந்து கொண்டு விட்டாள். இனி அவர்களைப் பற்றிய கவலை அவருக்கு இல்லவே இல்லை.

பூமிநாதன், தன் வசதிக்கேற்ற ஹனிமூனை

மனைவியுடன் கொண்டாட வேண்டுமென்று முடிவு செய்திருந்ததைப் புரிந்து கொண்ட பிறகு, அவர்களது ஏற்பாடுகளில் எந்த விதத்திலும் தலையிடவில்லை.

முன்னதாகவே எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தான். அது மட்டுமல்லாமல் அவர்கள் ஹனிமூனிலிருந்து திரும்பி வருவதற்கு முன்னால், அவனது வீட்டிலும் சில மாற்றங்களைச் செய்ய நம்பகமான நபரிடம் வேலையை ஒப்படைத்திருந்தான்.

# 23

**தா**ன்யாவிற்கு, ஊட்டி ஒன்றும் புதிய இடமல்ல. ஆனாலும் ஹனிமூனுக்காக இப்போது பூமிநாதனுடன் வந்தது, அவளுக்கு ஒரு-புது அனுபவமாக இருந்தது. இந்தத் தேனிலவு இருவருக்கும் ஒருவரையொருவர் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

'பூமிநாதன் இப்படியெல்லாம் கூட, குறும்பு செய்வானா? முதன்முதலில் இணையதளத்தில் தான் பார்த்த அழுத்தக்காரன் இவன் தானா?' என்பதில் தான்யாவிற்கு மிகவும் ஆச்சரியம்.

'தன் மேல் இவ்வளவு உயிராக இருப்பவனுக்குத் தான் காதலைச் சொன்னபோது மட்டும், எப்படி இறுகிய மனத்துடன் இருக்க முடிந்தது?' என்று நேரடியாகவே கேட்டுவிட்டாள்.

'இப்ப என் மேல இவ்வளவு அன்பா இருக்கீங்க. எனக்கு எது பிடிக்கும்னு, பார்த்துப் பார்த்து செய்யறீங்க. முதலில் உங்களுக்கு என்மேல் வெறுப்பு இருந்தது எனக்குத் தெரியும்; அதை விட்டு விடுவோம்! ஆனால், அதுக்கு அப்பறம் நாம சாதாரணமா பேசும்போதோ... ஏன் நான் அன்னிக்கி நைட் என்னோட கூச்சத்தைவிட்டு உங்ககிட்ட என்னோட லவ்வைச் சொல்லும்போது கூட... நீங்க உங்க விருப்பத்தைக் கோடி கூட காட்டலியே!

மூஞ்சில அடிச்ச மாதிரி, 'ஸாரி'ன்னு சொல்லிட்டு எழுந்து போயிட்டிங்க. அதுக்குப் பிறகு நான் ஊருக்குப் போயிட்டு வரேன்னு சொல்லிட்டு, காரில ஏறித் திரும்பிப் பார்த்தா... எல்லாரும் அங்க இருந்தாங்க. ஆனா நீங்க, அப்பவே அந்த இடத்தை விட்டுக் காணாமல் போயிட்டீங்க. அன்னிக்கு என் மனசு எவ்வளவு வலிச்சதுன்னு எனக்குத் தான் தெரியும். நீங்க விரும்புலைனாக் கூட பரவாயில்லை; இவ்வளவு நாள் உங்க வீட்ல இருந்ததுக்கு... கர்டிஸிக்காகவாவது வாசலில் நிக்கலியே!

அந்த அளவுக்கா நாம அவரை வெறுக்க வெச்சிட்டோம்னு ரொம்ப நொந்து போயிட்டேன். என் தன்னம்பிக்கையே ரொம்ப அடிமட்டத்துக்குப் போயிடுச்சு.'' இதைச் சொல்லும் போதே தான்யாவின் கண்கள் கலங்கின. குரல் தழுதழுத்தது. உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதில், அவளுக்கு மூச்சு வாங்கியது.

அவள் பேசியபோது குறுக்கிடாமல் கேட்டுக்

கொண்டிருந்த பூமிநாதன், தனது செயல் அவளை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பதை உணர்ந்தான். அவளுக்கு விளக்கம் தர வேண்டியது தன்னுடைய கடமை என்பதை உணர்ந்தான்.

எதிரில் அமர்ந்திருந்த அவளுடைய கண்களைப் பார்த்து, அவளைத் தொடாமல் மனதிலிருப்பதைக் கண்ணாடி போல் காட்டும் விதத்தில், 'தான்யா! நீ கேட்ட ஒவ்வொரு கேள்வியும் நியாயமானது. நான் உன்னைப் பார்க்காமலேயே வெறுத்ததுக்குக் காரணம், நீ உன் பணத்தையும், பேக் கிரவுண்டையும் வெச்சு என்னை இன்ப்ளுயன்ஸ் பண்றேன்னு நினைச்சதுனால தான்.

ஆனா, நீ ரொம்ப மென்மையானவன்னு... உன்னோட பழகின கொஞ்ச நாளிலேயே புரிஞ்சிடுச்சு. நான் உன்னப் புரிஞ்சுகிட்ட உடனேயே, என் மனசு உன் பக்கம் விழுந்தாச்சு. ஆனா நீ என்ன நினைக்கறேன்னு தான் எனக்குத் தெரியல. உன்னோட பேக்ரவுண்ட் வேற, நம்ம ரெண்டு பேருக்கும் நடுவுல ஒரு பெரிய தடைக்கல்லா தெரிஞ்சது. இந்த நிலமைல, நான் எப்படி என் மனதை உனக்கு வெளிப்படையா காட்ட முடியும்?''

'சும்மா, இதையே ஒரு காரணமா சொல்லாதீங்க. வசதியான குடும்பத்துல பிறந்த எங்கம்மா, விவசாயக் கூலியா இருக்கற எங்கப்பாவை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிட்டு, இன்னிக்கு நல்லா இல்லையா? ஊருல எத்தனையோ கல்யாணங்கள் இப்படி நடக்கலியா?

என்னவோ, நீங்கதான் முதல் தடவையா இதை யோசிக்கற மாதிரி, கதை சொல்லாதீங்க. அதோட, எங்கப்பாவுக்கு அப்போ இருந்த லெவலைக் கம்பேர் பண்ணும்போது, நீங்க ஓரளவுக்கு வசதியோடவும், பேரோடயும் தானே இருக்கீங்க? வேற ஏதாவது நல்ல காரணமா, யோசிச்சுச் சொல்லுங்க!'

தான்யா சொன்ன விதத்தைக் கேட்டு, பூமிநாதனுக்குச் சிரிப்பு வந்தது. 'தனக்காகவும், தங்கள் காதலுக்காகவும் தானே அவள் போராடுகிறாள்?' என்று பெருமையாகக் கூட இருந்தது. ஆகவே அவள் சொன்னதை ஆமோதிப்பது போல தலையசைத்தான்.

''நீ சொன்னது ரொம்பக் கரெக்ட்தான்டா. எத்தனையோ பேர் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருந்தாலும், காதலிச்சுக் கல்யாணம் செஞ்சுக்கறாங்க தான். ஆனா, அதுல எத்தனை பேரு சக்சஸ் ஆகறாங்க? கொஞ்ச நாள் வறுமைல கஷ்டப்படும்போது, அங்க காதல் காணாமப் போயிடுது. ஏன்... வந்த வேகத்துல மறைஞ்சும் போயிடுது!

உங்கப்பாவுக்கு, உழைப்போட அதிர்ஷ்டமும் கை கொடுத்துச்சு. அவர் தன்னை நம்பி வந்த பொண்ணை ரொம்ப நல்லா வெச்சுக்கணும்னு, உறுதியோட உழைச்சாரு. காலமும் கை கொடுத்தது. இதே... அவரால மேல வரமுடியாம போயிருந்தா... எப்பவாவது ஒரு கஷ்டமான நேரத்துலயாவது, நாம தப்பு பண்ணிட்டோமோன்னு தோணும். அது தப்பில்ல! அது மனித இயற்கை.

ஆனா, நான் என்னோட காதலில் ஒரு நொடி கூட அந்த சலிப்பு வந்துடக் கூடாதுன்னு நினைக்கிறேன். அதனாலதான் நான் என் மனசை உன்கிட்டயிருந்து மறைச்சுட்டேன். நான் முன்னாலயே சொன்ன மாதிரி, உங்கப்பா என்னை நம்பி, உன்னை என் வீட்டுக்கு அனுப்பினாரு. அந்த நம்பிக்கையை நான் காப்பாத்தலைன்னா, அப்புறம் நீ என் மேல வெக்கிற நம்பிக்கையை எப்படிக் காப்பாத்த முடியும்?

அதுக்கப்புறம், நாம ரெண்டு பேரும் ரிலேட்டிவ்ஸ்னு தெரிஞ்ச பிறகு... நீ என்னிடம் உன் லவ்வை சொன்னப்பயும், என்னால உடனடியா ஏத்துக்க முடியல. நீ யோசிச்சேன்னா, 'நான் இப்ப ஏத்துக்கற நிலமைல இல்லன்னு' அப்பச் சொன்னது புரியும். நீ என் வாழ்க்கைல வர்ற வரைக்கும், நான் வருமானம் தேடிக்கற எந்த முயற்சியும் செஞ்சதில்ல. கிடைச்ச கொஞ்சநஞ்ச காசையும், பொதுச் சேவைல செலவு பண்ணினேன். ஆச்சி, அந்தக் காலத்தவங்க. அவங்களோட தேவைகள் ரொம்பக் கம்மின்னு உனக்கே தெரியும்.

நம்ப வீட்ல ஏசி இல்ல... கரன்ட் போனா ஃபேன் கிடையாது. சிம்னி விளக்கையும், மெழுகுவத்தியையும் நம்பித்தான் ஆச்சி இருக்காங்க. அட்டாச்ட் பாத்ரூம் கூட எங்க வீட்ல கிடையாது. கிணத்துல இறைச்சுதான் தண்ணி எடுக்கணும். குடிக்கிற தண்ணிக்கும், கம்மாய் வரைக்கும் போகணும். வீட்டு வேலை எல்லாம் ஆச்சிதான் பாக்கறாங்க. நாங்க இந்தச் சூழலுக்குப் பழகிட்டோம். ஆனா, அது உன்னால முடியுமா?'

'ஏன்! நான் மூணு மாசம் அங்கதானே இருந்தேன்? அட்ஜஸ்ட் பண்ணிக்கலியா?''

''பாரு... இப்பக் கூட நீ அட்ஜஸ்ட்னு தான் சொல்ற! ஏன்னா, நீ வளர்ந்த சூழலே வேற. உன்னோட ரூமே, இந்த வீடு அளவு இருக்கு. அதுல இல்லாத வசதியேயில்ல. அப்படியிருக்கற உன்னை, என்னைக் காதலிச்சதுக்காக, கீழே வந்து கஷ்டப்படுன்னு சொல்ல... எனக்கு மனசு வரலடா.

உன்கிட்ட பேசின உடனே, நான் எழுந்து போனேனே! ஏன் தெரியுமா? ஒரு நிமிஷம் கூட, என்னோட ஆசை... என் அறிவை மறைச்சுடக் கூடாதுன்னு தான். அதுவும் நீ ஊருக்குப் போகும்போது, என்னை ஒரு பார்வை பாத்தியே... அது என்னை மொத்தமா உலுக்கிடுச்சு. அதுக்கு மேல அங்க இருந்தா, என்னோட கொள்கையையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு உன்னைத் தடுத்திருப்பேன்! அதனால தான், நான் நீ கிளம்பும்போது கூட உன்னை வழியனுப்பல. ஐயம் ஸாரிடா!'

''அன்னிக்கு உனக்கு அது எவ்வளவு தூரம் வலிச்சதோ, அதே அளவுக்கு எனக்கும் வலிச்சது!' என்று சொன்னவன், அன்றைய வலியை இன்றும் உணர்ந்தவனாக தான்யாவை கையைப் பிடித்து அருகே இழுத்து, இறுக அணைத்துக் கொள்ள, இருவருமே அந்த நெருக்கத்தில் ஆறுதலடைந்தனர்.

சற்று நேரம் கழித்துத் தன் பேச்சைத் தொடர்ந்தவன், 'ஆனால், அந்த வலிதான்.. என்னை

வெறித்தனமா உழைக்க வெச்சது. என் கொள்கையையும் விடக்கூடாது... உன்னையும் இழக்கக்கூடாதுன்னா நான் என் வருமானத்தை அதிகமாக்கணும்... அதுக்கான வழியைத் தேடணும்னு கிளம்பினேன்.

இதுக்கு முன்னாடி மாநாடு, கூட்டம்னு பொழுதைக் கழிச்சேனே தவிர, என்னோட திறமையை, எனக்காக நான் பயன்படுத்தல. எனக்குத் தெரிஞ்ச காண்டக்ட்ஸை வெச்சு, கன்ஸல்டன்ஸிக்கு ட்ரை பண்ணினேன். அதுல ஓரளவு நான் சக்சஸ் ஆன பிறகு தான், உன்னை வந்து பார்க்கணும்னு நெனச்சேன். அதனாலதான் உன்ன வந்து பார்க்க ரெண்டு மாசம் ஆச்சு!' என்றவன், அவள் முகத்தை நிமிர்த்தி, ''இப்ப, என் மேல் உனக்கிருந்த கோபம் போச்சா?'' என்று அவள் கண்களைப் பார்த்தவாறே கேட்டான்.

**பெரும்பானான இன்றைய காதல் திருமணங்கள், அன்பைவிட ஆசையை அடிப்படையாக வைத்து இருப்பதனால் தானே, அந்த ஆசை தீர்ந்தவுடனே திருமணம் முறிந்து விடுகிறது!** பூமிநாதனும் இந்த ஆசைகள் எல்லாம் உடைய இளைஞன் தான் என்பதை அவளும் தான் திருமணமான நாளிலிருந்து பார்க்கிறாளே!

ஆனால், பூமிநாதன் இந்த ஆசையை விட இருவருடைய அன்பும் நெடுநாட்கள் நீடிப்பதற்கான வழியை யோசித்திருப்பதிலேயே, அவனுடைய அன்பு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறதே!

கண்களில் காதல் வழிய குறும்புடன் அவனைப்

பார்த்தவள், இரு கைகளையும் பரபரவெனத் தேய்த்தபடி, ‘இல்லையே! இன்னும் அதிகமாயிடுச்சு! அதனால அடுத்த அதிரடித் தாக்குதல்ல இறங்கறதாயிருக்கேன்!’’ என்றவள், அவனது சட்டைக் காலரை இரு கைகளாலும் பிடித்து இழுத்தபோது, பூமிநாதன் ஒன்றும் அதற்காக பயந்தவனாகத் தெரியவில்லை.

அதை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போலவே இருந்தது. அதன் பிறகு அந்தத் தாக்குதல் வெகு நேரம் நீடித்தது.

வெகுநேரம் கழித்தே பேசிய பூமிநாதன், ‘‘ஆனாலும் நான் மாமாவை ரொம்ப அட்மயர் பண்றேன் தெரியுமா! அவரு முதல் தடவை உன்னை இங்க அனுப்பும்போதே, நாமெல்லாம் ரிலேட்டிவ்ஸ்னு அவருக்குத் தெரிஞ்சிடுச்சு. அவர் நினைச்சிருந்தா, இன்றைய ஸ்டேட்டஸ்க்கு நேராவே வந்து சொல்லி இருக்கலாம்.

ஆனாலும், அவரோட உள்மனசுல ஒரு உறுத்தல் இருந்திருக்கு! ‘இந்த வீட்டுப் பொண்ணைக் கூட்டிட்டுப் போய், இந்த வீட்டுல இருந்த பலரோட இழப்புக்குக் காரணமா இருந்துட்டோம்’ என்ற உறுத்தல்.

அதனால, எதையும் சொல்லாம உன்னைக் கொண்டு வந்து இங்க விட்டுட்டு, இந்த விஷயம் தானா வெளிய வர்ற வரைக்கும் காத்திருந்து, ஆச்சி கூப்பிட்ட பிறகுதான் வந்தாரு. ஆச்சி அவர்களை மனப்பூர்வமா ஏத்துக்கணும்னு மட்டுமே ஆசைப்பட்டாரு.

அதன் பிறகும், நம்ம ரெண்டு பேருக்கும் நடுவுல

என்னவோ போயிட்டிருக்குன்னு புரிஞ்சாலும், என்னை எதுவும் கேட்கல. உன்னை ஏதாவது கேட்டாரா?' என்று கேட்க 'இல்லை' என்பது போல தலையசைத்தாள்.

''தனக்குத் தான் எல்லாம் தெரியும்னு மூக்கை நுழைச்சு அட்வைஸ் பண்ணாம, இது நம்ம ரெண்டு பேர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம்னு... நம்ம உணர்வுகளுக்கு மதிப்புக் குடுத்து, விலகியிருந்து பாத்துட்டு இருந்தாரு.''

அவன் சொல்லும்போதே தான்யா குறுக்கிட்டு, 'ஆமா! நா இங்கயிருந்து போன புதுசுல, ரொம்ப அப்செட்டா இருந்தேன். அப்பல்லாம், அப்பா தான் என்னை டைவர்ட் பண்றதுக்காக ஏதாவது பண்ணிட்டே இருப்பார்.

அம்மா எனக்குக் கல்யாணம் செய்யணும்னு வற்புறுத்தினபோது கூட, என் மனசு உங்க பக்கம் இருக்கறதை புரிஞ்சுகிட்டு... எனக்காக சப்போர்ட் பண்ணி, என்னை வேலையில சேர்த்து விட்டாரு.

ஆனா, எனக்கும் அன்னாவுக்கும் மட்டுமில்ல, அம்மாவுக்கும் அப்பாதான் பில்லர் ஆப் சப்போர்ட். எப்பவுமே, நாங்க என்ன நினைக்கிறோம்னு புரிஞ்சுகிட்டு, ஒருவேளை அது தப்பாயிருந்தா மட்டும்... ரொம்ப மென்மையா எங்களை மாத்துவாரு. ஒரு வேளை, அது கூட நாங்க ரெண்டு பேரும் ஸ்பாயில்ட் சில்ரனா இல்லாம இருக்கக் காரணமாயிருக்கலாம்.''

''ஆனா, உங்கப்பாவுக்கும் பொறுமை போயிடுச்சு தெரியுமா?''

“அப்படியா? என்ன ஆச்சு?”

“நான் என்ன பண்ணிட்டிருக்கேன்னு, என்னை ட்ராக் பண்ணிட்டே இருந்தாரு. நான் எங்கெல்லாம் போறேன்? யாரைப் பாக்கறேன்? எதுக்கு? எல்லாம் அவருக்குத் தெரியும். இன்ஃபாக்ட் நான் மும்பை போனபோது, அவர் ஏற்கெனவே என்னை எதிர்பாத்துட்டு இருந்த மாதிரி இருந்தது.”

“இதெல்லாம், உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“அவருக்கு இரண்டு சோடாக் கடைக்காரனைத் தெரியும்னா, எனக்கு ஒரு பீடாக் கடைக்காரனைக் கூடவா தெரியாமப் போயிடும்? அவரு என்னப் பத்தி விசாரிக்கச் சொன்னதை, வேற ஒரு நண்பர் மூலமா தெரிஞ்சுகிட்டேன்.”

“ம்...”

“அவர் லேசுல, என்னை உன்னைப் பாக்க விடலியே! இருடா தம்பி, இத்தனை நாளா என் பொண்ண அழ வெச்ச இல்ல! இப்ப என் டர்ன்! என் செல்லப் பொண்ணுக்குக் கோபப்படக்கூடத் தெரியாது. அதனால நானே உன்னை ஓட்டி விடறேன்னு, என்னைச் செமையா ராக் பண்ணாரு. நான் என் முடிவுல உறுதியாயிருக்கேன்னு தெரிஞ்ச பிறகுதான், உன்னப் பாக்கவே விட்டாரு.”

“அப்படியா?”

“ஆனா, நான் அவரை அட்மயர் பண்றது, இன்னொரு விஷயத்துக்காக. அவர் நினைச்சிருந்தா... நம்ப கல்யாணம், இந்த ஹனிமூன்ற எல்லாத்துலயும்,

தன் பணபலத்தைக் காமிச்சிருக்கலாம். இந்த உலகத்தில என் பொண்ணு பாக்காத இடமேயில்ல...

இது என்ன பிசாத்து ஊட்டிக்குன்னு, உன்னை வேற இடத்துக்குக் கூட்டிட்டு போகச் சொல்லி என்னை வற்புறுத்தல. என்னை, என்னோட ஈகோவை மதிச்சதுக்காகத் தான், எனக்கு அவர் மேல ரொம்ப மரியாதை!''

''தேங்க்ஸ்.''

''ஆனா தான்யா! நாம இன்னொரு தடவை ஹனிமூனுக்கு வெளிநாட்டுக்குப் போவோம். இப்பயில்ல, இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு நீ என்னையும், நான் உன்னையும்... இன்னும் நல்லா தெரிஞ்சுகிட்ட பிறகு! இப்ப நம்மளைப் பத்தி முதல்ல தெரிஞ்சிப்போமோ?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டபடி, தான்யாவின் கன்னத்தைத் தன் உதடுகளால் உரசினான்.

''எனக்கு ஊட்டியே ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றபடி, அவனை இறுக்கிக் கொண்டாள் தான்யா.

# 24

இருவரும் ஹனிமூனிலிருந்து திரும்பி சின்ன மாங்குடிக்கு வந்தபோது வீட்டில் ஏகப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

அவர்கள் அறையில் அட்டாச்ட் பாத்ரூம், ஏசி, கரண்ட் போனால் கூட மாற்றாக சோலார் இன்வட்டர்,

அருகில் இன்னொரு அறை, சமையலறை வரை தண்ணீர் பைப் வசதி, சமையலறையில் மாடுலர் கிச்சன், என ஏகப்பட்ட மாற்றங்கள்.வீடே பெயின்ட் செய்யப்பட்டு, புத்தம் புதிதாக இருந்தது. ஆச்சியின் அறையிலும் எல்லா வசதிகளும் இருந்தன. அவர்கள் வந்த இரண்டு நாட்களிலேயே, பூமிநாதன் புதிய ஸில்வர் கிரே நிறத்திலான ஆல்டோ காரை ஓட்டி வந்தான்.

அவன் தன் வசதிக்காகச் செலவு செய்யும் வேகத்தைப் பார்த்து, நிறையக் கடன் வாங்கியிருக்கப் போகிறானோ என்ற கவலை வந்துவிட, அவனிடமே கேட்டுவிட்டாள். ஆம்! அவளும் இப்போது பொறுப்பான ஒரு இல்லத்தரசி ஆயிற்றே!

'தான்யா! நான் முன்னாடியே உன் கிட்டச் சொல்லியிருக்கேன். எனக்குன்னு சில கோட்பாடுகள் இருக்கு. ரொம்ப வசதியான உன்னைக் கல்யாணம் பண்ணிட்டு, உங்கப்பா வீட்ல போய்... இதை வாங்கிட்டு வா! அதை வாங்கிட்டு வா!' என்று சொல்றது எனக்குப் பிடிக்காது.அதே மாதிரி, என் மனைவியும், 'எங்கப்பா கிட்ட இதை வாங்கலாம்! அந்த வசதியைச் செஞ்சுக்கலாம்னு சொல்றதும் பிடிக்காது. அதுக்காக, என்னை விரும்பின ஒரே காரணத்துக்காக நீ கஷ்டப்படறதையும், என்னால தாங்க முடியாது.

சின்னச் சின்ன விஷயங்கள், நம்முடைய அன்பை என்னைக்கும் அழிக்கக்கூடாது. 'இஷ்டப்பட்டுச் சேர்ந்து, இருவரும் கஷ்டப்படுவது தான் காதல்' என்ற வரிகளில், எனக்கு உடன்பாடு இல்லை.

''பெண்கள்தான் பொஸஸிவ்னு இல்லை. ஆண்களும் பொஸஸிவ்தான். எல்லாப் பெண்களும் தன் கணவன் அடுத்த பெண்ணைப் பார்க்கக் கூடாதுன்னு நினைப்பாங்க. ஆனா ஆண்கள், தன்னோட மனைவி... அப்பா அம்மாவை விட, தன்னைத்தான் முக்கியமா நினைக்கணும்னு எதிர்பார்ப்பாங்க.

ஆனா, இதைப் புரிஞ்சிக்காத நிறைய லேடிஸ், 'எங்க டாடி வீட்ல இது வசதி! எங்க அப்பா அப்படி வசதியா வெச்சுப்பாரு தெரியுமான்னு சொல்லும் போதே, அங்கே ஹஸ்பெண்டோட ஈகோ அடி வாங்குது. அது புரியாம மனைவி இப்படிப் பேசும் போது, அங்கே விரிசல் விழுது. அதுக்காக, கணவன் எந்த முயற்சியும் எடுக்காமல் இதை எதிர்பார்க்க முடியாது.

என்னால உனக்கு, இப்ப விலை உயர்ந்த கார் வாங்கித் தர முடியாது. ஆனா ஆல்டோ கார் வாங்கித் தர முடியும். உங்க வீட்டுல இருக்கற உன்னோட ரூம் அளவிற்கு, வசதிகள் செய்ய முடியாது. ஆனா அடிப்படை வசதிகளைச் செய்துதர முடியும்.

இதுக்கெல்லாம் பணம் வேணும்னு தான், நான் ரெண்டு ஏக்கர் நிலத்தை மட்டும் உனக்கு கிஃப்ட் பண்ணினேன். இல்லன்னா, நாப்பது ஏக்கர் நிலத்தையும், நானே வாங்கியிருப்பேன்டா! ஆனா, கொஞ்ச நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. அப்புறம் இன்னும் எல்லாமே பெட்டரா பண்ணிடலாம் சரியா?' என்று, அவள் கன்னத்தைத் தடவியபடியே கேட்டான் பூமிநாதன்.

அவன் சொன்னதில் தனக்கான சேதியைப் புரிந்து

கொண்ட தான்யா, அவனை நெருங்கி அவன் இடுப்பில் கை கோர்த்துக் கொண்டு ''எனக்கு பைக் தான் பிடிச்சிருக்கு! அதுல போனால் தான், இப்படி நெருக்கமா போகலாம். கார் ஒரே போர்.

நீங்க பாத்ரூம் கட்டினது கூட எனக்குப் பிடிக்கல. அங்கன்னா, நீங்க எனக்குன்னு கிணத்துல தண்ணி இறைச்சுத் தருவீங்க. இதுவும் போர் தானே?'' என்று சிணுங்கினாள்.

''நீ கவலைப்படாதே! நாம ரெண்டு பேர் மட்டும் போனா, பைக்தான்! பேமிலியா வெளிய போகும்போது தான் கார். இப்ப என்ன... கிணத்துல தண்ணி எடுக்கலைன்னா என்ன? அதுக்குப் பதிலா, உனக்கு முதுகு தேச்சு விடறேன்'' என்று கண்சிமிட்டினான்.

'ஓ! சாருக்கு இப்படில்லாம் வேற ஐடியாயிருக்கா?' என்ற தான்யா, அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

'இன்னும் நிறைய ஐடியா இருக்கு! மேடம் ஒத்துக்கிட்டா சொல்லுவேன்... சொல்லவா?' என்று காதில் கிசுகிசுத்தான் பூமிநாதன்.

ஆச்சியைக் கொண்டு வந்து விடுவதற்காக, கூடவே பலராம் குடும்பத்தினரும் வந்திருந்தனர். சிகப்பியை உதவிக்கு வைத்துக் கொண்டு, தான்யாவே விருந்து சமைத்து அசத்தினாள். பூமிநாதன் இப்போது வீட்டு வேலையோடு சமையலுக்கும் உதவி செய்ய, சிகப்பியை அமர்த்தியிருந்தான்.

இருவருமாக பேசி வைத்துக் கொண்டு, அவளுக்கான இரண்டு ஏக்கர் நிலத்தில் பல்வேறு

மூலிகைச் செடிகளை நட்டனர். அவற்றில் அபூர்வமான பல மூலிகைச் செடிகளும் இருந்தன. தான்யா அவற்றை எப்படிப் பயனுள்ளதாக மாற்றுவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. முதலில் மூலிகைத் தோட்டத்தை முழுமையாக அமைத்துவிட்டு, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்திருந்தாள்.

பூமிநாதன் வாரத்தில் ஓரிரு நாட்கள் இவன் பொறுப்பேற்றிருந்த ஆர்கனிக் பண்ணையின் நிலங்களைப் பார்வையிட்டு வர, வெளியூர் சென்று வந்தான். அவனுடைய நிலத்தில் இப்போது லாபம் தரும் குறு தானியங்களைப் பயிரிட்டான். அவற்றுக்குச் சொட்டு நீர்ப் பாசனம் மட்டுமே போதுமானதாக இருந்தது. நடு நடுவே குறைந்த நீர் தேவைப்படும் பப்பாளி, பேரிச்சம் மரங்களை நட்டதில் அவையும் நல்ல பலன்களைக் கொடுத்தன.

ஆச்சியைக் கொண்டு விட வந்த பெற்றோர் இருவரும், தங்கள் மகள் பொறுப்பாகக் குடும்பம் நடத்துவதைப் பார்த்து அசந்து விட்டனர். இரண்டு மாதங்கள் வரையில், இருவரும் தனியாக இருக்கட்டும் என்று மூவரும் முடிவு செய்திருந்தனர்.

ராஜக்ஷ்மிக்கு, ஆச்சியை உடனடியாக ஊருக்கு அனுப்புவதில் விருப்பமில்லை. அன்னாவோ, பூமிநாதன் தான்யாவின் பின்னாலேயே செல்வதையும், தமக்கை சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவதையும் பார்த்து, அவனை கலாய்த்தாள்.

''இங்க, உடம்புக்கே கஞ்சி போட்டு விறைப்பா

நின்ன பூமிநாதன்னு ஒரு கெத்தான ஆளை... காணுமே மாமா! கல்யாணம் ஆன உடனே, அவரு காணாம போயிட்டாரா?''

''ஆமா! பாஸ் வந்தா, கீழே வேல செய்யறவங்க எல்லாம், பவ்யமா தானே இருக்கணும் அன்னா? இப்ப உங்கப்பாவையே எடுத்துக்க... வெளிய பெரிய ஆளாயிருந்தாலும், அத்தையோட ஒரு கண் ஜாடையிலேயே... அப்படியே அடங்கிடல?''

அதைக் கேட்டுச் சிரித்தபடி, ''அட! உங்க பேச்சுல என்னை ஏம்பா வம்புக்கு இழுக்கறீங்க? அப்புறம், என் பாஸ் கோச்சுக்கப் போறாங்க!' என்று ராஜலக்ஷ்மியைக் கைக்காட்ட, அங்கே சிரிப்பலையொன்று எழுந்தது. பலராம் சிரிப்பும் பேச்சுமாக இருந்தாலும், தான் வந்த வேலையில் கவனமாக இருந்தார்.

''மாப்பிள்ளை! நான் இப்ப வந்தது, முக்கியமான ரெண்டு வேலைகளுக்காகத் தான். நீங்க ஹனிமூன்லாம் போய் வந்து, ரொட்டீன் லைப்ல செட்டிலான பிறகு பேசலாம்னுதான், இது வரைக்கும் ஒத்திப் போட்டேன்.

என் பொண்ணு அவளே ஆசைப்பட்டுக் கேட்டது, நாற்பது ஏக்கர் பண்ணை நிலம் தான். அதை நான், முன்னாடியே வாங்கிக் கொடுத்திருப்பேன். ஆனா, அவ மனசு வேற விஷயத்துல திரும்பினதுனால, நிறுத்தி வெச்சிருந்தேன். இப்ப நல்லபடியா உங்களோட கல்யாணமும் முடிஞ்சிடுச்சு. நீங்களே உங்க நிலத்துக்குப் பக்கத்துல பாத்தீங்கன்னா, மேனேஜ் பண்ண வசதியாச்சே? நீங்களே பாக்கறீங்களா?''

பூமிநாதன் அவர் சொல்வதைக் கேட்டு தான்யாவின் முகத்தைப் பார்க்க, அவள் எதுவும் பேசாமல், அவன் என்ன சொல்கிறான் என்பதுபோல், அவனைப் பார்த்தபடியிருந்தாள். அவளுக்குத் தான், பூமிநாதன் தீவிரமாக நினைக்கும் கொள்கைகள் அனைத்தும் தெளிவாகத் தெரியுமே! ஆனாலும், தந்தையின் மனதையும் நோகடிக்கக் கூடாது என்று நினைத்தாள்.

''மாமா! இதுல என்னைக் கேக்கறதுக்கு என்ன இருக்கு? நீங்க என்னைப் பாருன்னா சொன்னா, பார்க்கப் போறேன். இப்ப நான் தான்யாவுக்கு வாங்கின நிலத்துக்குப் பக்கத்திலயே, நிலம் விலைக்கு வருது மாமா. அங்க, தான்யா விரும்பற மூலிகைத் தோட்டத்தை அமைச்சி, நீங்க ரெண்டு பேரும் பார்ட்னரா இருந்து நடத்துங்க! நான் சூப்பர்வைஸ் பண்றேன்.'

அவருடைய கேள்விக்கு, அவரது மனதையும் புண்படுத்தாமல், அதே நேரத்தில் தன் கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல், பதில் சொன்னான் பூமிநாதன்.

'தன்மானமுடைய மாப்பிள்ளை இதையாவது ஒத்துக் கொண்டாரே! விட்டுப் பிடிக்கலாம்' என்று முடிவு செய்தவர், அடுத்த விஷயத்தை ஆரம்பித்தார்.

'நான் முன்ன சொன்ன ஒரு கோடி ரூபாயையும், இப்ப உங்க கிட்டத் தந்துடறேன். நீங்க இங்க என்னென்ன செஞ்சா ஊருக்கு உபயோகமா இருக்குமோ, அதைப் பாத்துக்கங்க. தான்யா கூட, அன்னிக்குச் சில

யோசனைகளைச் சொன்னாளே! அதுல கூட, எதெல்லாம் அவசியம் தேவைன்னு பாருங்க! முக்கியமான திட்டங்களுக்கு பணம் பத்தலைன்னா சொல்லுங்க... மேல நான் குடுக்கறேன்.'

'சரி மாமா! உடனே, அதையும் ஆரம்பிச்சிடலாம்'' என்று பூமிநாதன் ஒத்துக் கொண்டான்.

தான்யா முன்பே ஒருமுறை அவனிடம் சொல்லியிருந்தது, ஞாபகம் வந்தது. 'நீங்க நம்மளோட பேமிலி லைப் பாதிக்கப்படக் கூடாதுன்னு நினைக்கறது, எனக்குப் புரியுது. ஆனா, அதுக்காக நீங்க உங்களை மாத்திக்கணும்னு அவசியமில்ல. இன்பாக்ட், நான் உங்களை விரும்பினதுக்குக் காரணமே, நீங்க சுயநலமா உங்களைப் பத்தியும், உங்க வளர்ச்சியைப் பத்தியும் மட்டுமே யோசிக்காம... ஊருக்கும் உபயோகமா இருக்கணும்னு நினைக்கறது தான்!

நீங்க இப்ப முடிவெடுத்த மாதிரி, உங்க வருமானத்தை அதிகமாக்குங்க. அதுல ஒரு பங்கை, நாம எப்பவும் போல ஊருக்காகச் செலவு செய்வோம். ஓகேயா?' என்று கேட்டு, அதற்குப் பதிலாக அவனிடமிருந்து பாராட்டையும் வாங்கியிருந்தாள்.

அதனால், ஒரு கோடி ரூபாய்க்கான திட்டம் உற்சாகமாக நடந்தது. ஊரில் இருந்த ஒரே பள்ளியின் கட்டிடம் சரி செய்யப்பட்டு, பிள்ளைகள் படிப்பதற்காக புதிய மேஜை நாற்காலிகளை வாங்கினர். மேலும் நான்கு கழிப்பறைகளையும் கட்டினர். சாலைகளிலும், பள்ளியிலும் மற்றும் கிராமத்தின் முக்கியமான

இடங்களிலும், சோலார் மின் விளக்குகளை அமைத்தனர். டாக்டர் ஒருவர் தினமும் வந்து அவசர சிகிச்சை செய்யும் அளவிற்கு ஏற்பாடுகள் செய்தனர்.

# 25

ஆறு மாதங்கள் கழித்து அவள் கருவுற்ற போது, பூமிநாதன் அக்கறையுடன் பார்த்துக் கொண்டான். வெளியூர் வேலையாக இருந்தாலும், இரவுக்குள் வீட்டுக்கு வந்து விடுவான். ஏழு மாதம் ஆனதும் ராஜலக்ஷ்மி சீமந்தத்தை முடித்துவிட்டு, பிரசவத்திற்காக மும்பைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றார்.

தான்யாவோ, பூமிநாதன் என்ன சொல்லப் போகிறான் என்று அவன் முகத்தைப் பார்த்தாள். அவனோ, ராஜலக்ஷ்மி சொன்னதற்கு ஒத்துக் கொண்டதோடு, தான்யாவிற்கும் விளக்கமளித்தான்.

'தான்யா! எனக்குக் கொள்கைகள் உண்டே தவிர, பிடிவாதம் கிடையாது. இங்கே, இந்த ஊரில் இருந்தால், ஒரு அவசரத்திற்கு புதுக்கோட்டைக்குத் தான் போகவேண்டும். இங்க எல்லோரும் அப்படிச் செய்தாலும், வசதியிருக்கும்போது நீ ஏன் கஷ்டப்படணும்? அதுவுமில்லாம, உனக்கு இப்போ அம்மா கூட இருந்தா நல்லாயிருக்கும்னு, தோணும் தானே? நீ இப்பச் சந்தோஷமாயிருக்கணும். அதனால, எனக்குக் கஷ்டமாயிருந்தாலும், நீ போயிட்டு வா

தான்யா. நான் அடிக்கடி வந்து, உன்னைப் பாக்கறேன். டெலிவரியின் போது, நான் கண்டிப்பா அங்க உன் கூட இருக்கேன்.'

சொன்னது போலவே, பிரசவத்தின்போது அவளுடனேயே இருந்தான். பலராம் ஒரு புகழ் பெற்ற மருத்துவமனையில் தான்யாவைச் சேர்த்திருந்தார். அவளுக்கு அழகான ஒரு பையன் பிறந்தான். அவனுக்கு 'திவாகர்' என்று பெயர் வைத்தனர்.

குழந்தை பிறந்து ஐந்து மாதம் ஆன பிறகு, ஏகப்பட்ட சீர் வரிசையுடன் மகளையும், பேரனையும் பூமிநாதனிடம் கொண்டு வந்து விட்டார் ராஜலக்ஷ்மி. அவர்களை அழைத்துவர பூமி நாதனே அவனுடைய புதிய 'ஸ்விப்ட் டிசையர்' காரை எடுத்துச் சென்றிருந்தான். தானே காரை ஓட்டிக் கொண்டு, அவர்களை ஊருக்கு அழைத்து வந்தான்.

ராஜலக்ஷ்மி இரண்டு நாட்கள் தங்கிவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டார். தான்யா, குழந்தையைத் தானே பார்த்துக் கொள்ளப் பழகியிருந்தாள். ஆச்சிக்கு வயதானாலும், அவருடைய அனுபவம் அவளுக்கு உதவியாக இருந்தது.

இப்போதெல்லாம், ஆச்சியை வேலை செய்யவே விடுவதில்லை அவள். ஊரிலிருந்து வந்த குழந்தை இந்தச் சூழ்நிலைக்குப் பழகிய பிறகு, அவளும் காலையில் பூமிநாதனோடு தோட்டத்தைப் பார்க்கப் போய்விடுவாள்.

பத்து மணிக்கு வந்து சிகப்பியை உதவிக்கு

வைத்துக் கொண்டு சமைத்து விடுவாள். மாலையில் சிறிது நேரம் மீண்டும் தோட்டத்திற்குச் செல்பவள், பிறகு இரவு உணவுக்கான தயாரிப்பில் இறங்கி விடுவாள். இரவில் குழந்தை அழுதால், பூமிநாதன் அதற்கு உடை மாற்றி சுத்தம் செய்து, தோளில் தட்டி தூங்க வைத்தான். குழந்தை பசியால் அழுதால் மட்டுமே, தான்யாவை எழுப்புவான்.

தான்யாவும் ஊரிலிருந்து வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. வீட்டு வேலையோடு தான்யா தோட்டத்திற்குப் போகும் நேரங்களில், ஆச்சியின் மேற்பார்வையில், குழந்தையைச் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டாள் சிகப்பி.

அன்று பூமிநாதன் ஒரு வார வெளியூர்ப் பயணத்திற்குப் பிறகு ஊரிலிருந்து வந்தான். இரவு அவன் வீட்டுக்கு வந்த போது, ஆச்சி தான் கதவைத் திறந்தார்.

'தான்யா எங்க ஆச்சி?''

''மேல புள்ளையை தூங்க வெச்சிட்டு இருக்காப்பா. நீ இப்பப் போனியினா அவன் முழிச்சுகிட்டா... பொறவு தூங்கமாட்டான்! உன்னை இங்கயே சாப்பிட்டுட்டு, பொறவு மேல வரச் சொன்னா. அதுக்குள்ள புள்ள தூங்கிடுமாம்!' என்று சொன்னபடி ஆச்சி சமையலறைக்குச் செல்ல, பூமிநாதன் அவர் பின்னால் சென்று சாப்பிட்டான். பின்பு பூமிநாதன் படியேறி மேலே சென்றபோது தான்யா குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

குழந்தை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.

'தான்யா!'' என்று பூமிநாதன் அன்புடன் அழைக்க, தொட்டிலின் அருகே குனிந்தபடி இருந்த தான்யா, நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அதில் தெரிந்த கனிவைக் கண்டவள், எதுவும் பேசாமல் அவனருகில் வந்து அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''என்னடா?'' என்று கேட்டு மேலும் பூமிநாதன் பேசத் தொடங்கு முன், ''ஐ மிஸ்ட் யூ எ லாட்! நீங்க என்னை மிஸ் பண்ணலியா?'' என்று நிமிர்ந்து ஏக்கமாகக் கேட்டாள் அவள்.

'அதெப்படிடா உங்களை மிஸ் பண்ணாம இருப்பேன்? ஊருல கூட, நீயும் திவாவும்தான் என் நினைவுல எப்பவும் இருந்தீங்க. எப்படா ஊருக்குப் போவோம்னு ஆயிடுச்சுன்னா... பாத்துக்கோயேன். வெறித்தனமா வேலை செஞ்சுட்டு, ஓடி வந்திருக்கேன். இல்லன்னா, இன்னும் ஒரு வாரம் போயிருக்கும்!' என்றபடி அவள் கன்னத்தைத் தடவினான்.

அவள் தலையை மறுப்பாக அசைத்து, ''நான் அதைக் கேக்கல; நானும், நீங்களும் மட்டுமே இருந்த அந்த உலகத்தை மிஸ் பண்ணினீங்களான்னு தான் கேட்டேன். நான் ஊருக்குப் போய் ஆறு மாசமாச்சு. திரும்பி வந்ததும் குழந்தை, ரொட்டீன் லைப்னு, வந்ததுலயிருந்து நம்ம லைஃப் ரொம்பப் பிஸியா போகுது. இதுல, நமக்கு மட்டுமேன்னு இருந்த அந்த நேரங்களை பார்க்கவே முடியலியே! இப்ப ஒரு வாரமா, நீங்க ஊருக்குப் போனதும்... எனக்கு அந்த ஏக்கம்

இன்னும் அதிகமாயிடுச்சு!'' சொல்லும் போதே அவள் அவனை இன்னும் நெருங்கி நின்று கொண்டாள்.

பூமிநாதனும் அதை உணர்ந்து தானே இருந்தான்? தான்யாவிற்கும், அவனுக்கும் நாள் முழுவதும் பல வேலைகள். நிதானமாக உட்கார்ந்து பேசக் கூட நேரம் இல்லாமல் ஓட்டம். ஆனால், இவற்றையும் செய்து தானே ஆகவேண்டும்? அதேநேரத்தில், எல்லாவற்றிற்கும் அதற்கான அளவில் தானே முக்கியத்துவம் தர வேண்டும்?

மனைவியை வசதியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்துகொண்டு... கடைசியில் அவளிடமே நின்று பேசக்கூட நேரமில்லாமல் ஓடுவதால், என்ன பயன்? இது யோசிக்க வேண்டிய விஷயம் என்று முடிவு செய்தவன், முதலில் இப்போது கிடைத்த நேரத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்வோம் என்பதால், கவனத்தை அதில் செலுத்தினான்.

தான்யாவின் நெற்றியில் முத்தமொன்றைப் பதித்தவன், ''எப்படிடா உன்னை மிஸ் பண்ணாம இருப்பேன்? என்னோட டிரைவிங் ஃபோர்ஸே நீ தானே? முன்னாடி நீ டெலிவரிக்கு ஊருக்குப் போகும் போதும், உன்னை ரொம்ப மிஸ் பண்ணேன். அப்புறம், பாப்பா வளர்ற வரைக்கும் நீ அங்க இருந்த போதும்... ரொம்பக் கஷ்டம் தான்.

ஆனா, பாப்பாவை சீக்கிரம் இங்க கூட்டிட்டு வந்து நம்மால சமாளிக்க முடியலைன்னா, கஷ்டமில்லையா


தான்யா? இதெல்லாம், நாம நம்ம குடும்பத்துக்காகச் செய்ய வேண்டிய கடமைகள். இனி, கொஞ்சம் ப்ளான் பண்ணி, நமக்காகவும் கொஞ்சம் டைம் ஒதுக்கிப்போம் சரியா?' என்று சொன்னவன், அவளை ஜாலி மூடுக்கு மாற்றுவதற்காக, ''என்னடா? இப்பல்லாம் உன்கிட்டயிருந்த அட்டாக் எதுவுமில்லை?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டான்.

''பின்ன எதுக்காக, உங்களை வரும்போதே சாப்பிட்டு அனுப்பச் சொல்லி, ஆச்சிகிட்டச் சொல்லி வெச்சேன்? நீங்க ரூமுக்கு வந்தா திரும்பிப் போக முடியாது. அப்புறம், சாப்பிடலைன்னா உங்களுக்குத் தூக்கம் வராது. அதனாலதான், இந்தத் தடவை அட்டாக் பண்ணினா உங்களை லேசுல விடறதாயில்லை!'' என்று கண்சிமிட்டியபடி அவனது சட்டைக் காலரைப் பற்றி அருகே இழுத்தபோது, பூமிநாதன் ஆர்வமாகவே அட்டாக்கை எதிர்பார்த்தான்.

திருமண வாழ்வின் அடிப்படைத் தேவையான அன்பும், பரஸ்பர புரிதல் உணர்வும், அவர்கள் இருவருக்கும் நிறைந்திருக்கும் போது, ஆனந்தத்திற்குக் கேட்பானேன்!

இந்தப் பூமியோடு, நிலா போன்ற தான்யா சேர்ந்ததை, அந்தப் பூமியும், வானத்து நிலவும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தன.

சுபம்



பூமிக்கு வந்த
நிலவே
நீலா மணி
சுபம் வெளியீடு